# சுயமாக வழக்காடும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கான

## வழிகாட்டி புத்தகம்

உங்களை நீதிமன்றத்தில் சுயமாகப் பிரதிநிதித்துக்கொள்வதற்கான ஒரு வழிகாட்டி



# முன்னுரை

நம் நீதிமன்றப் பயனர்கள் அனைவருக்கும் நீதியைச் சென்றடைவதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதிலும் அந்நீதியைச் சரிசமமாகப் பெறுவதிலும் அரசு நீதிமன்றங்கள் ஆழ்ந்த கடப்பாடு கொண்டுள்ளன. இதன் தொடர்பில், குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் திறம்படச் சுயமாக வழக்காடுவதற்குக் குற்றவியல் நீதி முறையைப் பற்றிய அறிவும் புரிதலும் முக்கியமானவையாக அமைகின்றன. குற்றவியல் நீதிமுறையில் முக்கியத் தகவல்களை எளிதில் தேடிக் கண்டுபிடிக்க குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு உதவி செய்வதன் மூலம், அவர்கள் சுலபமாக நீதியை அணுகும் ஆற்றல் மேம்படுகிறது.

சுயமாக வழக்காடும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு ஆற்றலளிக்க குற்றவியல் நடைமுறை மற்றும் நீதிமன்ற செயல்முறைகளைப் பற்றிய நடைமுறைக்கு ஏற்ற உகந்த தகவல்களை வழங்குவதற்காக, இந்த வழிகாட்டி புத்தகம் முதன் முதலில் 1 நவம்பர் 2017 அன்று சமூக நீதி நிலையத்துடன் **("CJC")** இணைந்து அரசு நீதிமன்றங்களால் வெளியிடப்பட்டது.

2018 குற்றவியல் நீதி சீர்திருத்த சட்டத்தினால் 2018-ல் கடுமையாக்கப்பட்ட குற்றவியல் நீதி செயல்முறைகளைப் பற்றியும் அரசு நீதிமன்றங்கள் இடம் மாறி அரசு நீதிமன்றக் கோபுரங்களுக்குச் சென்றதைப் பற்றியுமான ஆக அண்மைய தகவல்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள இவ்வழிகாட்டியின் இரண்டாம் பதிப்பு வெளியீட்டிற்கு, அரசு நீதிமன்றங்களும் **CJC**-யும் மீண்டும் இணைந்ததில் மகிழ்ச்சியடைகிறோம்.

இந்த வழிகாட்டி புத்தக வெளியீட்டில் சம்பந்தப்பட்ட அனைவரின் கடும் உழைப்பு, தளரா ஆதரவு மற்றும் ஊக்குவிப்பு ஆகியவற்றுக்கு என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**நீதிபதி வின்சன்ட் ஹூங்**
**தலைமை நீதிபதி, அரசு நீதிமன்றங்கள்**
**தலைவர், சமூக நீதி நிலையம்**

# முகவுரை

சட்டச் செயல்முறையைப் புரிந்துகொண்டு திசையறிந்து செல்ல சிரமமாக உள்ளது என்று சுயமாக வழக்காடும் குற்றஞ்சாட்டப்பட்டவர் பொதுவாகக் குறைபட்டுக்கொள்வதுண்டு. சுயமாக வழக்காடும் குற்றஞ்சாட்டப்பட்டவர் வழக்கு நடவடிக்கைகளின்போது எல்லா சந்தர்ப்பங்களிலும் தடுமாற்றமடையலாம். ஒரு வேளை நீதிமன்ற நடவடிக்கைகளின் உட்சிக்கல்கள் தனக்கு முன்னரே தெரிவிக்கப்பட்டிருந்தால், தான் இன்னும் சிறப்பான ஒரு தற்காப்பு வாதத்தை முன்வைத்திருக்கலாம் என்ற எண்ணம் சுயமாக வழக்காடும் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்குப் பல சந்தர்ப்பங்களில் தோன்றியிருக்கலாம்.

சுயமாக வழக்காடும் குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றவியல் நடவடிக்கைகளை மேலும் சிறப்பாகப் புரிந்துகொள்ள உதவி செய்து, இந்தக் குறைபாட்டை நிறைவு செய்வதை இந்த வழிகாட்டி புத்தகம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த வழிகாட்டி புத்தகத்தில், குற்றவியல் நடவடிக்கைகளின் ஒவ்வொரு கட்டத்துடன் தொடர்புடைய விரிவான தகவல்களைச் சுயமாக வழக்காடும் குற்றஞ்சாட்டப்பட்டவர் கண்டறிவர். இந்த வழிகாட்டி புத்தகம், வழக்கு நடவடிக்கைகளின் ஒவ்வொரு கட்டத்திலும் குற்றஞ்சாட்டப்பட்டவர் எதை எதிர்நோக்கலாம் என்பதையும், அதிமுக்கியமாக, வழக்கு நடவடிக்கைகளுக்கு அவர்கள் எவ்வாறு தயாராகலாம் என்பதையும் விளக்குகிறது. இதரத் தகவல்களான நீதிமன்ற நடையொழுங்கு விதிமுறைகள், சட்ட ஆலோசனையை எங்குப் பெறலாம் மற்றும் ஒருங்கிணைந்த வழக்கு நிர்வாக முறை போன்றவையும் இந்த வழிகாட்டியில் உள்ளடங்கும்.

சட்ட ஆலோசனைக்குப் பதிலாக அமையும் நோக்கம் இந்த வழிகாட்டிக்கு இல்லாத போதிலும், சுயமாக வழக்காடும் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர், அவர் உட்படுத்தப்படும் குற்றவியல் நடவடிக்கைகளைப் புரிந்துகொள்ளும் ஆற்றலை அவருக்கு வழங்க இது நம்பிக்கை கொண்டுள்ளது. சுயமாக வழக்காடும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு இந்த வழிகாட்டி புத்தகம் ஒரு மதிப்பில்லா வளமாக அமையும் என்று நான் நம்புகிறேன்.

**திரு ச்சியூ குவீ சான், மன்ற உறுப்பினர், டான் ச்சின் டுவான் அறநிறுவனம்**
**துணை தலைவர், சமூக நீதி நிலையம்**

# உள்ளடக்கம்


**அத்தியாயம் 1 - ஒரு மேலோட்டம்** **5**

(A) குற்றவியல் செயல்முறையின் ஒரு செயல்வழிப் படம் 6
(B) நான் இந்தப் புத்தகத்தை எவ்வாறு பயன்படுத்துவேன்? 7

**அத்தியாயம் 2 - சுயமாக வழக்காடும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கான அத்தியாவசிய தகவல்கள்** **9**

(A) நான் ஒரு வழக்கறிஞரை நியமிக்க வேண்டுமா? 10
(B) நான் எங்குச் சட்ட ஆலோசனை பெறலாம்? 11
(C) பயன்மிக்க சட்ட வளங்கள் 15
(D) குற்ற ஒப்புதல் அதற்கு மாறாக விசாரணை கோருதல் 15
(E) ஒத்திவைப்புகள் 17
(F) பிணை/சுய பிணை முறி 19
(G) நீதிமன்ற நடையொழுங்கு விதிமுறைகள் 26

**அத்தியாயம் 3 - அறிவிப்பு நீதிமன்றங்கள்** **29**

(A) தொடக்கவுரை 30
(B) குற்றவியல் அறிவிப்பு நீதிமன்றங்களில் நடவடிக்கைகள் 30
(C) இரவு நீதிமன்றங்கள் – ஒழுங்குமுறை சார்ந்த மற்றும் சிறு போக்குவரத்து குற்றச்செயல்கள் 34
(D) கடிதம் வழி குற்ற ஒப்புதல் 37

**அத்தியாயம் 4 - விசாரணைக்கு முந்திய கூட்டங்கள்** **39**

(A) விசாரணைக்கு முந்திய கூட்டம் (PTC) என்றால் என்ன? 41
(B) PTC-க்கு நான் எவ்வாறு தயார் செய்ய வேண்டும்? 41
(C) விசாரணையின்போது நான் என்ன எதிர்ப்பார்க்கலாம்? 41
(D) குற்றவியல் வழக்கு ஆவணங்கள் வெளிப்படுத்தல் கூட்டம் (CCDC) 42

**அத்தியாயம் 5 - வழக்கு விசாரணைகள்** **48**

(A) வழக்கு விசாரணை என்றால் என்ன? 49
(B) ஒரு வழக்கு விசாரணைக்கு நான் எவ்வாறு தயார் செய்வது? 50
(C) வழக்கு விசாரணையின்போது என்ன நடக்கும்? 53

**அத்தியாயம் 6 - தண்டனை விதிப்பு** **64**

(A) தண்டனை வகைகள் 65
(B) சமூக நீதிமன்றங்கள் மற்றும் சமூகம் சார்ந்த தண்டனைகள் 70
(C) தண்டனை விதிப்பு நடைமுறை 75
(D) நியூட்டன் விசாரணை 83

**அத்தியாயம் 7 - மேல்முறையீடு** **84**

(A) மேல்முறையீடு என்றால் என்ன? 85
(B) மேல்முறையீட்டு நடைமுறை 85
(C) மேல்முறையீட்டின் பொருட்டு வழங்கப்படும் பிணை 88

அத்தியாயம் 8 - ஒருங்கிணைக்கப்பட்ட வழக்கு நிர்வாக முறை (ICMS) 90
அத்தியாயம் 9 - அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQ) 92
அத்தியாயம் 10 - சொல் விளக்கத் திரட்டு 100
அத்தியாயம் 11 - பயன்மிக்க இணைப்புகள் 105
அத்தியாயம் 12 - மாதிரிப் படிவங்கள் 107

# 01

# ஒரு மேலோட்டம்

**(A)** குற்றவியல் செயல்முறையின் ஒரு செயல்வழிப் படம்

**(B)** நான் இந்தப் புத்தகத்தை எவ்வாறு பயன்படுத்துவேன்?

அத்தியாயம் 1

# ஒரு மேலோட்டம்

## (A) குற்றவியல் செயல்முறையின் ஒரு செயல்வழிப் படம்

### அறிவிப்பு நீதிமன்றங்கள்

உங்களின் முதல் நீதிமன்ற வழக்கு விசாரணை, குற்றவியல் அறிவிப்பு நீதிமன்றத்தில் இடம்பெறும். இங்குதான், உங்களுக்கு எதிரானக் குற்றச்சாட்டு உங்களிடம் வாசித்து விளக்கப்படும். இதே இடத்தில் தான் குற்றத்திற்கான உங்களின் குற்ற ஏற்பு அல்லது மறுப்பு பதிவு செய்யப்படும். அதாவது, நீங்கள், குற்றம் செய்ததாக ஏற்றுக்கொள்கிறீர்களா (குற்றத்தை ஒப்புக்கொள்ளுதல்) அல்லது குற்றம் செய்யவில்லை என்று மறுக்கிறீர்களா (விசாரணை கோருதல்).

*விசாரணை கோருதல்*

### விசாரணைக்கு முந்திய கூட்டம் (PTC) / குற்றவியல் ஆவணங்கள் வெளிப்படுத்துதல் கூட்டம் (CCDC)

நீங்கள் குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொள்ள விரும்பவில்லையென்றால், நீங்கள் வழக்கு விசாரணை கோர வேண்டும். நீங்கள் வழக்கு விசாரணை கோர முடிவு செய்தால், உங்களின் வழக்கு, விசாரணைக்கு முந்திய கூட்டத்திற்கு (PTC) அல்லது குற்றவியல் ஆவணங்கள் வெளிப்படுத்துதல் கூட்டத்திற்கு (CCDC) மாற்றிவிடப்படும். PTC-ன் போது, நீதிபதி, வழக்கை விசாரணைக்குத் தயார் செய்வதற்கான கட்டளைகளையிடுவார்.

*குற்றத்தை ஒப்புக்கொள்ளுதல்*

### குற்ற ஒப்புதல் நீதிமன்றங்கள்

நீங்கள் குற்றத்தைச்(களைச்) செய்ததாக ஒப்புக்கொண்டால், உங்களின் வழக்கு ஒரு PG நீதிமன்றத்திற்கு மாற்றிவிடப்படும். இங்குதான் தண்டனை விதிக்கும் ஒரு நீதிபதி, நீங்கள் ஒரு குற்றவாளியெனத் தீர்ப்பளித்து, உங்களின் தண்டனை தணிப்பு வாதத்தைக் கேட்ட பிறகு உங்களுக்குத் தண்டனை விதிப்பார்.

### வழக்கு விசாரணை

ஒரு வழக்கு விசாரணையில், நீங்களும் அரசு தரப்பும் முன்வைக்கும் ஆதாரங்களை நீதிபதி ஆராய்வார். வழக்கின் இறுதியில், குற்றச்சாட்டுகளின் பேரில் உங்களை ஒரு குற்றவாளி என தீர்மானிப்பதா அல்லது விடுவிப்பதா என்று அவர் முடிவு செய்வார். நீங்கள் ஒரு குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டால், நீதிபதி உங்களுக்கான தண்டனையை வழங்குவார்.

*அதிருப்தி*

### மேல் முறையீடு

முடிவு உங்களுக்கு வருத்தமளித்தால், நீங்கள் ஒரு மேல் முறையீட்டைத் தாக்கல் செய்யலாம். மேல் முறையீடு என்பது, ஒரு கீழ் நீதிமன்றத்தின் தீர்ப்பினை முற்றிலும் மாற்றும்படி உயர் நீதிமன்றத்திடம் முன்வைக்கும் ஒரு கோரிக்கையாகும். நீதிபதியின் தீர்ப்பை எதிர்த்து அரசு தரப்பும் மேல்முறையீடு செய்யலாம் என்பதைத் தயவு செய்து கவனத்தில் கொள்ளவும்.

*திருப்தி*

### முடிவு

வழக்கு முடிந்துவிட்டது.

## (B) நான் இந்தப் புத்தகத்தை எவ்வாறு பயன்படுத்துவேன்?

### *(1) கட்டாயம் படிக்க வேண்டியது*

சுயமாக வழக்காடும் குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒவ்வொருவரும் நன்கு தெரிந்திருக்கவேண்டிய முக்கிய மற்றும் பயனுள்ள தகவல்கள் "அத்தியாயம் 2 – சுயமாக வழக்காடும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கான அத்தியாவசிய தகவல்கள்" என்பதன் கீழ் இடம்பெற்றுள்ளன. அதனால், சட்ட நடவடிக்கைகளில் நீங்கள் எந்தக் கட்டத்தில் இருந்தாலும், அத்தியாயம் 2-யைப் படிக்குமாறு வலுவாக ஊக்குவிக்கப்படுகிறீர்கள்.

### *(2) "எனது நீதிமன்ற விசாரணையின்போது என்ன நடக்கும் என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்."*

குற்றவியல் நடவடிக்கைகளின் ஒவ்வொரு கட்டத்திற்கும் ஓர் அத்தியாயம் ஒதுக்கப்பட்டுள்ளது. உங்களின் வழக்கு தற்போது அறிவிப்பு நீதிமன்றங்களில் விசாரிக்கப்படுகிறதென்றால், "அத்தியாயம் 3 – அறிவிப்பு நீதிமன்றங்கள்" என்பதை நீங்கள் காணலாம். உங்களின் வழக்கு, 'விசாரணைக்கு முந்திய கூட்டத்திற்கு (**PTC**) நாள் குறிக்கப்பட்டிருந்தால், "அத்தியாயம் 4 – விசாரணைக்கு முந்திய கூட்டங்கள்" உங்களுக்குப் பொருத்தமாக இருக்கும். நீங்கள், ஒரு வழக்கு விசாரணைக்குத் தயார் செய்து கொண்டிருந்தால், "அத்தியாயம் 5 – வழக்கு விசாரணைகள்" என்பதை நீங்கள் காணவேண்டும். உங்களின் வழக்கு, தண்டனை விதிக்கப்படும் கட்டத்தில் இருந்தால், "அத்தியாயம் 6 – தண்டனை விதிப்பு" என்பதை நீங்கள் காணவேண்டும்.

### *(3) "நான் குற்றஞ்சாட்டுகளை ஒப்புக்கொள்ள விரும்புகிறேன்."*

தண்டனை விதிப்புகள் மற்றும் தண்டனை விதிப்பு நடைமுறைகள் பற்றிய தகவல்களை "அத்தியாயம் 6 – தண்டனை விதிப்பு" என்பதில் காணலாம்.

### *(4) "நான் இக்குற்றங்களைச் செய்யவில்லை. நான் வழக்கை எதிர்த்து வாதாட விரும்புகிறேன்!"*

"அத்தியாயம் 2 – சுயமாக வழக்காடும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கான அத்தியாவசிய தகவல்கள்" என்பதில், நீங்கள் எங்குச் சென்று சட்ட ஆலோசனை (அவற்றில் சில இலவசமானவையும் கூட) பெறலாம் போன்ற பயனுள்ள தகவல்கள் அடங்கி உள்ளன. வழக்கு விசாரணையின் செயல்முறையைக் குறித்த தகவல்களை "அத்தியாயம் 5 – வழக்கு விசாரணைகள்" உங்களுக்கு வழங்கும்.

### *(5) “நீதிமன்றத்தின் முடிவையொட்டி நான் வருந்துகிறேன்.”*

ஒரு மேல்முறையீட்டை எவ்வாறு தாக்கல் செய்வது என்ற தகவல்களை "அத்தியாயம் 7 - மேல்முறையீடு" உங்களுக்கு வழங்கும்.

### *(6) “நான் என் ஆவணங்களை நீதிமன்றத்தில் எவ்வாறு மின்-தாக்கல் செய்வது?”*

"அத்தியாயம் 8 - ஒருங்கிணைக்கப்பட்ட வழக்கு நிர்வாக முறை (**ICMS**)" என்பதன் கீழ் ஒரு துரித வழிகாட்டி காணப்படும்.

### *(7) “என் மனதில் சில கேள்விகள் உள்ளன...”*

"அத்தியாயம் 9 - அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (**FAQ**)" என்பதன் கீழ் நீங்கள் பதில்களைக் கண்டறியலாம். நீங்கள் தேடும் பதில் கிடைக்கவில்லை என்றால், அரசு நீதிமன்றங்களின் தகவல் அழைப்பு மையத்தை 65878423 அல்லது **1800 JUSTICE (1800 5878423)** என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம் அல்லது உங்களின் கேள்வியை contact@statecourts.gov.sg என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம். நீதிமுறையில் தீர்ப்பளிக்கும் நீதிமன்றம் என்ற அடிப்படையில், எந்த ஒரு வழக்கின் தகுதி குறித்த சட்ட ஆலோசனை, கருத்துரை அல்லது கேள்விகளுக்குப் பதில் ஆகியவற்றை நீதிமன்றங்கள் வழங்க முடியாது என்பதைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

### *(8) “வழக்கைப் பற்றி எனக்கு கலக்கமாகவும் மனச்சோர்வாகவும் உள்ளது.”*

உணர்வுப்பூர்வ பாதிப்பிற்கான உதவியும் ஆதரவும் உங்களுக்குக் கிடைக்கப்பெறும். தயவு செய்து "அத்தியாயம் 11 - பயன்மிக்க இணைப்புகள்" என்பதன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள உதவி எண்களை அழைக்கவும்.

# 02

# சுயமாக வழக்காடும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கான அத்தியாவசிய தகவல்கள்

**(A)** நான் ஒரு வழக்கறிஞரை நியமிக்க வேண்டுமா?

**(B)** நான் எங்குச் சட்ட ஆலோசனை பெறலாம்?

**(C)** பயன்மிக்க சட்ட வளங்கள்

**(D)** குற்ற ஒப்புதல் அதற்கு மாறாக விசாரணை கோருதல்

**(E)** ஒத்திவைப்புகள்

**(F)** பிணை/சுய பிணை முறி

**(G)** நீதிமன்ற நடையொழுங்கு விதிமுறைகள்

அத்தியாயம் 2

# சுயமாக வழக்காடும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கான அத்தியாவசிய தகவல்கள்

### (A) நான் ஒரு வழக்கறிஞரை நியமிக்க வேண்டுமா?

நீங்கள் ஒரு வழக்கறிஞரை நியமிக்க விரும்புவதும் விரும்பாததும் உங்களின் தனிப்பட்ட முடிவு. ஆனால், அது உங்களுக்கான தெரிவுகளின் நன்மை தீமைகளை நன்கு எண்ணிப் பார்த்த பின்னரே எடுக்க வேண்டிய ஒரு முக்கியமான முடிவாகும்.

பொதுவாகச் சொன்னால், நீங்களே உங்களைப் பிரதிநிதித்துக்கொள்ளும்போது (வழக்கறிஞர் இல்லாமல்) நீங்கள், (i) சட்ட நடைமுறை மற்றும் (ii) நிலைமுறைச் சட்டம் (அதாவது சட்டங்கள் மற்றும் சட்டக்கோட்பாடுகள்), ஆகியவற்றை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். இந்தக் கையேடு உங்களுக்குச் சட்ட நடைமுறையைப் பற்றிய தேவையான விவரங்களை வழங்கும். ஆயினும், நிலைமுறையான சட்டம் குறித்து ஆழ்ந்த புரிதலை வழங்காது. அதுவும், குறிப்பாக, உங்களைத் தற்காத்துக்கொள்ள சட்டத்தில் உங்களுக்குக் கிடைக்கக்கூடிய எதிர்வாதங்களை இது வழங்காது. நீங்களே உங்களைப் பிரதிநிதித்துக்கொள்ள விரும்பினால் சட்டத்தில் உங்களின் எதிர்வாதங்கள் யாவையெனத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

நீதிமன்ற நடைமுறைகளைப் பற்றிய சிறப்பறிவு இல்லாதவர் என்ற நிலையில் நீங்கள் உங்களைப் பிரதிநிதித்தாலும், நீதிமன்றம் அதன் நடைமுறை விதிகளையும் தரத்தையும் உங்களுக்காகத் தளர்த்த இயலாது. அப்படி என்றால், நீங்கள், உங்களின் வழக்கை, ஒரு வழக்கறிஞரால் பிரதிநிதிக்கப்படும் வழக்காடியைப் போல முன்வைக்க தயாராகயிருக்கவேண்டும். உங்களின் வழக்கைத் தயார் செய்வதற்கும் அதனை நடத்துவதற்குமான முழு பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளவும் நீங்கள் தயாராக இருக்க வேண்டும். விசாரணை நடைமுறைகள் குறித்து நீதிபதி சில வழிகாட்டல்களை வழங்கலாம். ஆனால், நீதிபதி உங்களின் வழக்கறிஞரைப்போல செயல்பட முடியாது. அதாவது, நீங்கள் உங்களை வெற்றிகரமாகப் பிரதிநிதித்துக்கொள்ள என்ன செய்ய வேண்டும் என்று நீதிபதி ஆலோசனை வழங்க முடியாது. உங்களுக்கு ஒரு நியாயமான விசாரணை கிடைப்பதை உறுதி செய்வதே நீதிபதியின் பங்கு.

சட்ட நடைமுறையையும் நிலைமுறைச் சட்டத்தையும் உங்களால் கையாள முடியும் என்ற தன்னம்பிக்கை உங்களுக்கு இருந்தால், நீங்களே உங்களைப் பிரதிநிதித்துக் கொள்வதைப் பற்றிச் சிந்திக்கலாம். இல்லையெனில், நீங்கள் ஒரு வழக்கறிஞரை நியமிக்க கருதலாம் அல்லது குறைந்தபட்சம், உங்களின் முடிவைச் செய்வதற்கு முன் வழக்கறிஞர் ஒருவரிடமாவது பேசுங்கள். உங்களின் வழக்கைத் தயார் செய்து, பின்னர் நீதிமன்றத்தில் வழக்காடுவதில் உள்ள மன உளைச்சலிலிருந்து ஒரு நல்ல வழக்கறிஞர் உங்களை விடுவிப்பார்.

### (B) நான் எங்குச் சட்ட ஆலோசனை பெறலாம்?

#### *(1) வழக்கறிஞரை நியமிப்பது*

சிங்கப்பூர் வழக்கறிஞர் சங்கம், சிங்கப்பூரில் சட்டத் தொழில் நடத்தும் வழக்கறிஞர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் இதரப் பயனுள்ள தகவல்களைத் தனது இணையத்தள விவரப்புத்தகத்தில் தொகுத்துக் கொடுத்துள்ளது. நீங்கள், இவ்விவரப்புத்தகத்தை, www.lawsociety.org.sg-ல் காணலாம். நீதிமன்றங்கள் வழக்கறிஞர்களை வழக்காடுபவர்களுக்குப் பரிந்துரைக்கும் நிலையில் இல்லை என்பதைத் தயவுசெய்து கருத்தில் கொள்ளவும்.

#### *(2) குற்றவியல் சட்ட உதவித் திட்டம் (CLAS)*

உங்களுக்கு ஒரு வழக்கறிஞர் தேவைப்படலாம். ஆனால், பண வசதியில்லாத காரணத்தால் உங்களால் ஒருவரை நியமிக்க முடியாமல் இருக்கலாம். பண வசதியில்லாத குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள், தங்களுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட குற்றவியல் குற்றச்சாட்டுகளை எதிர்த்து வழக்காட ஒரு வழக்கறிஞரை நியமிக்க வழக்கறிஞர் சங்கத்தின் இலவச சேவைகளின் குற்றவியல் சட்ட உதவித் திட்டத்தை **(CLAS)** நாடலாம்.

ஒரு குற்றஞ்சாட்டப்பட்ட நபர், கீழ்வரும் தேர்வு முறைகளைப் பூர்த்திச் செய்தால், அவரைப் பிரதிநிதிக்க ஒரு தொண்டூழிய வழக்கறிஞர் நியமிக்கப்படுவார்:

(a) வருமான தேர்வு மற்றும் செலவிடக்கூடிய சொத்துக்கள் தேர்வு போன்றவை உள்ளடங்கிய வருவாய் தகுதி சோதனையை நிறைவேற்றினால்
(b) பின் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்களின் கீழ் வரும் குற்றங்களை ஒப்புக்கொள்ள அல்லது விசாரணை கோர விரும்பினால்:

(i) ஆயுதம் மற்றும் வெடிபொருள்கள் சட்டம்
(ii) ஆயுதக் குற்றச் சட்டம்
(iii) கணினியின் தவறான பயன்பாட்டுக்கான சட்டம்
(iv) அரித்தழிக்கும், வெடிபொருள்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் சட்டம்
(v) ஆபத்தான வானவேடிக்கைச் சட்டம்
(vi) படை ஆள்சேர்ப்புச் சட்டம்
(vii) வெடிபொருள்கள் சட்டம்
(viii) திரைப்படங்கள் சட்டம்
(ix) பலவகைப்பட்ட குற்றங்கள் (பொது ஒழுங்கு மற்றும் தொல்லை) சட்டம்
(x) போதைப்பொருள் ஒழிப்புச் சட்டம்
(xi) (லேவாதேவி) கடன் கொடுப்போர் சட்டம் (அத்தி. 188) [பிரிவுகள் 14 & 28]
(xii) தண்டனை சட்டம்
(xiii) ஊழல் தடுப்புச் சட்டம்
(xiv) மாதர் சாசனத்தின் பிரிவுகள் 65(8) மற்றும் 140(1)(i)
(xv) விரும்பத்தகாத வெளியீடுகள் சட்டம்
(xvi) நாசவேலை சட்டம்

CLAS பற்றிய மேலும் தகவல்களை இந்த http://probono.lawsociety.org.sg/Pages/Criminal-Legal-Aid-Scheme.aspx என்னும் இணையத்தளத்தில் கண்டறியலாம். மாறாக, நீங்கள், அவர்களைத் தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் வழி தொடர்புகொள்ளலாம் அல்லது அவர்களின் அலுவலகத்திற்கு நேரடியாக செல்லலாம்.

**முகவரி**: 1 ஹெவ்லாக் சதுக்கம், பேஸ்மண்ட் 1, HELP (ஹெல்ப்) நிலையம் சிங்கப்பூர் 059724
**தொலைபேசி எண்**: 6536 0650
**மின்னஞ்சல் முகவரி**: clas@lawsocprobono.org

### *(3) ரிமாண்ட் கிளினிக்*

நீங்கள் பிணையில் வெளியேற முடியாத காரணத்தால், தற்பொழுது சிறையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தால், நீங்கள் ரிமாண்ட் கிளினிக்கிற்குச் செல்லலாம். அங்கு ஒரு தொண்டூழிய வழக்கறிஞரிடமிருந்து 20 நிமிட இலவச ஆலோசனையை நீங்கள் பெறலாம். ஆனால், இவ்வழக்கறிஞரால் நீதிமன்றத்தில் உங்களைப் பிரதிநிதிக்க முடியாது. இந்தக் கிளினிக் சேவையைப் பெறுவதற்கு எவ்வித வருவாய் அல்லது தகுதி சோதனைகள்

கிடையாது. தடுப்புக் காவலில் உள்ள அனைத்து நபர்களும் இதற்குத் தகுதி பெறுவர் மற்றும் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அமைப்புகளின் மூலம் விண்ணப்பம் செய்யலாம்.

### *(4) CJC HELP (ஹெல்ப்) நிலையம்*

சுயமாக வழக்காடும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு **CJC** பல்வேறு திட்டங்களை வழங்குகிறது.

**(a)** நேரடி (நீதிமன்ற வளாகத்தில்) சட்ட ஆலோசனை திட்டம்
**HELP** (ஹெல்ப்) நிலையத்தின் நேரடி (நீதிமன்ற வளாகத்தில்) சட்ட ஆலோசனை திட்டத்திலுள்ள **CJC**, ஒரு தொண்டூழிய வழக்கறிஞரிடமிருந்து 20 நிமிட இலவச ஆலோசனை பெறும் சேவையை வழங்குகிறது. இச்சேவையைத் திங்கள்-வெள்ளி வரை காலை 10:30-மதியம் 12:30 வரையிலும், மதியம் 2:30-மாலை 5:30 மணி வரையிலும் (பொது விடுமுறைகளைத் தவிர்த்து) பெறலாம். இத்தொண்டூழிய வழக்கறிஞரால் நீதிமன்றத்தில் உங்களைப் பிரதிநிதிக்க முடியாது என்பதைத் தயவுசெய்து கருத்தில் கொள்ளவும். இக்கிளினிக் சேவையைப் பெறுவதற்கு எவ்வித வருவாய் அல்லது தகுதி சோதனை அவசியமில்லை; அனைவரும் இதற்குத் தகுதி பெறுவர். மேலும் தகவலறிய **HELP** (ஹெல்ப்) நிலையத்திலுள்ள **CJC**-க்கு வருகை புரியவும்.

**(b)** அடிப்படை நீதித் திட்டம் (குற்றவியல்)
குற்றவியல் வழக்கு நிர்வாக முறை[1] **(CCMS)** அல்லது குற்றவியல் வழக்குத் தீர்வு கூட்டம் ஆகியவற்றின் வழி[2] **(CCR)** நீங்கள் ஒரு கட்டணத்தைச்[3] செலுத்தி உங்களைப் பிரதிநிதிக்க ஒரு வழக்கறிஞரை நியமிக்கலாம். உங்களின் வழக்குத் தொடர்பாக அரசு தரப்பின் நிலைப்பாடு மற்றும் சாட்சியங்கள் போன்றவற்றைக் குறித்த தகவல்களைக் கேட்டுப்பெறவும், அரசு தரப்பிடம் பிரதிநிதித்துவக் கடிதம் எழுதவும் இந்த வழக்கறிஞர் உதவுவார். இத்திட்டத்திற்குத் தகுதி பெற உங்களின் வருடாந்திர வருமானம் $12,000-க்கு மேல் இருக்கக்கூடாது. மேல் விவரங்களுக்கு **CJC HELP** (ஹெல்ப்) நிலையத்திற்கு வருகை புரியவும்.

---

[1] ஒரு குற்றவியல் வழக்கு நிர்வாக முறை (CCMS), அரசு தரப்பு வழக்கறிஞருக்கும் குற்றஞ்சாட்டப்பட்டவரின் வழக்கறிஞருக்கும் இடையில், சர்ச்சையில் உள்ள முக்கிய விவகாரங்களை ஆராய அல்லது குற்றச்சாட்டைப் பற்றி பேரம் பேச நடக்கும் 'பாரபட்சமற்ற' சந்திப்பை உள்ளடக்கும்.
[2] ஒரு குற்றவியல் வழக்கு தீர்வு (CCR) என்பது, ஒரு நீதிபதி, அரசு தரப்பு வழக்கறிஞர்கள் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவரின் வழக்கறிஞர் ஆகியோர், ஒரு வழக்கில் சர்ச்சைக்குரிய பிரச்சனைகள் தொடர்பாக பரஸ்பர புரிதலை வழிநடத்தும் எண்ணத்துடனும், ஏற்றதாயின், குற்ற ஒப்புதல் அல்லது தீர்ப்பிற்குப் பிறகு வழங்கப்படக்கூடிய தண்டனையைக் கோடி காட்டவும் கூடும் ஒரு சந்திப்பை உள்ளடக்கும்.
[3] ஒரு மணி நேரத்திற்கு $300, ஆகக் கூடுதலாக 3 மணி நேரம் + $100 நிர்வாகக் கட்டணம்.

**(c) CJC**-ன் வாத அறிவிப்பு செய்ய வழிக்காட்டல் திட்டம் **(GPS)**
இந்தத் திட்டம் **CJC** வழக்கறிஞர்களால் குற்றவியல் சட்ட உதவித் திட்டத்திற்குத் தகுதி பெறாத சுயமாக வழக்காடும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு, இலவச அடிப்படையில் வழங்கப்படுகிறது. குற்றஞ்சாட்டப்பட்டவர் சில நேரங்களில் தனக்குச் செல்லுபடியாகும் தற்காப்பு வாதம் உள்ளதா அல்லது தான் குற்றத்தை ஒப்புக்கொள்வதா என்பதைப்பற்றி தெளிவில்லாமல் இருக்கலாம். இந்த **GPS** திட்டம், சுயமாக வழக்காடும் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்குத், தனது தற்காப்பு வாதம் வெற்றி பெறுவதைப்பற்றியும் சிறந்த முடிவு எதுவாக இருக்கும் என்பதைப்பற்றியும் தெளிவுப்படுத்த உதவுவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் உள்ள வழக்கறிஞர், சட்ட ஆலோசனை மட்டும் வழங்குவாரே தவிர நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பிரதிநிதிக்கமாட்டார்.

**(d)** வழக்கறிஞர் இல்லாமல் சுயமாக வாதாடுபவர்களின் நீதிமன்ற நண்பர் **(FLiP)**
இந்தத் **(FLiP)** திட்டம், வழக்கறிஞர் இல்லாமல் சுயமாக வாதாடுபவர்களுக்கு **(LiPs)** நீதிமன்றத்தில் தங்களை நம்பிக்கையுடன் பிரதிநிதித்துக்கொள்ளும் ஆற்றலை வழங்குகிறது. சுயமாக வாதாடுபவர்களுக்கு வழக்கு விசாரணை நடைமுறைகள் மற்றும் நீதிபதியின் கட்டளைகளை விளக்குவது போன்ற அடிப்படை நீதிமன்ற செயல்முறைகளுக்கு மனரீதியிலான ஆதரவையும் வழிகாட்டலையும் வழங்குவதில் முதன்மை கவனத்தை இந்தத் **(FLiP)** திட்டம் செலுத்துகிறது. சுயமாக வாதாடும் குற்றஞ்சாட்டப்பட்ட 65 வயதிற்கு மேற்பட்டோர் அல்லது 21 வயதிற்கும் கீழ்ப்பட்ட, குடும்ப ஆதரவு இல்லாத மற்றும் நன்னடத்தைக் கண்காணிப்பிற்குப் பரிசீலிக்கப்பட முடியாத இளையர்களுக்கும் உதவி கிடைக்கும். திருட்டு மற்றும் பொது ஒழுங்கு குற்றங்கள் போன்ற கடுமை குறைந்த குற்றங்களுக்கு மட்டுமே இத்திட்டம் பொருந்தும்.

சட்ட உதவி மற்றும் சமூக ஆதரவு
சமூக நீதி நிலையம்
பேஸ்மணட் 1, **HELP** (ஹெல்ப்) நிலையம், அரசு நீதிமன்றங்கள்
தொலைபேசி எண்: 6557 4100
மின்னஞ்சல் முகவரி: help@cjc.org.sg
இணையத்தளம்: www.cjc.org.sg

### (C) பயன்மிக்க சட்ட வளங்கள்

நீங்களே உங்களைப் பிரதிநிதிக்கிறீர்கள் என்றால், கீழ்வரும் பயன்மிக்க வளங்களை நீங்கள் நாட விரும்பலாம்:

| வளம் | விளக்கம் | நான் எங்கு இதை அணுகலாம்? |
|---|---|---|
| **தண்டனை சட்டம்** | குற்றவியல் குற்றங்கள் தொடர்பான சட்டத்தைத் தொகுத்து, ஒருங்கிணைத்து வழங்கும் ஒரு சட்டம் | http://sso.agc.gov.sg |
| **குற்றவியல் நடைமுறைச் சட்டம்** | குற்றவியல் நடைமுறைத் தொடர்பான சட்டத் தொகுப்பு | http://sso.agc.gov.sg |
| **போதைப் பொருள் ஒழிப்புச் சட்டம்** | ஆபத்தான அல்லது கெடுதி விளைவிக்கக்கூடிய போதை மருந்துகளையும் பொருட்களையும் மற்றும் அதன் தொடர்பிலான நோக்கத்திற்குச் சம்பந்தமானவற்றையும் கட்டுப்படுத்துவதற்கான சட்டம் | http://sso.agc.gov.sg |
| **சான்றுச் சட்டம்** | சான்றுகள் தொடர்பான சட்டம் | http://sso.agc.gov.sg |
| **"நோ த லா" கையேடு (Know the Law-சட்டத்தை அறிந்துகொள்)** | பொதுவாக எதிர்கொள்ளப்படும் சட்டப் பகுதிகளைச் சாமானியர் புரிந்துகொள்ளக்கூடிய எளிய முறையில் விளக்கும் சிங்கப்பூர் வழக்கறிஞர் சங்கத்தின் ஒரு பதிப்பு | http://probono.lawsociety.org.sg |

நீதிமன்றம் காகிதமில்லா தாக்கல் முறையை நோக்கி நகர்கிறது என்பதைக் கருத்தில் கொள்ளவும். வழக்குடன் தொடர்புடைய அனைத்து ஆவணங்களும், நீதிமன்றத்துடனும் அரசு தரப்புடனுமான உங்களின் கடிதத் தொடர்புகள் உட்பட, ஒருங்கிணைக்கப்பட்ட வழக்கு நிர்வாக முறை (ICMS) வழி தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று இது பொருள்படும். உங்களை நீங்களே தற்காத்து வாதாட எண்ணம் கொண்டிருந்தால், ICMS-உடன் நன்கு பழக்கப்படுத்திக்கொள்ளுங்கள். மேல் விவரங்களுக்கு, அத்தியாயம் 8 - ஒருங்கிணைக்கப்பட்ட வழக்கு நிர்வாக முறை (ICMS)-யைக் காணவும்.

### (D) குற்ற ஒப்புதல் அதற்கு மாறாக விசாரணை கோருதல்

குற்றஞ்சாட்டப்பட்டவர் என்ற முறையில், நீங்கள் கருத்தில் கொள்ளவேண்டிய ஆக அடிப்படையான ஒன்று என்னவென்றால், குற்றத்தை ஒப்புக்கொள்ள விரும்புகிறீர்களா அல்லது குற்றச்சாட்டை(களை)[4] எதிர்த்து வாதாட விரும்புகிறீர்களா என்பதாகும். குற்றத்தை ஒப்புக்கொள்வதற்கும் வழக்கை வாதாடுவதற்கும் இடையிலான வேறுபாடுகளைக் கீழுள்ள கட்டம் விளக்கும்.

---

[4] ஒரு குற்றப்பத்திரிக்கை என்பது அரசு தரப்பால் தயாரிக்கப்படும் ஓர் அதிகாரபூர்வ ஆவணம். குற்றஞ்சாட்டப்பட்டவர் புரிந்ததாகக் கூறப்படும் குற்றச்செயல் நடந்த தேதி, இடம் மற்றும் அதன் தன்மை, ஆகிய தகவல்கள் இதிலடங்கும்.

| விசாரணை கோருதல் | குற்ற ஒப்புதல் |
|---|---|
| ▸ உங்களின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை(களை) நீங்கள் ஒப்புக்கொள்ளவில்லை.<br><br>▸ உண்மை விவர அறிக்கையில் (பொதுவாக **SOF** என்றும் அழைக்கப்படும்) குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விவரங்களை நீங்கள் மறுக்கிறீர்கள்.<br><br>▸ அரசு தரப்பு குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்காகவும், நீங்கள் உங்களைத் தற்காத்துக் கொள்வதற்காகவும் விசாரணை தேதி குறிக்கப்படுகிறது. | ▸ குற்றப்பத்திரிக்கையில்(களில்) குறிப்பிடப்பட்டுள்ள குற்றத்தைப் (களைப்) புரிந்ததாக நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள்.<br><br>▸ உண்மை விவர அறிக்கையில் (**SOF**) குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விவரங்களை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்கள்.<br><br>▸ ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மைகள் குற்றச்சாட்டின் ஒவ்வொரு கூறுகளையும் உறுதிப்படுத்தினால், நீங்கள் விசாரணையின்றி நீதிபதியால் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்படுவீர்கள்.<br><br>▸ நீங்கள் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டு, தண்டனை விதிக்கப்பட்ட பின் குற்றச்சாட்டை(களை) எதிர்க்கவோ அல்லது வழக்கை எதிர்த்து வாதாடவோ உங்களுக்கு அனுமதி வழங்கப்படாது.<br><br>▸ நீங்கள் உங்களின் தண்டனையை எதிர்த்து மேல்முறையீடு செய்யலாமே தவிர உங்களின் குற்றத்தீர்ப்பை எதிர்த்து அல்ல.<br><br>▸ நீங்கள் முன்னதாகவே குற்றத்தை ஒப்புக்கொண்டால், உங்களுக்கு விதிக்கப்படக்கூடிய தண்டனையில் கழிவுகள் வழங்கப்படலாம். |

நீதிபதி தனது தீர்ப்பை வழங்குவதற்கு முன் நடவடிக்கைகளின் எந்தக் கட்டத்தில் வேண்டுமானாலும் நீங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ளலாம். வழக்கை எதிர்த்து வாதாடுவதா அல்லது குற்றத்தை ஒப்புக்கொள்வதா என்று முடிவெடுப்பதற்கு முன் உங்களுக்கான தெரிவுகளைக் கவனமாகப் பரிசீலனை செய்யுங்கள்.

நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக்கொள்ள நீங்கள் தெரிவு செய்தால், அரசு தரப்பு குற்றச்சாட்டுடன்(களுடன்) தொடர்புடைய உண்மை விவர அறிக்கையை வாசித்து, உங்களுக்குள்ள ஏதேனும் முந்தைய குற்றத்தீர்ப்புகளையும் கூறும். நீங்கள் உண்மை விவர அறிக்கையை ஒப்புக்கொண்டால், உங்களின் குற்ற ஒப்புதல் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படும். நீங்கள் உண்மை விவர அறிக்கையை ஒப்புக்கொண்ட பிறகு நீதிமன்றம் உங்களின் குற்ற ஒப்புதலைப் பதிவு செய்து உங்களைக் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கும்.

குற்றத்தீர்ப்பிற்குப் பிறகு, நீதிமன்றம் தண்டனை விதிப்பதற்கு முன், நீங்கள் உங்களின் தண்டனை தணிப்பு வாதத்தை முன் வைக்கலாம். தண்டனைகள் மற்றும் தண்டனை தணிப்பு வாதங்கள் தொடர்பான விவரங்களை அத்தியாயம் 6-ல் காணலாம்.

### (E) ஒத்திவைப்புகள்

நீதிமன்ற விசாரணையைப் பின்னொரு தேதிக்கு மாற்றுவதே ஒத்திவைப்பு என்பதாகும். ஒத்திவைப்பிற்கான விண்ணப்பங்களை நீங்களோ அல்லது அரசு தரப்போ செய்யலாம். ஒத்திவைப்பிற்கான விண்ணப்பங்கள் முறையான காரணங்களோடு ஆதரிக்கப்படவேண்டும்; இல்லையேல், நீதிமன்றம் ஒத்திவைப்பை வழங்கத் தயாராகயில்லாமல் இருக்கலாம். ஏதேனும் ஒரு தரப்பு ஒத்திவைப்பிற்கு மறுப்பு தெரிவிக்கலாம். இரு தரப்புகளையும் விசாரித்த பிறகு நீதிமன்றம் ஒத்திவைப்பை வழங்கவேண்டுமா என்று முடிவு செய்யும்.


ஓர் ஒத்திவைப்பு விண்ணப்பத்திற்கு ஆதரவாக, பொதுவாக நீதிமன்றத்தில் கூறப்படும் காரணங்கள் வருமாறு:

| அரசு தரப்பால் | குற்றஞ்சாட்டப்பட்டவரால் |
|---|---|
| ▸ மேலும் விசாரணை செய்ய<br>▸ மருத்துவ அறிக்கைகள் அல்லது சுகாதார அறிவியல் ஆணையத்தின் அறிக்கைகள் போன்ற அறிக்கைகளுக்கு விண்ணப்பிக்க<br>▸ வழக்குத் தொடர்பாக அரசாங்கத் தலைமைச் சட்ட அதிகாரி அலுவலகத்தின் வழிக்காட்டலைப் பெற<br>▸ குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவரின் பிரதிநிதித்துவங்களைப் பரிசீலிக்க மற்றும் பதிலளிக்க | ▸ வழக்கறிஞரைக் கலந்தாலோசிக்க/நியமிக்க, CLAS-க்கு விண்ணப்பம் செய்வது உள்பட<br>▸ அரசு தரப்பு வழக்கறிஞரிடம் பிரதிநிதித்துவங்கள் செய்ய<br>▸ நிதி திரட்ட<br>▸ இணக்கத் தீர்வுடன் வழக்கைத் தீர்த்துக்கொள்ள<br>▸ தண்டனையைத் தொடங்குவதற்கு முன் தனிப்பட்ட விவகாரங்களைத் தீர்க்க |

பின்வரும் வழிகள் மூலம் நீங்கள் ஒத்திவைப்பிற்கு விண்ணப்பிக்கலாம்:

(a) **வாய்மொழி விண்ணப்பம்:** நீதிமன்ற விசாரணையின்போது நீதிபதியிடம் தெரிவிக்கலாம். ஒத்திவைப்பிற்கான உங்களின் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், உங்களின் அடுத்த நீதிமன்ற விசாரணைக்கான இடம், தேதி மற்றும் நேரம் குறிக்கப்பட்ட ஓர் அறிவிப்பு தாளை நீங்கள் பெறுவீர்கள்.

(b) **இணையம்வழி விண்ணப்பம்:** அரசு நீதிமன்றங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட வழக்கு நிர்வாக முறையில் (**ICMS**) கொடுக்கப்பட்டுள்ள நீதிமன்ற விசாரணை தேதியை மற்றொரு தேதிக்கு மாற்ற இணையம் வழி விண்ணப்பிப்பது. **ICMS**-யை நீங்கள் இணையம் வழியோ அல்லது அரசு நீதிமன்றங்களில் உள்ள **ICMS** கணியகங்கள் வழியோ பயன்படுத்தலாம். தயவுசெய்து உங்களின் விண்ணப்பத்திற்கான முடிவை உங்களின் சிங்பாஸ்-சைக் (**SingPass**) கொண்டு **ICMS**-க்குள் நுழைந்து உங்களின் விண்ணப்பத்தின் நிலையை கவனிப்பதன் மூலம் கண்காணிக்கவும். உங்களின் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், நீதிமன்ற விசாரணைக்கான புதிய தேதி மற்றும் நேரம் போன்ற தகவல்களை **ICMS**-ல் காணலாம். உங்களின் விண்ணப்பம் மறுக்கப்பட்டால், நீதிமன்றம் உங்களுக்கு முதலில் கொடுத்த விசாரணை தேதியன்று நீங்கள் கண்டிப்பாக நீதிமன்றத்திற்கு வர வேண்டும். நீங்கள் இந்த நீதிமன்ற விசாரணையைத் தவறவிட்டால் உங்களுக்கு எதிராக ஒரு பிடியாணை பிறப்பிக்கப்படும். **ICMS** குறித்து மேலும் தகவல்கள் பெற 'அத்தியாயம் 8 – ஒருங்கிணைக்கப்பட்ட வழக்கு நிர்வாக முறை (**ICMS**) என்பதைக் காணவும்.



## (F) பிணை/சுய பிணை முறி

### *(1) பிணை/சுய பிணை முறி என்றால் என்ன?*

நீங்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டால், நீதிமன்றம் உங்களைப் பிணை மற்றும்/அல்லது சுய பிணை முறியில் விடுவித்தாலேயன்றி, வழக்கு முடிவுறும் வரையில் நீங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்படுவீர்கள்.

பிணை/சுய பிணை முறி வழங்கப்படுள்ளது

↓

குற்றஞ்சாட்டப்பட்டவர் தற்காலிக சிறைக்குக் கொண்டு செல்லப்படுவார்

↓

பிணை அதிகாரி, பிணை வழங்குபவர் /குற்றஞ்சாட்டப்பட்டவர் ஆகியோரின் பொறுப்புகளை விளக்குவார்

↓

பிணை அதிகாரி, பிணை / சுய பிணை முறி நிபந்தனைகளை மீறுவதன் விளைவுகளை விளக்குவார்

↓

பிணை வழங்குபவரிடம் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் அடுத்த அறிவிப்பு அல்லது விசாரணை தேதி வழங்கப்படும்

↓

மேஜிஸ்திரேட்டின் ஒப்புதலுக்காகப் பிணை வழங்குபவர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் அவர் முன் கொண்டு செல்லப்படுவர்

↓

பிணை/சுய பிணை முறி தயாரிக்கப்படும்

↓

தற்காலிக சிறையிலிருந்து குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுவிக்கப்படுவார்

பிணை வழங்கப்பட்டு, உங்களைத் தவிர்த்து வேறொருவர் (பிணை வழங்குபவர்) நீதிமன்றம் பிணை தொகையாக ஆணையிட்ட பணத்தை வழங்க முன்வந்து உத்தரவாதம் வழங்கக்கூடிய நிலையில் இருந்தால் நீங்கள் பிணையில் விடுவிக்கப்படுவீர்கள். **அதன் பிறகு, தேவைப்படும் போதெல்லாம் நீங்கள் நீதிமன்றத்திற்குச் செல்வதை உறுதிசெய்யும் கடமை உங்களைப் பிணையில் எடுத்தவருக்கு உள்ளது.**

சுய பிணை முறி வழங்கப்பட்டால், அந்தச் சுய பிணை முறியில் விடுவிக்கப்படுவதற்கு முன்பு, நீதிமன்றத்தால் ஆணையிடப்பட்ட தொகைக்கு (பிணை முறி தொகை) நீங்கள் உத்தரவாதம் (பிணை) வழங்க வேண்டும். தேவைப்படும் போதெல்லாம் நீங்கள் நீதிமன்றத்திற்குச் செல்வதை உறுதிசெய்யும் கடமை உங்களுக்கு உள்ளது.

நீதிமன்றம் உங்களைச் சுய பிணை முறி மற்றும் பிணை ஆகிய இரண்டிலும் (எ.டு. $X + $Y உத்தரவாதத்துடன்) விடுவிக்கலாம். இந்நிலையில், பிணை தொகையான $X-க்குப் பிணை வழங்க ஒருவரும், மற்றும் சுய பிணை முறியாக $Y என்றும் உத்தரவிடலாம். இது போன்ற ஒரு சூழ்நிலையில், தேவைப்படும் போதெல்லாம் நீங்கள் நீதிமன்றத்திற்குச் செல்வதை உறுதிசெய்யும் பொறுப்பு உங்களை மற்றும் உங்களைப் பிணையில் எடுத்தவர் ஆகிய இருவரையும் சேரும்.

### *(2) பிணை/சுய பிணை முறிக்கான நிபந்தனைகள்*

பிணை பெரும்பாலும் நிபந்தனைகளோடு வழங்கப்படும். நிபந்தனைகளுக்கு நீங்கள் கட்டாயம் கட்டுப்படவேண்டும். இல்லையெனில், உங்களின் பிணை இரத்து செய்யப்படலாம். நீதிமன்றம் வேறுவிதமாகக் குறிப்பிட்டாலேயன்றி, நீதிமன்றம் வழங்கும் பிணைக்குப், பின் வரும் நிபந்தனைகள் பொருந்தும்:

(a) உங்களின் பயணப் பத்திரத்தை நீங்கள் ஒப்படைக்க வேண்டும்.
(b) நீங்கள், (காவல் நிலையத்திடம் / நீதிமன்றத்திடம்) சரணடைய வேண்டும், புலன் விசாரணைகளுக்குச் செல்ல தயார் நிலையில் இருக்க வேண்டும், அல்லது தேவைப்படும் போதெல்லாம் நீதிமன்றத்திற்கு நேரடி வருகைப் புரியவேண்டும்.
(c) பிணை அல்லது சுய பிணை முறியில் இருக்கும்போது நீங்கள் எந்தக் குற்றமும் புரிய கூடாது.
(d) நீங்கள் எந்தவொரு சாட்சியுடனும் தலையிடக்கூடாது அல்லது மற்ற வகையில் நீதியின் போக்குக்குத் தடையாக இருக்கக்கூடாது.
(e) பிணையைப் பொறுத்தவரை, உங்களுக்குப் பிணை வழங்குபவர் அதே வழக்கில் உங்களுடன் இணைந்து குற்றஞ்சாட்டப்பட்ட உடன் குற்றவாளியாக இருக்கமுடியாது.

பொதுவாக விதிக்கப்படும் மற்ற நிபந்தனைகள் இவற்றை உள்ளடக்கும்:

(a) நீங்கள் பாதிக்கப்பட்டவர்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்புகொள்ள கூடாது.

(b) நீங்கள் நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்ட சிகிச்சைகளுக்குக் கட்டாயம் செல்ல வேண்டும் (வழக்கின் முடிவு அறியப்படும் வரை).
(c) நீங்கள் மின்னியல் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படவேண்டும்.

21 வயதிற்கும் கீழ்ப்பட்ட இளம் குற்றவாளிகளுக்கு, நீதிமன்றம் சுய பிணை முறியை விட பிணை வழங்குவதற்கே அதிக சாத்தியம் உள்ளது. அதோடு இணைந்து வழங்கப்படக்கூடிய கூடுதல் நிபந்தனைகள் வருமாறு:

(a) குற்றஞ்சாட்டப்பட்டவரின் பெற்றோர் அல்லது காப்பாளர் மட்டுமே பிணை வழங்குபவராக இருக்கலாம்.
(b) குற்றஞ்சாட்டப்பட்டவர் வீட்டிற்குள்ளேயே இருக்க நேர கட்டுப்பாடு.
(c) குற்றஞ்சாட்டப்பட்டவர் பள்ளிக்குத்/தேசிய சேவைக்குத் தவறாமல் செல்ல வேண்டும்.

### *(3) பிணை/சுய பிணை முறிக்கான தொகை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது?*

பிணை விவகாரம் எழுப்பப்படும்போது, நீதிபதியின் பரிசீலனைக்காக அரசு தரப்பு ஒரு குறிப்பிட்ட தொகையை எடுத்துரைக்கும். அத்தொகை மிகவும் அதிகம் என்று நீங்கள் கருதினால், ஒரு குறைவான தொகையை வேண்டி அதற்கான காரணங்களையும் நீங்கள் நீதிபதியிடம் விளக்கலாம். அதன் பிறகு, நீதிபதி பிணை/சுய பிணை முறிக்கான தொகையை முடிவு செய்வார். நீதிபதி கருத்தில் எடுத்துக்கொள்ளக்கூடிய சில பரிசீலனைகள் வருமாறு:

(a) குற்றச்சாட்டுகளின் தன்மை, எண்ணிக்கை மற்றும் தீவிரம்.
(b) குற்றங்களுக்கான நிர்ணயிக்கப்பட்ட தண்டனைகளின் கடுமை.
(c) குற்றஞ்சாட்டப்பட்டவரின் குணம், பொருளாதாரம் மற்றும் தகுதி நிலை.
(d) நீங்கள் தப்பியோடும் சாத்தியம் உள்ளதா.

### *(4) எத்தகைய உத்தரவாதம் (பிணை) வழங்கப்படலாம்?*

உத்தரவாதம் எவ்வாறு வழங்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் அவசியப்படுத்தலாம் என்பதைப் பின்வரும் பொது வழிகாட்டி காட்டுகிறது:

(a) $15,000 மற்றும் அதற்கும் குறைவான பிணை/சுய பிணை முறி தொகைகளுக்குத், தனிப்பட்ட சொத்து, ஆபரணங்கள் அல்லது வீட்டு அறைகலன்கள் உள்பட, உத்தரவாதமாக வழங்கப்படலாம் (இவ்வனைத்துப் பொருட்களுக்கும் முழு பணம் செலுத்தப்பட்டிருந்தால் மட்டுமே அவை பயன்படுத்தப்படலாம்).

(b) $15,000 மற்றும் அதற்கும் மேலான பிணை/சுய பிணை முறி தொகைகளுக்குப் பொதுவாக ரொக்கம் அல்லது ரொக்கத்திற்கு ஈடானவை (காசாளர் கட்டளை போன்றவை) வழங்கப்படலாம்.

### *(5) யார் எனக்கு பிணை வழங்கலாம்?*

நீதிமன்றம் வேறுவிதமாக ஆணையிட்டாலேயன்றி, 21 வயதிற்கு மேற்பட்ட, தற்போது நொடிப்பு நிலையில் இல்லாத அல்லது குற்றவியல் குற்றச்சாட்டுகளை எதிர்நோக்காத எவரேனும் ஒரு சிங்கப்பூர் குடிமகன் அல்லது நிரந்தரவாசி.

ஒருவரைப் பிணை வழங்குபவராக அனுமதிப்பதைத் தீர்மானிக்கும் இறுதி உரிமை நீதிமன்றத்திற்கே உள்ளது. உதாரணத்திற்குப், பிணை வழங்க உத்தேசிக்கப்பட்ட நபரால், நீங்கள் தவறாமல் நீதிமன்ற நிகழ்வுகளுக்கு வருவீர்கள் என்று உறுதி செய்ய முடியும் என நீதிமன்றம் நம்பவில்லை என்றால், உத்தேசிக்கப்பட்ட அந்த நபர் பிணை வழங்குவதை நீதிமன்றம் அனுமதிக்காதிருக்கலாம்.

### *(6) எனக்கு பிணை வழங்குபவர் எவ்வாறு என்னைப் பிணையில் விடுவிப்பார்?*

பிணை வழங்கப்பட்டால், பிணை வழங்குபவரை ஏற்பாடு செய்ய உங்களுக்கு இரண்டு உள்ளூர் தொலைபேசி அழைப்புகளைச் செய்ய அனுமதி வழங்கப்படும். பிணை வழங்கப்பட்டவுடன் தொலைபேசியில் அழைப்பதற்குச் சிலரை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

உங்களுக்குப் பிணை வழங்கத் தயாராக இருப்பவர் (உத்தேசிக்கப்பட்ட பிணை வழங்குபவர்) அரசு நீதிமன்றங்களின் 4-வது தளத்தில் அமைந்துள்ள பிணை நிலையத்திற்குச் செல்ல வேண்டும். பிணைக்கான ஏற்பாட்டின்போது பிணை நிலைய அதிகாரி உங்களின் உத்தேச பிணை வழங்குபவரிடம் பிணை நிபந்தனைகளை விளக்கி, அனைத்து பிணை நிபந்தனைகளும் இணங்கப்படக்கூடும் என்பதை உறுதி செய்ய அவரை நேர்காணல் செய்வார்.

உங்களின் உத்தேசப் பிணை வழங்குபவர் அவரது கடமைகளை நன்குணர்ந்து, அதற்குச் சம்மதித்து, மற்றும் பிணைக்கான உத்தரவாதத்தை வழங்கிய பிறகு, பிணை நிலையம் உங்களின் உத்தேசப் பிணை வழங்குபவரைப், பிணையின் விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் ஏற்பு தெரிவிக்க ஒரு மேஜிஸ்திரேட்டின் முன்னால் அழைத்துச் செல்லும். உத்தேசப் பிணை வழங்குபவர், பிணை வழங்கத் தகுதியானவர் அல்ல என்று மேஜிஸ்திரேட் கருதினால், அவர்

அந்த விண்ணப்பத்தை நிராகரிக்கலாம். விண்ணப்பம் அனுமதிக்கப்பட்டால் நீங்கள் விடுவிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

### *(7) நான் வெளியேற எவ்வாறு சுய பிணை முறி வழங்குவது?*

சுய பிணை முறி வழங்கப்பட்டால், பிணை நிலைய அதிகாரி சுய பிணை முறியின் நிபந்தனைகளை உங்களிடம் சுருக்கமாக விளக்கி, உங்களால் பிணை முறிக்கான உத்தரவாதம் வழங்கமுடியுமா என்பதை உறுதி செய்ய உங்களை நேர்காணல் செய்வார். விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், நீங்கள் விடுவிக்கப்படுவீர்கள்.

### *(8) பிணை நிலையத்தின் செயல்படும் நேரங்கள் என்ன?*

பிணை நிலையத்தின் செயல்படும் நேரங்கள் பின் வருமாறு என தயவுசெய்து கருத்தில் கொள்ளவும்:-

<u>திங்கள் முதல் வியாழன் வரை</u>
காலை 8.30 முதல் மதியம் 1.00 வரை (கடைசி பதிவு மதியம் 12.30 மணிக்கு)
மதியம் 2.00 முதல் மாலை 6.00 வரை (கடைசி பதிவு மாலை 5.00 மணிக்கு)

<u>வெள்ளிக்கிழமை</u>
காலை 8.30 முதல் மதியம் 1.00 வரை (கடைசி பதிவு மதியம் 12.30 மணிக்கு)
மதியம் 2.00 முதல் மாலை 5.30 வரை (கடைசி பதிவு மாலை 4.30 மணிக்கு)

<u>சனிக்கிழமை</u>
காலை 8.30 முதல் மதியம் 1.00 வரை (கடைசி பதிவு நண்பகல் 12.00 மணிக்கு)

தயவுசெய்து, உங்களுக்குப் பிணை வழங்குபவரிடம், பிணை நிலையத்தின் கடைசி பதிவு நேரம் முடிவடையும் முன்னரே பதிவு செய்யும்படி தெரிவியுங்கள். அவ்வாறு செய்யத் தவறினால் உங்களின் பிணை விண்ணப்பம் அடுத்த வேலை நாளன்றே தயார் செய்வதற்குப் பதிவு செய்யப்படும். அந்நிலையில், உங்களின் பிணை தயார் செய்து அனுமதிக்கப்படும் வரை, நீங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்படுவீர்கள்.

### *(9) பிணை/சுய பிணை முறியின் நிபந்தனைகளை நான் மீறினால் என்ன ஆகும்?*

நீங்கள் பிணை/சுய பிணை முறியின் நிபந்தனைகளை மீறக்கூடாது. அவ்வாறு மீறினால், உங்களின் பிணை/சுய பிணை முறி இரத்து செய்யப்படலாம். விசாரணை வரை நீங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்படுவீர்கள் என்று இதற்குப் பொருள்படும். நீங்கள், உங்களின் பிணை நிபந்தனைகளை மீறினால், உங்களுக்குப் பிணை வழங்கியவர் நீதிமன்றத்திற்கு வர வேண்டும். அவசியப்பட்டவாறு நீதிமன்றத்திற்கு வரத் தவறியதற்கு உங்களுக்கு நியாயமான காரணங்கள் ஏதும் இல்லை என்று நீதிமன்றம் மனநிறைவடைந்தால், உங்களுக்குப் பிணை வழங்கியவர் அழைக்கப்பட்டு, நீதிமன்றம் ஏன் பிணை முறியைப் பறிமுதல் செய்யக்கூடாது என்று விளக்கவோ, மற்றும்/அல்லது பிணை தொகையைச் செலுத்தவோ உத்தரவிடப்படலாம். நீங்கள் நீதிமன்றத்திற்கு வரத் தவறியதற்கு நியாயமான காரணங்கள் ஏதும் இல்லையென்றால், உங்களுக்குப் பிணை வழங்கியவர் நீதிமன்றத்திடம் பிணை உத்தரவாதமாக வைத்த பணத்தையோ சொத்துக்களையோ இழக்க நேரிடலாம்.

நீங்கள் சுய பிணை முறியின் நிபந்தனைகளை மீறினால், உங்களின் பிணை முறி பறிமுதல் செய்யப்படும். முழு பிணை தொகையையும் நீங்கள் செலுத்த தேவையில்லை என்பதற்கு உங்களால் விளக்கம் அளிக்க முடிந்தாலெயன்றி, பறிமுதல் செய்யப்பட்ட முழு தொகையையும் நீங்கள் செலுத்தும்படி அவசியப்படுத்தப்படும்.

நீதிமன்றம் பிணை அல்லது சுய பிணை முறியைப் பறிமுதல் செய்து, பிணை முறி தொகை அனைத்தும் அல்லது அதில் ஒரு பகுதி செலுத்தப்படவேண்டுமென கட்டளையிட்டால், அக்கட்டணம், பிணை வழங்கியவரால் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரால் செலுத்தப்பட வேண்டும். இல்லையெனில், நீதிமன்றம் பிணை வழங்கியவருக்கு அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு (ஏற்றவாறு), 12 மாதத்திற்கும் மேல் போகாத சிறைத் தண்டனையை விதிக்கும் சாத்தியம் உள்ளது.

***நீங்கள், உங்களின் பிணை நிபந்தனைகளை மீறினால், உங்களின் பிணை இரத்து செய்யப்படலாம் மற்றும் பிணை தொகை பறிமுதல் செய்யப்படலாம்.***

### *(10) நான் பிணையில் இருக்கும்பொழுது, சிங்கப்பூரை விட்டு வெளியூர் செல்வதற்கு எவ்வாறு விண்ணப்பம் செய்வது?*

அதற்காக, நீங்கள், ஒரு முறையான விண்ணப்பத்தை எழுத்து வடிவில் செய்யலாம், **ICMS**-ல் இணையவழி விண்ணப்பத்தைத் தாக்கல் செய்யலாம் அல்லது அரசு நீதிமன்றங்களின் 4-வது தளத்தில் அமைந்துள்ள பிணை நிலையத்தில் கிடைக்கப்பெறும் பொதுவான விண்ணப்ப படிவத்தைச்

சமர்ப்பிக்கலாம். அவ்விண்ணப்பத்தில், அறிவிப்பு/விசாரணைக்கு முந்திய கூட்டங்கள் (**PTC**)/வழக்கு விசாரணை தேதி(கள்), வழக்கு குறிக்கப்பட்டிருக்கும் நீதிமன்றம், திட்டமிடப்பட்டுள்ள பயணத்தின் கால அளவு, பயணிக்கவுள்ள இடம் மற்றும் பயணம் செய்வதற்கான காரணம் போன்ற தெளிவான விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

விண்ணப்பம் செய்யப்பட்ட பிறகு, நீதிபதி விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்வார். நீதிபதி விண்ணப்பத்தை விசாரிக்க சம்மதித்தால், நீதிமன்றத்திற்கு வர வேண்டிய தேதி உங்களுக்குத் தெரிவிக்கப்படும்.

நீதிமன்ற அறிவிப்பன்று நீதிமன்றத்திற்கு நீங்களும் உங்களுக்குப் பிணை வழங்கியவரும் வர வேண்டும் மற்றும் விண்ணப்பத்திற்கான காரணம்(களை) கூற வேண்டும். நீங்கள் பயணிக்க எண்ணியுள்ள இடத்தின்(களின்) பெயரோடு, நீங்கள் சிங்கப்பூரைவிட்டு வெளியேறும் மற்றும் திரும்பும் தேதிகளை நீதிமன்றத்திடம் தெரிவிக்கவேண்டும். உங்களின் விண்ணப்பத்தை நீதிமன்றம் கருத்தில் கொள்வதற்கு முன், உங்களுக்குப் பிணை வழங்கியவரும் அவரின் ஒப்புதலை வழங்க வேண்டும். விண்ணப்பத்தைக் குறித்த அதன் நிலைப்பாட்டைத் தெரிவிக்க அரசு தரப்பிற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

இரு தரப்பையும் கேட்ட பின்னர், நீதிமன்றம் அனுமதி வழங்க மறுக்கலாம் அல்லது சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கலாம். அதிகார எல்லையை விட்டு வெளியேறுவதற்கான விண்ணப்பம் அனுமதிக்கப்பட்டால் அரசு தரப்பு பிணை தொகையை அதிகரிப்பதற்கு விண்ணப்பிக்கலாம். இந்த விண்ணப்பத்தை அனுமதிப்பதா அல்லது மறுப்பதா என்று நீதிமன்றம் அதன்பிறகு முடிவுசெய்யும்.

**ICMS**-ல் இணையம்வழி விண்ணப்பத்தைத் தாக்கல் செய்வதற்கும் அதே விவரங்களான விண்ணப்பத்திற்கான காரணங்கள் மற்றும் பயண விவரங்கள் அனைத்தும் வழங்கப்பட வேண்டும். முதல் முறையாக செய்யப்படும் விண்ணப்பத்திற்குக், கொடுக்கப்பட்டிருக்கும் அறிவிப்பு தேதிகளில் இருந்து ஓர் அறிவிப்பு தேதியை நீங்கள் கேட்டுக்கொள்ள முடியும். அறிவிப்பு நாளன்று, **LEJUR** (அதிகார எல்லையை விட்டு வெளியேறுதல்) விண்ணப்பத்திற்கு ஒப்புதலளிப்பதைப்பற்றி நீதிபதி முடிவுசெய்வார். இந்த நீதிமன்ற அறிவிப்பிற்குப் பிறகு, முதல் **LEJUR**

விண்ணப்பம் அனுமதிக்கப்பட்டால், பிணை வழங்கியவரும் எதிர்கால LEJUR விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் கொடுத்தால், ICMS வழி அடுத்தடுத்துத் தாக்கல் செய்யப்படும் எந்தவொரு விண்ணப்பங்களும் அரசு நீதிமன்றங்களின் பரிசீலனைக்கு நேரடியாக அனுப்பிவைக்கப்படும். இதனால், நீதிமன்றத்தில் தரப்பினர்கள் தோன்றவேண்டிய தேவை இல்லை. தயவுசெய்து ICMS-க்குள் உங்களின் சிங்பாஸ்-யைக் (SingPass) கொண்டு உட்புகுந்து உங்கள் விண்ணப்பத்தின் முடிவறிய அடிக்கடி கண்காணிக்கவும். விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால், நீங்கள் சிங்கப்பூரைவிட்டு வெளியேற உங்களுக்கு அனுமதி இல்லை என்று உங்களிடம் தெரிவிக்கப்படும்.

### (G) நீதிமன்ற நடையொழுங்கு விதிமுறைகள்

நீதிமன்ற விசாரணைக்கு வரும்பொழுது நீங்கள் அடிப்படை நீதிமன்ற நடையொழுங்கு விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். உங்களுக்கு உதவ இதோ சில வழிகாட்டல்கள்.

| | செய்ய வேண்டியவை | செய்யக் கூடாதவை |
|---|---|---|
| **தயார் செய்தல்: நேரம் தவறாமை மற்றும் உடை** | பாதுகாப்புச் சோதனைக்காக குறித்த நேரத்திற்கு முன்னரே வந்துவிடுங்கள். | எந்தவொரு நீதிமன்றத் தேதியையும் தவற விடாதீர்கள். நீங்கள் நீதிமன்றத்திற்கு வரத் தவறினால் உங்களுக்கு எதிராக பிடியாணை உத்தரவிடப்படலாம். |
| | பொருத்தமான உடையணியுங்கள்; அலுவலக உடை அணிவது சிறந்தது. | ஆர்வம் காட்டப்படாத சாதாரண உடைகள் அல்லது உடல் தெரியும் மற்றும் மனதைப் புண்படுத்தக்கூடிய ஆடைகளை அணியாதீர்கள். |
| | உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், (1-ம் தளத்தில் அமைந்துள்ள) தகவல் முகப்பை நாடுங்கள். | தவறான நீதிமன்றத்திற்குச் செல்லாதீர்கள். |
| **தயார் செய்தல்: நேரம் தவறாமை மற்றும் உடை** | விசாரணை தேதியன்று நீங்கள் ஆதாரங்களாகப் பயன்படுத்த எண்ணும் அனைத்து ஆவணங்களின் 4 நகல்களைக் கொண்டுவாருங்கள் (நீதிபதிக்கு, அரசு தரப்பிற்கு, சாட்சிகளுக்கு மற்றும் உங்களுக்கு). | மதம் சாராத் தலை அணிகளை நீதிமன்றத்திற்கு அணிந்து வராதீர்கள். எ.டு. தலை கவசங்கள், தொப்பிகள், குல்லாக்கள் அல்லது வெயில் காப்பு கண்ணாடிகள். |

| | | |
|---|---|---|
| | உங்களின் அசல் அடையாள அட்டை, வேலை அனுமதி அட்டை, கடவுச்சீட்டு அல்லது வேறேதாவது அதிகாரபூர்வ அடையாள ஆவணங்களைக் கொண்டுவாருங்கள். | கால்களை மறைக்காத காலணிகளை அணியாதீர்கள் எ.டு. செருப்பு. |
| **வருகைக்குப் பின் என்ன செய்ய வேண்டும்** | நீங்கள் சரியான நீதிமன்றத்தில்தான் இருக்கிறீர்களா என்று உறுதிசெய்து கொள்ளுங்கள். | நீதிமன்றத்திற்குள் நுழைந்ததும் சத்தமாகப் பேசாதீர்கள். |
| | நீதிமன்றத்தை வந்தடைந்ததும் நீதிமன்ற அதிகாரியிடம் உங்களின் வருகையைத் தெரிவியுங்கள், அதுவும் குறிப்பாக விசாரணைக்காக நீங்கள் நீதிமன்றத்திற்கு வந்துள்ளீர்கள் என்றால். | பொறுமையை இழக்காதீர்கள். நீங்கள் அழைக்கப்படும் வரை காத்திருங்கள். |
| | கைத் தொலைபேசியை அடைத்துவிடுங்கள் அல்லது அமைதிப்படுத்துங்கள். | நீதிமன்றம் அமர்வில் இருக்கும்போது தொலைபேசி அழைப்புகளை ஏற்காதீர்கள் அல்லது குறுந்தகவல்களுக்குப் பதில் அளிக்காதீர்கள். |
| **நீதிமன்றத்திற்குள் பொதுவான நடத்தை** | நீதிமன்றம் அமர்வில் இருக்கும்போது நீதிமன்றத்திற்குள் நுழையும்போதும் வெளியேறும்போதும் அரசு சின்னத்திற்குத் தலை தாழ்த்தி வணங்குங்கள். | புகைப்படங்களை எடுக்காதீர்கள் அதோடு குரல் அல்லது காணொளிப் பதிவுகள் செய்யாதீர்கள். |
| **நீதிமன்றத்தில் மற்றவர்களை அழைக்கும் விதம்** | நீதிபதியை "மரியாதைக்குரிய நீதிபதி அவர்களே" (யுவர் ஆன்னர்) என்று அழையுங்கள். | அவமரியாதையான, அவமானமான அல்லது கொச்சையான எதையும் நீதிமன்றத்தில் கூறாதீர்கள். |
| | அரசு தரப்பு வழக்கறிஞரை "கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞரே" என்று அழையுங்கள். | |
| | சாட்சிகளை அவர்களின் குடும்பப் பெயரைக் கொண்டு அழையுங்கள். எ.டு. குமாரி டான் அல்லது குமாரி கமலா. | |

| | | |
|---|---|---|
| **நீதிமன்றத்தில் பேசுவது** | நீதிமன்றத்தில் கூறப்படும் அனைத்தும் பதிவு செய்யப்படும் என்பதால், ஒலிப்பெருக்கியினுள் தெளிவாகவும் மெதுவாகவும் பேசுங்கள். | உங்கள் வார்த்தைகளைத் தெளிவின்றி உச்சரிக்காதீர்கள். |
| | தொடரும் முன் உங்களின் முந்திய வாக்கியத்தை மொழிபெயர்ப்பாளர் மொழிபெயர்த்து முடிக்கும்வரை காத்திருங்கள். | ஒரு மொழிபெயர்ப்பாளர் மூலம் நீங்கள் பேசுகிறீர்கள் என்றால், பல்வேறு மொழிகளில் கலந்து பேசாதீர்கள். |
| | பதிலளிக்கும் முன் கேள்வி முழுமையாக கேட்கப்படும்வரை காத்திருங்கள். | மற்றவர்கள், குறிப்பாக நீதிபதி பேசும்போது குறுக்கிடாதீர்கள். பேச உங்கள் முறை வரும் வரை காத்திருங்கள். |
| **தெளிவுகள் செய்வது அல்லது நாடுவது** | உங்களின் பதிலை நீங்கள் தெளிவுப்படுத்திக்கொள்ள விரும்பினால், நீதிபதியிடம் பணிவான முறையில் அனுமதி கேளுங்கள். | உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் புரியவில்லை என்றால், அவற்றைத் தெளிவுப்படுத்திக்கொள்ள தயங்காதீர்கள். |
| | அடுத்து வரும் மேலும் நீதிமன்றத் தேதிகளுக்கான விவரங்களைக் குறித்துக்கொள்ளுங்கள். | உங்களுக்கு ஆலோசனை வழங்குமாறு நீதிபதியிடம் கேட்காதீர்கள்; நீதிமன்றம் அவ்வாறு செய்ய முடியாது. |

# 03

# அறிவிப்பு நீதிமன்றங்கள்

**(A)** தொடக்கவுரை

**(B)** குற்றவியல் அறிவிப்பு நீதிமன்றங்களில் நடவடிக்கைகள்

**(C)** இரவு நீதிமன்றங்கள் - ஒழுங்குமுறை சார்ந்த மற்றும் சிறு போக்குவரத்து குற்றச்செயல்கள்

**(D)** கடிதம் வழி குற்ற ஒப்புதல்

அத்தியாயம் 3

# அறிவிப்பு நீதிமன்றங்கள்

## (A) தொடக்கவுரை

ஒரு குற்றவியல் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர், முறைப்படி குற்றஞ்சாட்டப்படவும், அவரது வாதத்தை முன்வைக்கவும் (குற்றத்தை ஒப்புக்கொள்வது அல்லது மறுப்பது) நேர்முகமாக வருகை தரவேண்டிய முதல் நீதிமன்றமே குற்றவியல் அறிவிப்பு நீதிமன்றம். குற்றவியல் அறிவிப்பு நீதிமன்றங்கள் பகல் நேர அறிவிப்பு நீதிமன்றங்கள் மற்றும் இரவு நேர அறிவிப்பு நீதிமன்றங்கள் (இரவு நீதிமன்றங்கள்) என இரண்டையும் உள்ளடக்கும்.

நீதிமன்றத்தில் நேர்முகமாக வருகை தரவேண்டியது கட்டாயமாகும். நீங்கள் நீதிமன்றத்திற்கு வரத் தவறினால், உங்களுக்கெதிராக ஒரு கைது ஆணை பிறப்பிக்கப்படலாம். நீங்கள் பிணையில் இருக்கும்போது நீதிமன்றத்திற்கு வரத் தவறினால், பிணை தொகை ஏன் பறிமுதல் செய்யப்படக்கூடாதென்று உங்களுக்குப் பிணை வழங்கியவர் நீதிமன்றத்திடம் விளக்கமளிக்க வேண்டும்.

## (B) குற்றவியல் அறிவிப்பு நீதிமன்றங்களில் நடவடிக்கைகள்

### *(1) அறிவிப்புகளுக்கு வருமாறு அழைப்பு*

இதுதான் செயல்முறையின் முதல் கட்டம். வழக்குத் தொடரும் தரப்பு அதிகாரபூர்வமாக உங்களைக் குற்றஞ்சாட்டத் தயாராக இருக்கும்போது நீங்கள் அறிவிப்பு நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்படுவீர்கள். நீங்கள் வருகை தர வேண்டிய அறிவிப்பு நீதிமன்றம் எதுவென உங்களிடம் கொடுக்கப்பட்ட அறிவிப்பு, அழைப்பாணை அல்லது பிணை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது நீங்கள் நீதிமன்றத்திற்கு வருகை தர வேண்டிய தேதியையும் நேரத்தையும் கூட குறிப்பிடும்.

தனி நபர் என்ற அடிப்படையில் நீங்கள் குற்றஞ்சாட்டப்பட்டால், தயவுசெய்து உங்களின் புகைப்படம் மற்றும் உங்களின் சுய விவரங்கள் (எ.டு. அடையாள அட்டை அல்லது ஓட்டுனர் உரிமம்) அடங்கிய அடையாள ஆவணத்தைக் கொண்டு வரவும். குற்றஞ்சாட்டப்பட்ட நிறுவனம் ஒன்றின் சார்பாக (அல்லது வேறு ஏதேனும் கூட்டு நிறுவனம்), நீங்கள் தோன்றுவதாகயிருந்தால், தயவுசெய்து உங்களின் அடையாள ஆவணத்தோடு குற்றஞ்சாட்டப்பட்ட நிறுவனத்திடமிருந்து அல்லது வேறு கூட்டு நிறுவனத்திடமிருந்து

அதிகாரம் வழங்கும் ஒரு செல்லத்தக்க அதிகாரமுறை கடிதம்[5] ஒன்றையும் **(Letter of Authorisation)** கொண்டு வரவும்.

***உங்களின் அடையாளத்தை உறுதிப்படுத்த உங்களின் புகைப்படம் கொண்ட அடையாள ஆவணத்தைக் கொண்டு வருவது அதி முக்கியமாகும்.***

### *(2) அறிவிப்புகளுக்கு முன்பு*

நீங்கள் அரசு நீதிமன்றங்களை வந்தடையும்போது, அறிவிப்பு நீதிமன்றம் அமைந்திருக்கும் இடத்தைக் கண்டறிய உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் தகவல் முகப்பை நீங்கள் அணுகலாம்.

### *(3) அறிவிப்புகளின்போது*

அறிவிப்பு நீதிமன்றத்தில் மற்ற பல வழக்குகள் விசாரிக்கப்படுவதை நீங்கள் காண்பீர்கள். உங்களின் பெயர் அழைக்கப்படுகிறதா என்று கூர்ந்து கேட்டு, உங்களின் பெயர் அழைக்கப்படும்போது எழுந்து நில்லுங்கள். நீதிமன்ற அதிகாரியிடம் உங்களின் அடையாள ஆவணத்தைக் காட்டுங்கள். அதன் பிறகு, குற்றஞ்சாட்டப்பட்டவர்/குற்றவாளிக்கானக் கூண்டில் நிற்கும்படி நீங்கள் கேட்டுக்கொள்ளப்படலாம். குற்றச்சாட்டு(கள்) உங்களிடம் படிக்கப்படுவதற்கு முன்பு, நீங்கள் எந்த மொழியில் பேச விரும்புகிறீர்கள் என்று ஒரு மொழிபெயர்ப்பாளர் கேட்பார். குற்றச்சாட்டும் அதற்குரிய வரையறுக்கப்பட்ட தண்டனையும் நீங்கள் தேர்ந்தெடுக்கும் மொழியில் உங்களிடம் வாசித்து விளக்கப்படும். உங்களுக்கு எதிரான குற்றச்சாட்டு எதைப் பற்றியது மற்றும் உங்களுக்கு விதிக்கப்படக்கூடிய தண்டனையின் வரம்பு ஆகியவை என்ன என்பதை நீங்கள் புரிந்துகொண்டீர்கள் என்று உறுதிபடுத்திக்கொள்ளுங்கள். உங்களுக்குப் புரியவில்லை என்றால் தெளிவுபடுத்திக்கொள்ள பயப்பட வேண்டாம்.

### *(4) குற்றச்சாட்டுக்கள் படிக்கப்பட்ட பிறகு*

உங்களிடம் குற்றச்சாட்டு(கள்) படிக்கப்பட்டவுடன், பின்வரும் ஏதேனும் ஆணைகளை நீதிபதி பிறப்பிக்கலாம்:-

---

[5] அதிகாரமுறை கடிதம் (LA) குற்றவியல் நடைமுறைச் சட்டம் (அத்தியாயம் 68) பிரிவு 117(6)ல் குறிப்பிடப்பட்டிருக்கும் தேவைகளுக்கு உடன்படவேண்டும். LA அதிகாரபூர்வ அலுவலக அஞ்சல் தாளில் அச்சிடப்பட்டு இயக்குநர்/பங்காளி, நிர்வாகி, நிறுவன செயலாளர் அல்லது நிறுவனத்தின் வேறு ஏதேனும் அதிகாரியால் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும். கூட்டிணையாச் சங்கங்களுக்குத், தலைவர், செயலாளர் அல்லது குழுவில் ஏதேனும் ஓர் உறுப்பினர் LA-ல் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

(a) **வழக்கு வாதத்தைப் பெறுமாறு உத்தரவு (குற்ற ஒப்புதல் அல்லது மறுப்பைப் பெறுதல்)** – நீங்கள் குற்றச்சாட்டை ஒப்புக்கொள்கிறீர்களா அல்லது விசாரணை கோர விரும்புகிறீர்களா என்று குறிப்பிடும்படி நீதிமன்றம் உங்களைக் கேட்குமென்று இது பொருள்படும். குற்றச்சாட்டை ஒப்புக்கொள்வது மாறாக விசாரணை கோருவது போன்றவற்றைப் பற்றி மேலும் தகவல் பெற, தயவுசெய்து அத்தியாயம் 2(D)-ல் "குற்ற ஒப்புதல் அதற்கு மாறாக விசாரணை கோருதல்" என்பதைக் காணவும்.

(b) **காவலில் வைக்க உத்தரவு** - குற்றஞ்சாட்டப்பட்டவர் சிறைச்சாலையின் பாதுகாப்பில் இருப்பதே காவலில் வைக்கப்படும் கட்டமாகும். இரண்டு சூழல்களில் நீங்கள் காவலில் வைக்கப்படலாம்:

(i) முதல் சூழலில், புலன் விசாரணைகள் நடத்தும் நோக்கத்திற்காக உங்களைக் காவலில் வைக்க அரசு தரப்பினர் விண்ணப்பிக்கலாம். தகுதி அடிப்படையிலும் மற்றும் நிறுவப்பட்ட சட்ட நெறிகளுக்கு ஏற்பவும் அந்த விண்ணப்பத்தை அனுமதிப்பதா இல்லையா என்று நீதிமன்றம் பரிசீலிக்கும். அத்தகைய ஆணையைப் பிறப்பிப்பது தகுந்த ஒன்றே என்று நீதிமன்றம் மனநிறைவடைந்தால், காவலில் வைப்பதற்கான ஆணை பிறப்பிக்கப்படும்.

(ii) இரண்டாவது சூழலில், பிணை வழங்கப்படாத அல்லது பிணை வழங்கப்பட்டும் அதற்கு ஏற்பாடு செய்யப்படாத வழக்குகளில், பிணை ஏற்பாடு செய்யப்படும் வரை அல்லது வழக்கு முடியும் வரை, இதில் எது முதலில் இடம்பெறுகிறதோ, நீங்கள் சிறையில் காவலில் வைக்கப்படுவீர்கள்.

(c) **வழக்கைப் பின்னொரு தேதிக்கு ஒத்திவைப்பது** - நீங்களோ அல்லது வழக்கை நடத்தும் அரசு தரப்பு அதிகாரியோ வழக்கை ஒத்திவைக்குமாறு கேட்கும்போது இது வழக்கமாக நடக்கும். விண்ணப்பம் அதன் தகுதி அடிப்படையிலும் சட்டத்திற்கு ஏற்பவும் பரிசீலிக்கப்படும். ஒத்திவைப்புகள் குறித்து மேலும் தகவல் பெற, தயவுசெய்து அத்தியாயம் 2(E)-ல் "ஒத்திவைப்புகள்" என்பதைக் காணவும்.

### *(5) நான் குற்றத்தை ஒப்புக்கொள்ள (PG) முடிவெடுத்தால் என்ன நடக்கும்?*

குறிப்பிட்ட வகை வழக்குகளுக்கு, நீங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ள முடிவு செய்தால், அறிவிப்பு நீதிமன்றம் உங்களின் வழக்கை விசாரித்து, நீங்கள் அக்குற்றத்தைச் செய்தீர்களா என்று முடிவு செய்து, தண்டனை தீர்ப்பை உங்களுக்கு வழங்கலாம். மற்றபடி, அறிவிப்பு நீதிமன்றம், வழக்கமாக, உங்களின் வழக்கு, தண்டனை விதிக்கும் ஒரு நீதிமன்றத்தால் **(PG Courts**

என்று வழக்கமாக குறிப்பிடப்படும்) விசாரிக்கப்பட மாற்றிவிடும். உங்களின் அடுத்த விசாரணை, குற்றத்தை ஒப்புக்கொள்வதற்கான அறிவிப்பு **PG Mention** என்று குறிப்பிடப்படும். அறிவிப்பு நீதிமன்றம் உங்களின் **PG Mention**-ன் அடுத்த தேதி, நேரம் மற்றும் இடம் ஆகியவற்றை உங்களுக்குத் தெரிவிக்கும். தண்டனை விதிப்பு குறித்த தகவலுக்கு, அத்தியாயம் 6 - தண்டனை விதிப்பைக் காணவும்.

### *(6) நான் விசாரணை கோர முடிவு செய்தால் என்ன நடக்கும்?*

நீங்கள் விசாரணை கோர முடிவு செய்தால் உங்களின் வழக்கு, ஒரு விசாரணைக்கு முந்திய கூட்டத்திற்குச் **(PTC)** செல்ல பதியப்படும். வழக்கு, அறிவிப்பு நீதிமன்றத்திலிருந்து விசாரணைக்கு முந்திய கூட்ட நிலையத்திற்கு மாற்றிவிடப்படும். உங்களின் **PTC**-க்கான அடுத்த தேதி, நேரம் மற்றும் இடம் ஆகியவற்றைக் குறித்து அறிவிப்பு நீதிமன்றம் உங்களுக்குத் தெரிவிக்கும். **PTC** குறித்த தகவலுக்கு, அத்தியாயம் 4 - விசாரணைக்கு முந்திய கூட்டத்தைக் காணவும்.

### *(7) வழக்கு ஒத்திவைக்கப்பட்டால்*

வழக்கு பின்னொரு தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டால், அடுத்த விசாரணை வரை உங்களைப் பிணையில் விடுவிப்பதைக் குறித்து நீதிபதி முடிவு செய்வார். பிணையில் இருக்கும்போது அடுத்த விசாரணைக்கு நீங்கள் வரத் தவறலாம் அல்லது வேறு குற்றங்களைப் புரியலாம் என்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்தாலேயன்றி, வழக்கமாகப் பிணை வழங்கப்படும். தற்போதிருக்கும் உங்களின் பிணை நீட்டிக்கப்படலாம் அல்லது புதிய நீதிமன்ற பிணை வழங்கப்படலாம். ஒரு வேளை உங்களைப் பிணையில் எடுக்க யாரேனும் ஒருவர் தேவைப்படலாம் என்பதால், அறிவிப்பு நீதிமன்றத்துக்கு முதல் முறையாக நீங்கள் வரும்போது சிங்கப்பூரரான குடும்ப உறுப்பினர் அல்லது நண்பரை நீங்கள் அழைத்து வர வேண்டும். பிணை குறித்து மேலும் தகவல் பெற, பிணை/சுய பிணை முறி குறித்த அத்தியாயம் 2**(F)**-யைக் காணவும்.

## (C) இரவு நீதிமன்றங்கள் - ஒழுங்குமுறை சார்ந்த மற்றும் சிறு போக்குவரத்து குற்றச்செயல்கள்

### *(1) அறிவிப்புகள் ஏன் மாலையில் நடத்தப்படுகின்றன?*

ஒழுங்குமுறை சார்ந்த மற்றும் சிறு போக்குவரத்து குற்றச்செயல்களுக்கான அறிவிப்புகள் வழக்கமாக இரவு நீதிமன்றங்கள் வழியாக கையாளப்படுகின்றன. இரவு நீதிமன்றங்கள் 1992–ல் அமைக்கப்பட்டன மற்றும் வேலையிலிருந்து ஒரு நாள் விடுப்பு எடுக்கும் அவசியத்தைத் தவிர்க்க உதவும் வகையில் பொது மக்களின் வசதிக்காக மாலையில் செயல்படுகின்றன.

ஒழுங்குமுறை மற்றும் சிறு போக்குவரத்து குற்றங்களுக்கான நடவடிக்கைகள், வழக்கமாக, நீதிமன்றத்தில் தோன்றும்படி விடுக்கப்படும் அறிவிப்பு (அறிவிப்பு) அல்லது அழைப்பாணை வழியாகத் தொடங்குகின்றன. நீங்கள் எந்த நீதிமன்றத்துக்குச் செல்ல வேண்டும், அறிவிப்புக்காக நீங்கள் வர வேண்டிய தேதி மற்றும் நேரம் ஆகியவற்றை அந்த அறிவிப்பு அல்லது அழைப்பாணை குறிப்பிடும்.

உங்களின் நீதிமன்றத் தேதிகளை நீங்கள் கவனத்தில் வைத்திருப்பது முக்கியமாகும். நீங்கள் நீதிமன்றம் வரத் தவறினால், உங்களுக்கெதிராக பிடியாணை உத்தரவிடப்படலாம். குறிப்பிட்ட வழக்குகளில், உங்களுக்கெதிரான வழக்குகள் முற்றுப்பெறும் வரை அல்லது நீதிமன்றம் பொருத்தமென்று கருதும் காலக்கட்டம் வரை நீங்கள் வாகனமோட்டும் உரிமம் வைத்திருக்கவும் பெறவும் தகுதி இழந்தவராவீர்கள். மேலும், பிணை தொகை ஏன் பறிமுதல் செய்யப்படக்கூடாதென்று உங்களைப் பிணையில் எடுத்தவர் நீதிமன்றத்திடம் விளக்கமளிக்க வேண்டும்.

***நீங்கள் நீதிமன்றம் வரத் தவறினால், உங்களுக்கெதிராக பிடியாணை உத்தரவிடப்படலாம். உங்களின் பிணை தொகையும் பறிமுதல் செய்யப்படலாம்.***

### *(2) இரவு நீதிமன்ற வழக்குகளுக்குக் குற்றம் சம்பந்தமான இணக்கத் தீர்வுகள்*

வழக்கைத் தொடரும் முகமை இணக்கத் தீர்வு வழங்கினால் குற்றத்தை இணக்கமாக நீங்கள் தீர்த்துக்கொள்ளலாம். இணக்கத் தீர்வுக்காக வழங்கப்பட்ட தேதிக்குள், எச்சூழலிலும், இரவு நீதிமன்றத் தேதிக்கு முன்பாகப் பணம் செலுத்தப்பட வேண்டும். தவறினால், நீங்கள் இரவு நீதிமன்றத்திற்கு வர வேண்டும். நீதிமன்றம் உங்களைக் குற்றவாளி என தீர்ப்புரைத்தால், அதற்கு விதிக்கப்படும் அபராதத் தொகை, பொதுவாக, இணக்கத் தீர்வுக்கு வழங்கப்படும் அபராதத் தொகையை விட அதிகமாக இருக்கும்.

ஆதலால், உங்களின் நலன் கருதி, உங்களின் குற்றங்களுக்கான இணக்கத் தீர்வைப்பற்றிச் சம்பந்தப்பட்ட முகமைகளிடம் முன்னரே கூடுதல் தகவல் கேட்டறிந்து, இணக்கத் தீர்வு வழங்கப்படும் சந்தர்ப்பங்களில், இணக்கமாகத் தீர்த்துக்கொள்ளவும்.

போக்குவரத்து காவல் துறை, நிலப் போக்குவரத்து ஆணையம், வீடமைப்பு வளர்ச்சிக் கழகம் மற்றும் நகரச் சீரமைப்பு ஆணையம் இவற்றால் வழக்கு தொடரப்பட்ட சிறு போக்குவரத்து மற்றும் வாகனம் நிறுத்தும் குற்றங்களுக்குத் தீவு முழுவதும் உள்ள எல்லா **AXS** கணியகங்களிலும், **AXS** இணையத் தளத்திலும் அல்லது **AXS** செயலியிலும் காணப்படுகிற தானியங்கி போக்குவரத்து குற்ற நிர்வாக முறை (**ATOMS**) வழியாக இணக்கத் தீர்வு பெறலாம். **AXS** வழியாக **NETS** மற்றும் கடன் அட்டை பரிவர்த்தனைகள் மூலம் பணம் செலுத்தலாம். இது இணக்கத் தீர்வு அபராதத்தைச் செலுத்த வசதியான வழியாகும்.

எனினும், நீங்கள் குற்றத்தை இணக்கத் தீர்வின் வழி தீர்த்துக்கொள்ள, சாதாரணமாக ஒரு குறிப்பிட்ட காலக்கெடு உள்ளது. நீங்கள் குற்றத்தை இணக்கத் தீர்வின் வழி தீர்த்துக்கொள்வதற்கான காலக்கெடு காலாவதியாகிவிட்டால், நீங்கள் செய்ய வேண்டியது:

**(a)** குற்றத்தை ஒப்புக்கொண்டு **ATOMS**-யைப் பயன்படுத்தி (உங்களின் குற்றத்திற்கு இவ்வாறு பணம் செலுத்தும் தேர்வு இருந்தால்) நீதிமன்ற அபராதத்தைச் செலுத்துவது; அல்லது
**(b)** குற்றத்தை ஒப்புக்கொள்ள இரவு நீதிமன்றங்களில் தோன்றுவது.

இணக்கத் தீர்வு சலுகை வழக்குத் தொடரும் முகமையால் இரத்து கூடச் செய்யப்படலாம், எடுத்துக்காட்டுக்கு, நீங்கள் நீதிமன்றம் வரத் தவறி, பிடியாணை பிறப்பிக்கப்படும்போது. ஆகவே, உங்களின் நலன் கருதி இணக்கத் தீர்வு சலுகை உங்களுக்குக் கிடைக்கும் போதே முன்னதாகவே குற்றத்தை இணக்கத் தீர்வு மூலம் தீர்த்துக்கொள்வது நல்லது.

### *(3) அபராதத்தைச் செலுத்துவதற்கு முன் எனக்கு அவகாசம் தேவைப்பட்டால்?*

உங்களின் வழக்கு அறிவிக்கப்படும் நேரத்திற்கு முன் உங்களின் சிங்பாஸ்-யைப் (**SingPass**) பயன்படுத்தி, இணையம் வாயிலாக ஒருங்கிணைந்த வழக்கு நிர்வாக முறையை (**ICMS**) அணுகி, வழக்கை ஒத்திவைப்பதற்கான காரணத்தைக் குறிப்பிட்டு, வழக்கை ஒத்திவைக்க விண்ணப்பிக்கலாம். நீங்கள் **ICMS**-ல் இணையம் வழியாக வழக்கை ஒத்திவைக்க விண்ணப்பம் செய்தால்,

விண்ணப்பத்திற்கான முடிவை அறிய **ICMS**-யைக் கண்காணிக்க வேண்டும். விண்ணப்பம் அனுமதிக்கப்பட்டால், **ICMS**-ல் ஒத்திவைக்கப்பட்ட அடுத்த நீதிமன்ற தேதி குறித்து தகவல் வரும். உங்களின் விண்ணப்பம் மறுக்கப்பட்டால், அவசியப்பட்டவாறு நீங்கள் இரவு நீதிமன்றத்தில் தோன்ற வேண்டும். இல்லையெனில், உங்களுக்கெதிராக பிடியாணை உத்தரவிடப்படலாம்.

நீங்கள் சம்பந்தப்பட்ட சட்ட அமலாக்க முகமைகளுக்குப் பிரதிநிதித்துவம் செய்யவும், சொந்த விவகாரங்களைத் தீர்த்துக் கொள்ளவும் அல்லது நீதிமன்ற அபராதத்திற்காகப் பணம் திரட்டவும் நீதிமன்றத்தின் விருப்புரிமைக்கேற்ப நீதிமன்ற நடவடிக்கைகளின் ஆரம்பக் கட்டத்தில் ஒத்திவைப்புகள் அனுமதிக்கப்படலாம். அதே காரணத்திற்காக மீண்டும் மீண்டும் கேட்கப்படும் ஒத்திவைப்புகள் அனுமதிக்கப்படுவதற்கான சாத்தியம் குறைவே. **ICMS**-ல் இணையம் வழி **(ICMS)** வழக்கு ஒத்திவைப்பு விண்ணப்பம் செய்வதையொட்டி மேலும் தகவல் பெற, அத்தியாயம் **2(E)**-ல் "ஒத்திவைப்புகள்" என்ற தலைப்பைக் காணவும்.

### *(4) இரவு நீதிமன்றங்களில் அறிவிப்புகளின்போது என்ன நடக்கும்?*

இரவு நீதிமன்றங்களுக்கு வெளியில் உள்ள கணியகத்தில் நீங்கள் முதலில் பதிவு செய்ய வேண்டியிருக்கும். அதன் பிறகு, விசாரணையின் நடைமுறை சாதாரண அறிவிப்பு நீதிமன்றத்தின் விசாரணையைப் போன்றே இருக்கும். மேலும் தகவலறிய இந்த அத்தியாயத்தின் பிரிவு (B)-யைக் காணவும். நீங்கள் நீதிமன்றத்திற்கு வரும்போது, உங்களின் நீதிமன்றத்தில் தோன்றுவதற்கான அறிவிப்பு தாள், அழைப்பாணைகள், பிணை பத்திரம் அல்லது இவற்றைப் போன்ற தொடர்புடைய ஆவணங்களைக் கொண்டு வர வேண்டும்.

### *(5) என் வழக்கு இரவு நீதிமன்றங்களில்தான் எப்பொழுதும் விசாரிக்கப்படுமா?*

இல்லை. பின் வருபவற்றை முன்னிட்டு நீதிபதி பகல் நேர நீதிமன்றங்களுக்கு வழக்கை மாற்ற தீர்மானிக்கக்கூடும்:

**(a)** நீங்கள் விசாரணை கோர தீர்மானித்தால்; அல்லது
**(b)** பகல் நேர நீதிமன்றங்களின் மூலம் வழக்கைக் கையாள்வது மேலும் பொருத்தமாக இருக்கும் என்று நீதிபதி கருதினால்.

உங்களின் வழக்கு நீதிமன்றம் **4BN**-ல் விசாரிக்கப்பட்டிருந்தால், உங்களின் வழக்கு, பகல் நேர நீதிமன்றம் **7B**-ல் இடம்பெறும். உங்களின் வழக்கு நீதிமன்றம் **4AN**-ல் விசாரிக்கப்பட்டிருந்தால், உங்களின் வழக்கு பகல் நேர

நீதிமன்றம் **7A**-ல் இடம்பெறும். உங்களின் வழக்கு பகல் நேர நீதிமன்றங்களுக்கு மாற்றப்பட்டால், உங்களின் வழக்கிற்கான அடுத்த தேதி, நேரம் மற்றும் இடம் குறித்து நீதிமன்றம் உங்களுக்குத் தெரிவிக்கும்.

## (D) கடிதம் வழி குற்ற ஒப்புதல்

### *(1) நான் கடிதம் வழி குற்றத்தை ஒப்புக்கொள்ள முடியுமா?*

**(a)** ஆம், மேஜிஸ்திரேட் உங்களுக்கு அபராதம் மட்டுமே விதிக்கப்படக்கூடிய அல்லது 12 மாதம் வரை அல்லது அதற்கும் குறைவான சிறைத் தண்டனை விதிக்கப்படக்கூடிய அல்லது இரண்டும் விதிக்கப்படக்கூடிய குற்றம் தொடர்பான அழைப்பாணையைப் பிறப்பித்திருந்தால்; மற்றும்

**(b)** அக்குற்றத்திற்கு விதிக்கப்படக்கூடிய ஏதேனும் அபராதத் தொகையைச் செலுத்த நீங்கள் ஒப்புக்கொண்டால்.

### *(2) கடிதம் மூலமாக எவ்வாறு குற்றத்தை நான் ஒப்புக்கொள்வது?*

உங்களின் குற்றத்தை ஒப்புக்கொள்வதற்கும், அந்தக் குற்றத்துக்கு விதிக்கப்படக்கூடிய ஏதேனும் அபராதத் தொகையைச் செலுத்த சம்மதம் தெரிவித்தும் நீங்கள் நீதிமன்றத்துக்குக் கடிதம் எழுதலாம். வழக்கு எந்த நீதிமன்றத்தில் அறிவிக்கப்படவுள்ளதோ அந்த நீதிமன்றத்திற்கே அக்கடிதம் முகவரியிடப்பட்டிருக்க வேண்டும். விதிக்கப்பட்ட தண்டனை குறித்து நீதிமன்றம் உங்களிடம் தெரிவிப்பதற்காகக் கடிதத்தில் உங்களின் அஞ்சல் முகவரி வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

### *(3) இத்தகைய ஒரு கடிதம் கிடைத்தவுடன் நீதிமன்றம் என்ன செய்யும்?*

நீதிமன்றம், நீங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதாக பதிவு செய்து, உங்களைக் குற்றவாளி என சட்டத்திற்கேற்ப தீர்ப்புரைக்கலாம். அபராதம் செலுத்த இயலாவிட்டால் அதற்குப் பதிலாக சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டும் என்ற கட்டளையுடனோ அவ்வாறு இல்லாமலோ நீதிமன்றம் உங்களுக்கு அபராதம் விதித்துத் தண்டனை வழங்கும்.

எனினும், நீங்கள், நீதிமன்றத்திற்கு ஒரு குறிப்பிட்ட தேதி, நேரம் மற்றும் இடத்திற்கு வர வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிடலாம். அவ்வாறு உத்தரவிடப்பட்டால் நீங்கள் விசாரணைக்கு வர வேண்டும்.

### *(4) அதற்குப் பிறகு என்ன நடக்கும்?*

நீதிமன்றத்தின் முடிவு உங்களுக்குக் கடிதம் வழி அறிவிக்கப்படும். விதிக்கப்பட்ட ஏதேனும் அபராதம், நீதிமன்றக் கடிதம் அஞ்சலில் போடப்பட்ட தேதியிலிருந்து, **7** நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். **ACS** (தானியங்கி வசூல் இயந்திரம்) கணியகம் வழியாக கட்டணம் செலுத்தப்படலாம். கடிதம் வழி சிறைத் தண்டனை விதிக்கப்படாது. அவ்வாறு சிறைத் தண்டனை விதிக்க நீதிமன்றம் தீர்மானித்தால், நீங்கள் நேரடியாக நீதிமன்றத்தில் தோன்றும்படி அது உங்களை அவசியப்படுத்தும். அவ்வாறு நிகழ்ந்தால், அடுத்த விசாரணைக்குத் தோன்றும்படி நீதிமன்றம் உங்களுக்குக் கடிதம் அனுப்பித் தெரிவிக்கும்.

# 04

# விசாரணைக்கு முந்திய கூட்டங்கள்

**(A)** விசாரணைக்கு முந்திய கூட்டம் **(PTC)** என்றால் என்ன?

**(B)** **PTC**-க்கு நான் எவ்வாறு தயார் செய்ய வேண்டும்?


**(C)** விசாரணையின்போது நான் என்ன எதிர்ப்பார்க்கலாம்?

**(D)** குற்றவியல் வழக்கு ஆவணங்கள் வெளிப்படுத்தல் கூட்டம் **(CCDC)**

அத்தியாயம் 4

# விசாரணைக்கு முந்திய கூட்டங்கள்

## குற்றவியல் செயல்முறையின் சுருக்கமான ஒரு செயல்வழிப் படம்



**(A) விசாரணைக்கு முந்திய கூட்டம் (PTC) என்றால் என்ன?**

உங்களின் வழக்கு அறிவிப்பின்போது, நீங்கள் வழக்கை எதிர்த்து வழக்காட விரும்பினால், அறிவிப்பு நீதிமன்றம், வழக்கை ஒரு விசாரணைக்கு முந்திய கூட்டத்திற்கு **(PTC)** அனுப்பி வைக்கும். உங்களையும் அரசு தரப்பையும் வழக்கு விசாரணைக்குத் தயார்படுத்துவதற்கும், விசாரணை தேதி குறிப்பதற்கு முன் ஏதேனும் நிர்வாக அலுவல்களைத் தீர்த்துக்கொள்வதுமே இந்த **PTC**-ன் நோக்கமாகும்.

**(B) PTC-க்கு நான் எவ்வாறு தயார் செய்ய வேண்டும்?**

**PTC** நடைபெறுவதற்கு முன்பே, கீழ் வருபவற்றை **PTC** நடைபெறும்போது நீங்கள் முன்வைக்க விரும்புகிறீர்களா என்பதை நீங்கள் பரிசீலிக்க வேண்டும்:

(i) நீங்கள் காவல்துறையினரிடம் கொடுத்த ஏதேனும் எழுத்து வடிவ வாக்குமூலத்தை அரசு தரப்பு பயன்படுத்த எண்ணம் கொண்டுள்ளதா என்று அறிந்துகொள்ளுங்கள். அவ்வாறு இருப்பின், அந்த வாக்குமூலத்தின் நகல் ஒன்று வேண்டும் என்று நீங்கள் கேட்டுக்கொள்ளலாம்.

(ii) வழக்கு விசாரணையின்போது நீங்கள் எத்தனை சாட்சிகளை அழைக்கப்போகிறீர்கள் என்று நீதிமன்றத்திடம் தெரிவியுங்கள்.

(iii) உங்களுக்கு அல்லது உங்களின் சாட்சிகளுக்கு மொழிபெயர்ப்பாளர் தேவை என்றால், வழக்கு விசாரணைக்கு ஒரு மொழிபெயர்ப்பாளரின் உதவி உங்களுக்குத் தேவைப்படும் என்று நீதிபதியிடம் நீங்கள் தெரிவிக்க வேண்டும்.

நீங்கள் சார்ந்திருக்கப்போகும் சட்டரீதியான தற்காப்பு வாதம் என்ன என்று தெரிவிக்குமாறும் நீதிபதி உங்களைக் கேட்டுக்கொள்ளலாம். அதனால், **PTC** இடம்பெறும் முன்பே இதைப் பற்றி யோசிப்பது உங்களுக்குப் பயன் தரும்.

**(C) விசாரணையின்போது நான் என்ன எதிர்ப்பார்க்கலாம்?**

வழக்கு விசாரிக்கப்படத் தயார் நிலையில் உள்ளதா என்று உறுதிப்படுத்துவதே **PTC**-ன் நோக்கமாகும். நீங்கள், இந்த **PTC**-க்கு, அரசு தரப்பைப் பிரதிநிதிக்கும் ஒரு துணை அரசு வழக்கறிஞர் (**DPP**) அல்லது காவல் துறை வழக்கு நடத்துனர் எவரேனும் ஒருவருடன் ஒன்றாக வர வேண்டும். இக்கூட்டத்தில், உங்களாலும் அரசு தரப்பாலும் எத்தகைய ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படும் என்று நீதிபதிக்குத் தெரிவிக்கப்படும். சாட்சிகள் யாவர் என்றும் தெரிவிக்கப்படும். எல்லா நிர்வாக விவகாரங்கள், குற்றவியல் வழக்கு ஆவணங்கள் வெளிப்படுத்தல் கூட்டம் உள்பட (ஏற்றதாக இருப்பின்), தீர்க்கப்பட்ட பிறகு, நீதிபதி விசாரணைக்குத் தேதி குறிப்பார்.

## (D) குற்றவியல் வழக்கு ஆவணங்கள் வெளிப்படுத்தல் கூட்டம் (CCDC)

### *(1) CCDC என்றால் என்ன?*

குற்றவியல் வழக்கு ஆவணங்கள் வெளிப்படுத்தல் கூட்டம் என்பது, அனைத்து தரப்பினரும் வழக்கின் விசாரணைக்கு முன்பே அவர்கள் வாதாடவிருக்கும் வழக்கைப் பற்றி தெரிந்துகொள்ள வகைசெய்யும் முறையான எதிரிடை ஆவண வெளிப்படுத்தல் அமைப்பாகும். இப்படியென்றால், நீங்களும் மற்றும் அரசு தரப்பும் தத்தம் வழக்குகளின் தன்மை மற்றும் ஒவ்வொருவரும் சார்ந்திருக்க எண்ணியுள்ள ஆதாரங்கள் ஆகியவற்றை விசாரணைக்கு முந்திய கட்டத்திலேயே வெளிப்படுத்தவேண்டிய கடமையின் கீழ் இருப்பீர்கள் என்று பொருள்படும்.

***CCDC செயல்முறையை நீங்கள் தேர்வுச் செய்வதன் மூலம், அரசு தரப்பின் வழக்கைப் பற்றி நீங்கள் மேலும் நன்றாகப் புரிந்துகொள்ளலாம் மற்றும், உங்களின் தற்காப்பு வாதத்திற்குப் பயன்படுத்த காவல்துறை வாக்குமூலங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.***

**CCDC** குறிப்பிட்ட வகையான வழக்குகளுக்கு மட்டுமே பொருந்தும். உங்களின் குற்றச்சாட்டு, அடியில் காணும் ஏதேனும் சட்டங்களின் கீழ் கொண்டுவரப்பட்டால், **CCDC** உங்களுக்குப் பொருந்தும்:

1. ஆயுதம் மற்றும் வெடிபொருள்கள் சட்டம் (அத்தியாயம் 13)
2. ஆயுதக் குற்றச் சட்டம் (அத்தியாயம் 14)
3. நாடுகடத்தல் சட்டம் (அத்தியாயம் 18)
4. வங்கித்துறைச் சட்டம் (அத்தியாயம் 19)
5. சூதாட்ட விடுதிக் கட்டுப்பாட்டுச் சட்டம் (அத்தியாயம் 33A)
6. கணினியின் தவறான பயன்பாட்டுக்கான சட்டம் (அத்தியாயம் 50A)
7. அரித்தழிக்கும், வெடிபொருள்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் சட்டம் (அத்தியாயம் 65)
8. ஊழல், போதைப்பொருள் கடத்தல் மற்றும் இதரக் கடும் குற்றங்கள் (ஆதாயங்களைப் பறிமுதல் செய்தல்) சட்டம் (அத்தியாயம் 65A)
9. குற்றவியல் (தற்காலிகச் சட்டப்பிரிவுகள்) சட்டம் (அத்தியாயம் 67)
10. விமானக் கடத்தல் மற்றும் விமானப் பாதுகாப்பு மற்றும் அனைத்துலக விமான நிலையங்கள் சட்டம் (அத்தியாயம் 124)
11. குடிநுழைவுச் சட்டம் (அத்தியாயம் 133) (பிரிவுகள் 6 மற்றும் 15-தைத் தவிர்த்து)
12. உள்கட்டமைப்புப் பாதுகாப்புச் சட்டம் 2017 (2017-ன் 41-ம் சட்டம்)
13. உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் (அத்தியாயம் 143)

| |
|---|
| 14. சமய நல்லிணக்க பராமரிப்புச் சட்டம் (அத்தியாயம் 167A) |
| 15. போதைப் பொருள் ஒழிப்புச் சட்டம் (அத்தியாயம் 185) |
| 16. (லேவாதேவி) கடன் கொடுப்போர் சட்டம் (அத்தியாயம் 188) |
| 17. சத்தியப்பிரமாணம் மற்றும் உறுதிமொழிச் சட்டம் (அத்தியாயம் 211) |
| 18. அலுவல்முறை ரகசியங்கள் சட்டம் (அத்தியாயம் 213) |
| 19. கடவுச்சீட்டு சட்டம் (அத்தியாயம் 220) |
| 20. தண்டனை சட்டம் (அத்தியாயம் 224) |
| 21. ஊழல் தடுப்புச் சட்டம் (அத்தியாயம் 241) |
| 22. ஆள் கடத்தல் தடுப்புச் சட்டம் (2014-ன் 45-ம் சட்டம்) |
| 23. சிறைச்சாலைகள் சட்டம் (அத்தியாயம் 247) |
| 24. பாதுகாக்கப்பட்டப் பகுதிகள் மற்றும் பாதுகாக்கப்பட்டுள்ள இடங்கள் சட்டம் (அத்தியாயம் 256) |
| 25. பொதுக் கேளிக்கைகள் சட்டம் (அத்தியாயம் 257) |
| 26. பொது ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு (சிறப்பு அதிகாரம்) சட்டம் 2018 |
| 27. தொலை சூதாட்ட சட்டம் (2014-ன் 34-ம் சட்டம்) |
| 28. நிதிப் பத்திரங்கள் மற்றும் வருநிலை வணிகச் சட்டம் (அத்தியாயம் 289) |
| 29. தேச விரோதச் செயல் சட்டம் (அத்தியாயம் 290) |
| 30. நாசவேலை சட்டம் (அத்தியாயம் 341) |

### *(2) CCDC-க்கு நான் எவ்வாறு விண்ணப்பம் செய்ய வேண்டும்?*

முதல் விசாரணைக்கு முந்திய கூட்டத்தில், **CCDC** உங்களின் வழக்கிற்குப் பொருந்துமா என்று நீதிபதி உங்களிடம் தெரிவிப்பார். பிறகு, **CCDC**-ல் கலந்து கொள்ள உங்களுக்கு விருப்பமா என்று குறிப்பிடும்படி கேட்பார். மற்ற அனைத்து வழக்குகளுக்கும், சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் சம்மதித்தால் மட்டுமே, **CCDC** நடவடிக்கை பொருந்தும்.

### *(3) CCDC-ல் நான் பங்கேற்க வேண்டுமா?*

**CCDC**-ல் பங்கேற்பது கட்டாயமல்ல. அதில் கலந்துகொள்ள விரும்புகிறீர்களா என்பது உங்களின் விருப்பம்.

**CCDC**-ல் பங்கேற்பதன் மூலம், அரசு தரப்பு உங்களுக்கு எதிராக வைத்திருக்கும் ஆதாரங்களைப் பற்றி நீங்கள் மேலும் புரிந்துகொள்ள உங்களுக்கு உதவுவதைத் தொடர்ந்து நீங்கள் ஆகச் சிறந்த நடவடிக்கையை எடுக்கவும் உங்களுக்கு உதவும். எனினும், **CCDC**-யை எளிதாக்கும் பொருட்டு ஆவணங்களைத் தயார் செய்யும்படியான நீதிபதியின் உத்தரவுகளுக்கு இணங்க நீங்கள் தயாராக இருக்க வேண்டும். அடுத்த பகுதியில் **CCDC**-ன் கீழ் உங்களின் கடமைகள் பற்றிய கூடுதல் தகவல்களை நீங்கள் கண்டறிவீர்கள்.

**CCDC**-ல் பங்கேற்கப்போவதில்லை என்று நீங்கள் தேர்வுச் செய்தால், நிர்வாக நடவடிக்கைகள் சீர் செய்யப்பட்டவுடன் நீதிமன்றம் வழக்கு விசாரணைக்கு ஒரு தேதியைக் குறிக்கும். எனினும், வழக்கு விசாரணைக்கு முன்பு அரசு தரப்பின் ஆதாரங்களைப் பரிசீலிக்கும் வாய்ப்பை நீங்கள் பெற்றிருக்க மாட்டீர்கள். இதுபோலவே, அரசு தரப்பாலும் உங்களின் ஆதாரங்களைப் பரிசீலிக்க முடியாமல் போகும். இது போன்ற பரிசீலனைகள் சில சந்தர்ப்பங்களில், குறைக்கப்பட்ட குற்றச்சாட்டிற்கு வழிவகுத்திருக்கக்கூடும்.

### *(4) CCDC-ல் பங்கேற்க நான் முடிவு செய்தால் என்ன நடக்கும்?*

நீங்கள், **CCDC**-ல் பங்கேற்க முடிவு செய்தால், வெளிப்படுத்தல் நடைமுறையை எளிதாக்க நீதிமன்றம் தொடர் வழிமுறைகளை வழங்கும். முதலாவதாக, கீழ்வரும் ஆவணங்களும் அடங்கிய "அரசு தரப்பு வழக்குத் தொகுப்பு" என்ற தொகுப்பைத் தயார் செய்து உங்களிடம் வழங்குமாறு அரசு தரப்பிற்கு நீதிமன்றம் உத்தரவிடும்.

**(a)** உங்களுக்கு எதிரான குற்றச்சாட்டு.
**(b)** நடந்த சம்பவத்தின் சுருக்கம்.
**(c)** அரசு தரப்புச் சாட்சிகளின் பட்டியல்.
**(d)** ஆதாரமாகக் தாக்கல் செய்யப்படவுள்ள ஆவணங்கள் மற்றும் பொருட்களின் விளக்கம்.
**(e)** அரசு தரப்பு ஆதாரமாகப் பயன்படுத்த எண்ணியுள்ள ஒரு சட்ட அமலாக்க அதிகாரியிடம் நீங்கள் கொடுத்த எழுத்து வடிவிலான ஏதேனும் வாக்குமூலங்கள்.
**(f)** அரசு தரப்பு ஆதாரமாகப் பயன்படுத்த எண்ணியுள்ள ஒரு சட்ட அமலாக்க அதிகாரியிடம் நீங்கள் கொடுத்த ஒலி-ஒளி உருவில் பதிவு செய்யப்பட்ட எல்லா வாக்குமூலங்களின் ஒரு பட்டியல். இந்த ஒலி-ஒளி பதிவுகளின் எழுத்துவடிவ பிரதிகளும் இணைக்கப்பட வேண்டும்.

அரசு தரப்பின் வழக்குத் தொகுப்பை நீங்கள் பெற்றுக்கொண்ட பிறகு, நீங்கள் அதைப் படித்து, கவனமாகப் பரிசீலிக்க வேண்டும். உங்களுக்கு எதிரான குற்றப்பழியை நிரூபிக்க அரசு தரப்பு சார்ந்திருக்கும் ஆதாரங்கள் அதில் அடங்கியுள்ளன. அரசு தரப்பு வழக்கின் பட்டியலில் இருக்கும் ஒரு சட்ட அமலாக்க அதிகாரியிடம் நீங்கள் கொடுத்துள்ள வாக்குமூலங்களின் ஏதேனும் ஒலி-ஒளி பதிவுகளை நீங்கள் காண விரும்பினால், அரசு தரப்பிடம் விண்ணப்பிக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து, நீங்கள் அவற்றைக் காண அவர்கள் ஏற்பாடு செய்வர். அடுத்த **CCDC**-ல், நீங்கள் குற்றச்சாட்டை(களை) எதிர்த்து விசாரணை கோர விரும்புகிறீர்களா அல்லது ஒப்புக்கொள்ள விரும்புகிறீர்களா என்பதைக் குறிப்பிடும்படி நீதிமன்றம் கேட்டுக்கொள்ளலாம்.

உங்களுக்குக் குற்றத்தை ஒப்புக்கொள்ளும் நோக்கமிருந்தால், உங்களின் குற்ற ஒப்புதலைப் பெறவும், உங்களுக்கான தண்டனையை முடிவு செய்யவும், நீதிமன்றம் உங்களின் வழக்கைத் தண்டனை தீர்ப்பு வழங்கும் ஒரு நீதிமன்றத்திற்கு மாற்றிவிடும். தண்டனை விதிப்பு பற்றிய மேல் விவரங்களுக்கு, அத்தியாயம் 6-யைக் காணவும்.

வழக்கை எதிர்த்து விசாரணை கோரும் உங்களின் நோக்கத்தை நீங்கள் தெரிவித்தால், கீழ்வரும் ஆவணங்கள் உள்ளடங்கிய உங்களின் "தற்காப்பு தரப்பு வழக்குத் தொகுப்பு" என்ற தொகுப்பைத் தயார் செய்யுமாறு நீதிமன்றம் உங்களுக்கு உத்தரவிடும்.

**(a)** உங்களின் தற்காப்பு வாதத்தின் சுருக்கம் மற்றும் நீங்கள் சார்ந்திருக்க விரும்பும் தொடர்புடைய ஆதரிக்கும் உண்மை சான்றுகள்.
**(b)** உங்களின் சாட்சிகளின் பட்டியல் (இது அவர்களின் பெயர்களையும் விவரங்களையும் உள்ளடக்க வேண்டும்).
**(c)** நீதிமன்றத்தில் நீங்கள் ஆதாரமாகத் தாக்கல் செய்ய எண்ணியுள்ள ஆவணங்கள் மற்றும் பொருட்களைப் பற்றிய விளக்கம்.
**(d)** அரசு தரப்பு வழக்குத் தொகுப்பிற்கு நீங்கள் எழுப்ப விரும்பும் ஏதேனும் எதிர்ப்புகள். எதிர்ப்பின் தன்மை மற்றும் நீங்கள் சார்ந்திருக்கும் உண்மைச் சான்றையொட்டி முன்வைக்கவிருக்கும் ஆதாரம் ஆகியவற்றை நீங்கள் குறிப்பிட வேண்டும்.

உங்களின் தற்காப்பு தரப்பு வழக்குத் தொகுப்பு ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் காலக்கெடுவிற்குள் உங்களின் வழக்கின் நகல் ஒன்றை நீங்கள் நீதிமன்றத்திற்கும் அரசு தரப்பிற்கும் வழங்க வேண்டும். உங்களுடன் இணைந்து குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எவரேனும் வழக்கை எதிர்த்து வாதாடுகிறார்கள் என்றால், அவர்களிடமும் நீங்கள் தற்காப்பு தரப்பு வழக்குத் தொகுப்பைச் சார்வு செய்ய வேண்டும்.

### *(5) நான் எவ்வாறு என் தற்காப்பு வாதத்தைத் தயார் செய்வது?*

இந்த வழிகாட்டியின் பின் பகுதியில், தற்காப்பு தரப்பு வழக்குத் தொகுப்பின் ஒரு மாதிரியை நீங்கள் காணலாம். இதை நீங்கள் பரிசீலித்து, உங்களின் தேவைக்கு ஏற்ப மாற்றியமைத்துக்கொள்ளலாம்.

உங்களின் தற்காப்பு தரப்பு வழக்குத் தொகுப்பின் பெருமளவு உள்ளடக்கத்திற்காக உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், நீங்கள் சட்ட உதவியை நாடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

நீங்கள், உங்களின் தற்காப்பு தரப்பு வழக்குத் தொகுப்பை முறையாகத் தயார் செய்து வழங்குவது மிகவும் முக்கியமானது. நீங்கள் அவ்வாறு செய்யத் தவறினால் (எ.டு. தற்காப்பு தரப்பு வழக்குத் தொகுப்பில் பட்டியலிடப்பட்ட சான்று ஆவணங்களை அரசு தரப்பிடம் சார்வு செய்யத் தவறினால்), நீதிமன்றம், உங்களுக்குப் பாதகமாக அமையும் அனுமானங்களைச் (அதாவது சாதகமற்ற அனுமானம்) செய்யலாம். வழக்கு விசாரணையின்போது, தற்காப்பு தரப்பு வழக்குத் தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றிற்கு மாறான அல்லது முரணான வழக்கை நீங்கள் முன் வைத்தாலும் உங்களுக்குப் பாதகமான அனுமானங்கள் செய்யப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள். இது, வழக்கு விசாரணையின்போது உங்களின் நம்பகத்தன்மையில் தாக்கத்தை உண்டாக்கலாம், மற்றும் வெற்றிகரமாக உங்களைத் தற்காத்துக்கொள்ளும் உங்களின் வாய்ப்புகளை எதிர்மறையாகப் பாதிக்கலாம்.

***நீங்கள், உங்களின் தற்காப்பு தரப்பு வழக்குத் தொகுப்பை முறையாகத் தயார் செய்து வழங்குவது மிகவும் முக்கியமானது. இல்லையெனில், வழக்கு விசாரணையின்போது நீதிமன்றம், உங்களுக்கு எதிராக, உங்களின் தற்காப்பு வாதத்திற்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய பாதகமான அனுமானங்களைச் செய்யலாம்.***

### *(6) நான் என் தற்காப்பு தரப்பு வழக்கு தொகுப்பைச் சமர்ப்பித்த பிறகு என்ன நடக்கும்?*

நீங்கள் உங்களின் தற்காப்பு தரப்பு வழக்குத் தொகுப்பை நீதிமன்றத்திடமும் அரசு தரப்பிடமும் சமர்ப்பித்த பிறகு, அரசு தரப்பின் வழக்குத் தொகுப்பில் காணப்படும் ஆவணங்களின் நகல்களை அரசு தரப்பு உங்களிடம் வழங்கும். புலன் விசாரணைகளின்போது நீங்கள் வழங்கியிருக்கக்கூடிய மற்ற ஏதேனும் எழுத்து வடிவ வாக்குமூலங்கள் மற்றும் ஒலி-ஒளி உருவில் பதிவு செய்யப்பட்ட எல்லா வாக்குமூலங்களின் எழுத்துவடிவ நகல்களையும் அரசு தரப்பு வழங்கும். உங்களுக்குக் குற்ற பதிவுகள் ஏதேனும் இருப்பின், கட்டணம் ஒன்றைச் செலுத்திய பிறகு, அரசு தரப்பு அவற்றின் ஒரு நகலை வழங்கும். இது "அரசு தரப்பின் துணைக் கட்டு" என்று அழைக்கப்படும்.

நீங்கள் வழங்கிய ஒலி-ஒளி உருவில் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் வாக்குமூலங்களை நீங்கள் காண விரும்பினால், அரசு தரப்பிடம் விண்ணப்பிக்கலாம். அதனைத் தொடர்ந்து, ஒலி-ஒளி பதிவைக் காண அவர்கள் ஏற்பாடு செய்வர். உங்களின் அடுத்த கட்ட நடவடிக்கையை,

அதாவது, வழக்கை எதிர்த்து வாதாடுவதா அல்லது குற்றத்தை ஒப்புக்கொள்வதா என்பதை முடிவு செய்வதற்கு முன், உங்களிடம் வெளிப்படுத்தப்பட்ட அரசு தரப்பின் முழு வழக்கையும், எல்லா ஆவணங்கள் மற்றும் வாக்குமூலங்கள் உள்பட, நன்கு பரிசீலனை செய்யுங்கள்.

அடுத்த **CCDC**-ல், உங்களையும் அரசு தரப்பையும் தத்தம் நிலைப்பாடுகளைக் குறிப்பிடுமாறு நீதிபதி கேட்பார். அரசு தரப்பு குற்றச்சாட்டுகளைத் தொடர முடிவு செய்தாலோ, நீங்கள் வழக்கை எதிர்த்து வாதாட முடிவு செய்தாலோ, நீதிபதி வழக்கு விசாரணைக்கு ஒரு தேதியைக் குறிப்பார். அடுத்த அத்தியாயம் வழக்கு விசாரணைகளைப் பற்றியதாகும்.

# 05

# வழக்கு விசாரணைகள்

**(A)** வழக்கு விசாரணை என்றால் என்ன?

**(B)** ஒரு வழக்கு விசாரணைக்கு நான் எவ்வாறு தயார் செய்வது

**(C)** வழக்கு விசாரணையின்போது என்ன நடக்கும்?

அத்தியாயம் 5

# வழக்கு விசாரணைகள்


### (A) வழக்கு விசாரணை என்றால் என்ன?

உங்களுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை, நீங்கள் புரிந்துள்ளீர்களா என்று தீர்மானிக்கவே வழக்கு விசாரணை நடத்தப்படுகிறது. வழக்கு விசாரணையின்போது, நீங்களும் அரசு தரப்பும் அளிக்கும் சான்றுகளைச் சட்டத்திற்கிணங்க நீதிபதி விசாரிப்பார். சாட்சியின் வாக்குமூலங்கள், ஆவணங்கள், காணொளிகள், புகைப்படங்கள் மற்றும் பொருட்கள் போன்ற உருவில் இருக்கக்கூடிய சான்று பொருட்கள் தாக்கல் செய்யப்படலாம். வழங்கப்படும் சான்றுகளின் துல்லிய மற்றும் நம்பகத் தன்மைகளை மதிப்பிடுவதன் வழி நடந்த உண்மையைக் கண்டறிய நீதிபதி முயற்சி செய்வார்.

வழங்கப்பட்ட சான்றுகள் அனைத்தையும் விசாரித்த பிறகு, உங்களைக் குற்றவாளியென தீர்ப்பளிப்பதா அல்லது விடுதலை செய்வதா என நீதிபதி முடிவு செய்வார்.

வழக்கு விசாரணை செயல்முறையின் மேலோட்ட விளக்கம் கீழ்வருமாறு:

### குற்றவியல் வழக்கு விசாரணை நடவடிக்கையின் மேலோட்ட விளக்கம்



### (B) ஒரு வழக்கு விசாரணைக்கு நான் எவ்வாறு தயார் செய்வது?

நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட சாட்சியங்களை மட்டுமே நீதிபதி பரிசீலனை செய்யமுடியும். ஆகையால், விசாரணை தினத்தன்று உங்களின் வழக்கின் தற்காப்பு வாதத்திற்கு ஆதரவளிக்கும் சாட்சியங்களைச், சாட்சிகள் (எவரேனும் இருப்பின்) உள்பட, கொண்டு வர வேண்டும். இரு தரப்பினருக்கும் சாட்சிகளை அழைக்க உரிமை உண்டு. எல்லா சாட்சிகளும் சத்தியத்தின் பேரில் பிரமாணம் மற்றும் உறுதிமொழி மேற்கொள்வர், மற்றும் நீங்களும் அரசு தரப்பும் கேட்கும் கேள்விகளுக்கும் உட்படுத்தப்படுவர். நீங்கள், வேறொருவர் சொல்வதையோ அறிந்திருப்பதையோ சார்ந்திருக்க விரும்பினால், அவர்/அவளிடம் அரசு தரப்பு வழக்கறிஞர் கேள்விகள் கேட்பதற்கு ஏதுவாக அந்நபர் நீதிமன்றத்திற்கு வர வேண்டும்.

அரசு தரப்பு மற்றும் தற்காப்பு தரப்பு ஆகியவற்றின் வழக்கு ஆவணங்கள் வெளிப்படுத்தல் முன்பே நடத்தப்பட்டிருந்து, அத்தருணத்தில் நீங்கள் வெளிப்படுத்தாத ஏதேனும் சாட்சியை அழைக்க அல்லது சான்று பொருளைத் தாக்கல் செய்ய விரும்பினால், நீதிமன்றத்திற்கும் மற்றும் சம்பந்தப்பட்டிருக்கும் அனைத்து தரப்பினருக்கும் எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும். நீங்கள், ஒரு புது சாட்சியை அறிமுகப்படுத்தப்போகிறீர்கள் என்றால், அந்தச் சாட்சியின் பெயரும் மற்றும் அவர் அல்லது அவள் எதைப்பற்றி சாட்சியம் அளிக்கப்போகிறார் என்பதைபற்றிய சுருக்கமும் அந்த எழுத்து வடிவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். நீங்கள் ஏதேனும் சாட்சியங்களை அறிமுகப்படுத்துகிறீர்கள் என்றால், அந்த எழுத்து வடிவ அறிக்கை அந்தச் சாட்சியத்தைப்பற்றிய விளக்கத்தை வழங்கவேண்டும்.

***நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களை மட்டுமே நீதிபதி பரிசீலிக்க முடியும்; நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்படாத எதுவும் பரிசீலிக்கப்படாது.***

#### *(1) சாட்சிகள்*

உங்களின் சாட்சிகள் அனைவரும் நீதிமன்றத்திற்கு வருவார்கள் என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அந்தச் சாட்சிகள் மனமுவந்து வரத் தயாராக இருக்கிறார்களா என்று உங்களுக்கு உறுதியாகத் தெரியவில்லை என்றால், மத்திய பதிவகத்தில் (அரசு நீதிமன்றங்கள் 2-ம் தளம்), அந்தச் சாட்சிக்கு எதிராக "சாட்சிக்கான அழைப்பாணை" ஒன்றைப் பிறப்பிக்க நீங்கள் விண்ணப்பம் செய்ய வேண்டும். பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு அழைப்பாணைக்கும் $20 கட்டணம் செலுத்தப்படவேண்டும். பிறகு, ஒரு நீதிமன்றச் சார்வாளர் அழைப்பாணையைச் சாட்சியிடம் சார்வு செய்ய உங்களுக்கு உதவுவார்.

### (2) ஆவணங்கள்

உங்களின் தற்காப்பு வாதத்திற்காக நீங்கள் சார்ந்திருக்க எண்ணும் அனைத்து ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களைத் தயார் செய்துகொள்ளுங்கள். ஒவ்வொரு ஆவணத்திற்கும் குறைந்தது 4 நகல்களை நீங்கள் தயார் செய்ய வேண்டும். ஒன்று (அசல்) நீதிமன்றத்திற்கு, ஒன்று அரசு தரப்பிற்கு, ஒன்று சாட்சிக்கு, ஒன்று உங்களுக்கு.

ஒரு பொது விதியாக, ஏதேனும் ஆவணத்தை உருவாக்கியவர்[6] நீதிமன்றத்தில் இருப்பதையும் நீங்கள் உறுதி செய்துகொள்ளவேண்டும். இல்லையெனில், அந்த ஆவணம் வழக்கில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படாமல் போகலாம். உதாரணத்திற்கு, வேறு ஒருவர் அனுப்பிய ஒரு "வாட்ஸ் அப்" (**WhatsApp**) அல்லது முகநூல் தகவலை நீங்கள் வழக்கில் அறிமுகப்படுத்த விரும்பினால், அந்நபரை ஒரு சாட்சியாக அழைப்பதை நீங்கள் பரிசீலிக்க விரும்பலாம். அவர்தான் அந்தத் தகவலை அனுப்பினாரா என்று நீதிமன்றத்தில் அவர் கூறுவதற்கு இது ஏதுவாக இருக்கும்.

உங்களின் ஆவணங்கள் வழக்குத் தொடங்குவதற்கு வெகு முன்னதாகவே தயார் செய்யப்படவேண்டும். நிர்ணயிக்கப்பட்ட விசாரணை தேதிக்கு முன்பே இந்த ஆவணங்களைச் சமர்ப்பிக்கும்படி நீதிமன்றம் உங்களிடம் (மற்றும் அரசு தரப்பிடம்) உத்தரவிடக்கூடும் என்பதால் இது குறிப்பிடத்தக்க முறையில் முக்கியமானதாகும்.

### (3) தயார் செய்தல்

(i) உங்களின் சொந்தச் சாட்சிகள் மற்றும் (ii) அரசு தரப்பு சாட்சிகள் ஆகியோரிடம் நீங்கள் கேட்க விரும்பும் கேள்விகளின் பட்டியலை நீங்கள் தயார் செய்து கொள்ள விரும்பலாம்.

### (4) ஆவணங்கள் மற்றும் புகைப்படங்கள் போன்றவற்றை விசாரணையில் சான்றுகளாக அளித்தல்

சம்பந்தப்பட்ட சான்றுகளை நீதிபதியிடம் காண்பிக்க இரு தரப்பினருக்கும் அனுமதி

| உதவி: பட்டியல்-செய்ய வேண்டியவை |
|---|
| சாட்சியங்களை நீதிமன்றத்திற்குக் கொண்டு வர வேண்டும். |
| சாட்சியங்களாகப் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு ஆவணத்தின் அசல் மற்றும் குறைந்தது 4 நகல்கள் இருக்கவேண்டும். |

[6] உதாரணத்திற்கு, நீங்கள் ஒரு மருத்துவச் சான்றிதழைச் சார்ந்திருக்க எண்ணினால், அந்த மருத்துவச் சான்றிதழை வழங்கிய மருத்துவர் அந்த ஆவணத்தை அவர்தான் தயார் செய்தார் என்று நிரூபிக்க நீதிமன்றத்திற்கு வர வேண்டும். மற்றொரு உதாரணம், உங்களின் நிறுவனத்திலிருந்து கிடைக்கப்பெற்ற கடிதம் ஒன்றை நீங்கள் சார்ந்திருக்க எண்ணினால், அந்த ஆவணத்தில் கையொப்பமிட்டவர் அந்த ஆவணத்தை அவர்தான் தயார் செய்தார் என்று நிரூபிக்க அவரை நீங்கள் நீதிமன்ற விசாரணைக்கு வரச்சொல்லவேண்டும்.

உண்டு. ஏதேனும் சான்றாவணங்களை நீதிபதி பரிசீலிக்கவேண்டுமென நீங்கள் விரும்பினால், அதற்கான நான்கு நகல்களைத் தயார் செய்து, அசல் ஆவணத்தை நீதிமன்றத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

அந்த ஆவணத்தைத் தயார் செய்தவர் அல்லது அப்புகைப்படத்தை எடுத்தவர் நீதிமன்றத்திற்கு வர வேண்டும். இல்லையெனில், நீதிமன்றம் அதனைக் கருத்தில் எடுத்துக்கொள்ளாமல் போகலாம்.

ஆவணத்தைத் தயாரித்த அல்லது உருவாக்கிய நபர் நீதிமன்றத்திற்கு வருவதை உறுதி செய்ய வேண்டும். *இல்லையெனில் அந்த ஆவணம் சாட்சியமாகக் கருதப்படாமல் போகலாம்.

சாட்சிகளைத் தொடர்பு கொண்டு அவர்களை விசாரணைக்கு வரும்படி கூறவேண்டும்.

அனைத்து சாட்சிகளும் விசாரணைக்கு வருவதை உறுதி செய்ய வேண்டும்.

விசாரணை தேதி(கள்) வழங்கப்பட்டவுடன் சாட்சிகள் விசாரணைக்கு வருவதை அவசியப்படுத்தும் ‘சாட்சிக்கான அழைப்பாணை’-க்கு **மத்திய பதிவகத்தில் (அரசு நீதிமன்றங்கள் 2-ம் தளம்)** விண்ணப்பிக்க வேண்டும்.
கட்டணம்: ஒவ்வொரு அழைப்பாணைக்கும் $20.

(நேரடி விசாரணையில்) சம்பந்தப்பட்ட சாட்சியின் மூலம் பின்வரும் கேள்விகளுக்கு விடை அளிக்குமாறு அந்தச் சாட்சியிடம் கூறி ஆவணங்களையும், புகைப்படங்களையும் அறிமுகப்படுத்தவேண்டும்:

- இது என்ன?
- எவ்வாறு மற்றும் எப்பொழுது இது கிடைக்கப்பெற்றது/செய்யப்பட்டது/எடுக்கப்பட்டது?
- இந்த ஆவணத்தின் நோக்கம் என்ன அல்லது புகைப்படம் எதனைக் காட்டுகிறது?

சான்றுகள் சாட்சியத்தின் ஒரு பகுதியாவதற்கு முன், அவை ஒவ்வொன்றும் குறிக்கப்பட்டு, முறையாக அனுமதிக்கப்படவேண்டும். இதன் விளக்கம் என்னவென்றால், நீதிபதி, ஒவ்வொரு ஆவணத்திற்கும், ஓர் எழுத்து மற்றும் ஓர் எண் கொண்டு பெயரிடுவார் (எ.டு. **P1** அல்லது **D1**) மற்றும் அந்த ஆவணம், ஒரு சாட்சியமாவதற்கு முன், சட்டத்தின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். அடையாளத்திற்காகவோ அல்லது அனுமதிக்கப்பட்ட சாட்சியமாகவோ நீதிமன்றம் ஆவணத்தில் குறியிடும்போது நீங்களும் உங்களிடம் உள்ள அந்த ஆவணத்தின் நகல் படிவத்தில் குறியிடவேண்டும். அவ்வாறே, அடையாளம் காண எளிதாக இருக்க, சாட்சிகளையும் (“**PW1**”, “**PW2**” அல்லது “**DW1**”, “**DW2**”) என நீதிமன்றம் குறிப்பிடும்.

### (C) வழக்கு விசாரணையின்போது என்ன நடக்கும்?

வழக்கு விசாரணையின்போது, தத்தம் வழக்கின் வாதத்தை முழுமையாக நீதிமன்றத்தில் எடுத்துரைக்க இரு தரப்பினருக்கும் போதுமான நேரமும் நியாயமான வாய்ப்பும் வழங்கப்படும். அரசு தரப்பு வழக்கறிஞரும், நீங்களும் உங்களின் வழக்கை ஒருவர் விட்டு ஒருவர் சமர்ப்பிப்பீர்கள். பேசுவதற்கான உங்களின் முறை வரும் வரை நீங்கள் பொறுமையாகக் காத்திருக்கவேண்டும். நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுவதால், நீங்கள் பேசுவதற்கான சந்தர்ப்பம் வரும்போது, ஒலிவாங்கியில், தெளிவாகக் கேட்கும்படி, பேசுங்கள்.

நீங்கள் உங்களின் சொந்தக் குறிப்புகளை எடுத்துக்கொள்ள வேண்டும். சாட்சிகள் கூறியதையும் குறித்துக்கொள்ளவேண்டும். உங்களுக்குப் பேனாவும் தாளும் தேவைப்பட்டால், அதை நீங்கள் கேட்டுப்பெறலாம்.

உங்களின் வழக்கைத் தீர்மானிக்க தேவைப்படும் அனைத்து விவரங்களும் நீதிபதியிடம் இருக்கும் வகையில், வழக்கு விசாரணையின்போது, தெளிவுபடுத்திக்கொள்ளவும் மற்றும் மேலும் விவரங்கள் பெற்றுக்கொள்ளவும் உங்களையோ அல்லது சாட்சிகளையோ நீதிபதி குறிக்கிட்டுக் கேள்விகள் கேட்கலாம்.

வழக்கு விசாரணையின் வரிசைமுறை வருமாறு:

**படி 1: அரசு தரப்பின் வழக்கு தொடக்கம்**

குற்றச்சாட்டு உங்களிடம் வாசித்து விளக்கப்பட்ட பிறகு, தொடரப்படும் குற்றச்சாட்டை(களை) நீங்கள் ஒப்புக்கொள்ள விரும்புகிறீர்களா அல்லது எதிர்த்து விசாரணை கோர விரும்புகிறீர்களா என்று நீதிபதி உங்களிடம் உறுதிப்படுத்திக்கொள்வார். நீங்கள் வழக்கை எதிர்த்து விசாரணை கோர விரும்பினால், அரசு தரப்பு அதன் வழக்கை முதலில் முன்வைக்க தொடங்கும். அரசு தரப்பு, அதன் வழக்கின் சுருக்கத்தை விவரித்தும் மற்றும் வழக்கின் மூலம் அது எதனை நிரூபிக்க எதிர்பார்க்கிறதென்றும் கூறித் தொடங்கலாம்.

**படி 2: அரசு தரப்பு சாட்சியின்(களின்) விசாரணை**

ஒவ்வொரு அரசு தரப்பு சாட்சியின் விசாரணையில் 3 கட்டங்கள் உள்ளன: (i) நேரடி விசாரணை; (ii) குறுக்கு விசாரணை மற்றும் (iii) மறு விசாரணை. ஒரு சாட்சி, சாட்சி கூண்டிலிருக்கும்போது மற்றச் சாட்சிகள் நீதிமன்றத்திற்கு வெளியில் அல்லது சாட்சி அறையில் இருக்கவேண்டும். உங்களின் சாட்சிகள் நீதிமன்றத்திற்குள் இல்லாதிருப்பதையும் நீங்கள் உறுதி செய்ய வேண்டும்.

### (1) நேரடி விசாரணை

அரசு தரப்பு, அதன் சாட்சிகளைப், பட்டியலில் இடம்பெற்றவாறு வரிசைப் பிரகாரம் சாட்சியம் வழங்க அழைக்கும். சான்றுகளும், இச்சாட்சிகளின் மூலம் சாட்சியங்களாகச் சமர்ப்பிக்கப்படலாம். நீங்கள் கேள்விகளையும் பதில்களையும் கவனமாகக் கேட்கவேண்டும் மற்றும் உங்களின் சொந்தப் பார்வைக்குக் குறிப்புகள் எடுத்துக்கொள்ளவேண்டும்.

அரசு தரப்பு வழக்கறிஞர், விடையடங்கிய கேள்விகளைக் கேட்கக்கூடாது. ஒரு விடையடங்கிய கேள்வி என்பது, ஒரு சாட்சியிடம் பதிலை உணர்த்தும் வகையில் கேட்கப்படும் கேள்வியாகும். உதாரணத்திற்கு, "நீ அந்த நாளன்று அவனை வெற்றுத்தளத்தில் தெளிவாகப் பார்த்தாய், அல்லவா?" என்ற ஒரு கேள்வி, சாட்சியிடம் அந்தக் கேள்விக்கான பதிலை மறைமுகமாக கூறும் கேள்வியாகும். மாறாக, "அந்த நாளன்று அவன் என்ன செய்வதை நீ பார்த்தாய்?" என்று அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்கவேண்டும். அரசு தரப்பு வழக்கறிஞர் விடையடங்கிய ஒரு கேள்வியைக் கேட்டால், நீங்கள் எழுந்து நின்று அக்கேள்விக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக கூறலாம்.

### (2) குறுக்கு விசாரணை

ஒவ்வொரு சாட்சியின் நேரடி விசாரணைக்குப் பிறகு, சாட்சியிடம், ஏதேனும் விடையடங்கிய கேள்விகள் உள்பட, கேள்விகள் கேட்டு, குறுக்கு விசாரணை செய்ய உங்களுக்கு அனுமதி வழங்கப்படும். சாட்சி கூறியதை எதிர்ப்பதற்கு, ஏதேனும் ஆவணங்கள், காணொளிகள் அல்லது புகைப்படங்களையும் நீங்கள் அவரிடம் காண்பிக்கலாம்.

நீங்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒவ்வொரு சாட்சியிடமும், சாட்சியின் நம்பகத்தன்மையையும் மற்றும் நடந்த சம்பவங்களைப் பற்றிய அவரது விளக்கத்தின் துல்லியத்தன்மையையும் சோதிக்கும் வகையிலான கேள்விகளைக் கேட்க வேண்டும். ஆயினும், சாட்சியை, வெட்கப்படுத்தும், அவமானப்படுத்தும் அல்லது அவருக்கு எரிச்சல் உண்டாக்கும்

**உதவி: கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கியமானவை**

சாட்சிக்கு எரிச்சலைக் கொடுக்கும், அவரை அவமானப்படுத்தும் அல்லது வெட்கப்படச்செய்யும் கேள்விகளைக் கேட்க உங்களுக்கு அனுமதி இல்லை.

நீதிபதி உங்களின் வழக்கறிஞர் அல்ல. கேள்விகளைப் பற்றிச் சிந்திப்பதற்கு அவர் உங்களுக்கு உதவி செய்ய மாட்டார். உங்களின் வழக்கிற்கு உதவும் வகையிலான சரியான கேள்விகளைக் கேட்பது உங்களின் பொறுப்பாகும்.

கேள்விகளை நீங்கள் கேட்கக் கூடாது. குறிப்பாக, பாலியல் அல்லது சிறார் துன்புறுத்தல் குற்றச்சாட்டுகள் சம்மந்தப்பட்ட குற்றவியல் நடவடிக்கைகளில், நீதிமன்றத்தின் அனுமதியின்றி மற்ற நபர்களுடனான பாதிக்கப்பட்டவரின் பாலியல் அனுபவம் அல்லது உடற்தோற்றம் ஆகியவற்றுடன் தொடர்புடைய கேள்விகளைக் குறித்து குற்றஞ்சாட்டப்பட்டவர் கேட்கக் கூடாது.

உங்களின் குறுக்கு விசாரணையை முடிக்கும் முன்பு, முக்கியமான எதையும் நீங்கள் விட்டுவிடவில்லை என்பதை உறுதிசெய்துகொள்ள, நீங்கள், உங்களின் தற்காப்பு வாதத்தை முற்றிலுமாக சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

கீழ்வருவனவற்றைக் கோடிட்டுக் காட்ட நீங்கள் கேள்விகள் கேட்கலாம்:

- சாட்சியின் சாட்சியத்தில் முரண்பாடான அல்லது பொருந்தாத அம்சங்கள் உள்ளன.
- சாட்சிக்குத் தெரிந்துள்ள செய்தி தவறானவை அல்லது போதாதவை.
- சாட்சியை நம்பமுடியாது (எ.டு. அவரது நினைவாற்றல் அல்லது கண் பார்வைக்கூர்மை ஆகியவை ஐயத்திற்குரியவை).
- சாட்சி உண்மையைக் கூறவில்லை.

இறுதியாக, என்ன நடந்தது என்ற உங்களின் கூற்றை நீங்கள் சாட்சியிடம் முன்வைத்து, அதற்கு அவர் சம்மதிக்கிறாரா என்று கேட்கலாம். இவை "புட் குவைஸ்டியன்ஸ்" என்று அறியப்படுபவை.

### *(3) மறு விசாரணை*

உங்களின் குறுக்கு விசாரணைக்குப் பிறகு, அக்குறுக்கு விசாரணையின்போது வழங்கப்பட்ட பதில்கள் சிலவற்றைத் தெளிவுப்படுத்திக்கொள்ள, சாட்சியிடம் மேலும் கேள்விகள் கேட்பதன் வழி மறு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி உண்டு. அரசு தரப்பு, விடையடங்கிய கேள்விகளைக் கேட்டாலோ அல்லது குறுக்கு விசாரணையின்போது எழாத விவகாரங்களை எழுப்பினாலோ, நீங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கலாம்.

நீதிமன்றத்தில் அளிக்கப்படும் சாட்சியம்: எதிர்நோக்கக்கூடிய எதிர்ப்புகள்

அரசு தரப்பின் நேரடி விசாரணை, குறுக்கு விசாரணை அல்லது மறு விசாரணையின்போது, குறிப்பிட்ட கேள்விகள் கேட்கப்படுவதையோ அல்லது குறிப்பிட்ட சாட்சியங்கள் வழங்கப்படுவதையோ நீங்கள் எதிர்க்க முடியும். நீங்கள் எதிர்க்கும்போது, எழுந்து நின்று, "நான் எதிர்க்கிறேன், மாண்புமிகு நீதிபதி அவர்களே!" என்று கூறவேண்டும். அதன் பிறகு, நீங்கள் ஏன் எதிர்க்கிறீர்கள் என்று விளக்கவேண்டும். எதிர்ப்பிற்குப் பதிலளிக்க, மற்றத் தரப்பிற்கு வாய்ப்புண்டு. அடுத்து, அக்கேள்வியை அனுமதிக்கலாமா என்று நீதிபதி முடிவெடுப்பார். எதிர்க்கப்படக்கூடிய சில வகை கேள்விகள் அல்லது சாட்சியங்களின் உதாரணங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

பொருத்தமற்றச் சாட்சியம்

- பொதுவாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர் மற்றும்/அல்லது உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர் ஆகியோரின் குற்றச்சாட்டுகளுடன் தொடர்பில்லாத எந்த ஒரு சாட்சியமும் அனுமதிக்கப்படாது.
- பொருத்தமற்ற அனைத்து சாட்சியமும் நீதிபதியால் நிராகரிக்கப்படும்.
- நீதிபதி ஒரு கேள்வியைக் கேட்டாலோ, வழக்கை முன்கொண்டு சென்று வேறு ஒரு பகுதி அல்லது விவகாரத்தையொட்டிக் கேள்விகள் கேட்கும்படி உத்தரவிட்டாலோ, அது, யாரையும் இடைமறிப்பதற்கோ அல்லது ஒரு தரப்பிற்கு உதவுவதற்கோ அல்ல. இது, நேரம் விரயமாகாமல் இருப்பதையும், பொருத்தமான சான்றுகளின் அடிப்படையில் மட்டுமே வழக்கு முடிவெடுக்கப்படுகிறது என்பதையும் உறுதிப்படுத்துவதற்கேயாகும்.

பண்புக்கூறுகள்

- ஒரு பொது விதியாக, நீங்கள் தீயப் பண்புடையவர் என்று காட்டும்விதம் அரசு தரப்பு சாட்சியத்தை இட்டுச் செல்லக்கூடாது. இதில் உங்களின் கடந்த காலக் குற்றப்பதிவுகள் போன்ற சாட்சியங்களும் உள்ளடங்கும்.
- ஆனால், நீங்கள் நற்பண்புடையவர் என்று குறிப்பிடும் சான்றை முன்வைத்தால், நீங்கள் தீயப் பண்புடையவர் என்பதைக் காட்ட, அரசு தரப்பு, இத்தகைய ஏதேனும் சாட்சியங்களைப் (கடந்த கால குற்றப்பதிவுகள் உட்பட) பயன்படுத்தலாம்.
- நீங்கள், அரசு தரப்பு சாட்சிகளிடம் உங்களின் நற்பண்பைக் குறித்து கேள்விகள் கேட்டாலோ, நேரடி விசாரணையின்போது இவ்வகையாக வாக்குமூலங்கள் செய்தாலோ, மற்றும்/அல்லது உங்களின் நற்பண்பு குறித்துச் சாட்சியம் வழங்கச் சாட்சிகளை அழைத்தாலோ, நீங்கள் நற்பண்பு உடையவர் என்று வாதிடுகிறீர்கள் என்று பொருள்படும்.

செவி வழி சாட்சியம்

- நீதிமன்றத்தில் ஒரு சாட்சியாக இடம்பெறாத ஒருவர் செய்த வாக்குமூலத்தின் உள்ளடக்கம் உண்மையென நிரூபிக்க முன்வைக்கப்படும் அந்த வாக்குமூலமே, செவி வழி சாட்சியம் என்று அழைக்கப்படுகிறது. அது, நீதிமன்றத்தில் இடம்பெற்றிருக்கும் சாட்சிகளில் ஒருவர் தற்செயலாகக் கேட்ட ஒரு வாய் வழி வாக்குமூலமாக இருக்கலாம் அல்லது எழுத்து வடிவு ஆவணமாக இருக்கலாம்.
- உதாரணத்திற்கு, ஒரு கொலை குற்ற வழக்கில் A நீதிமன்றத்திற்குச் சாட்சியாக அழைக்கப்பட்டு, "C கொலை செய்ததைத், தான் பார்த்ததாக B சொன்னதை நான் கேட்டேன்" என்று A நீதிமன்றத்தில் கூறினால், இது ஒரு செவி வழி சாட்சியமாகும். ஏனென்றால், A இதைத் தனிப்பட்ட வகையில் அறிந்திருக்கவில்லை. A-ன் வாக்குமூலம் அனுமதிக்கப்படாத செவி வழி சாட்சியம் மற்றும் B சாட்சி வழங்க அழைக்கப்படவேண்டும்.
- செவி வழி சாட்சிய விதிக்குப் பல்வேறு விதிவிலக்குகள் உள்ளன: அவை, (i) வாக்குமூலம் கொடுத்தவர் இறந்துவிட்டார், அவரைக் கண்டுபிடிக்கமுடியவில்லை அல்லது அவர் வெளியூரில் இருப்பதால் அவரைச் சான்றளிக்க செய்ய முடியாது (ii) வாக்குமூலங்கள் சாதாரண வர்த்தக ஆவணங்களில் அடங்கியுள்ளவை போன்றவையாகும். செவி வழி சாட்சியத்திற்கான விதிவிலக்குகள் யாவை என்பதை அறிந்துகொள்ள, நீங்கள் சான்று சட்டத்தின் (அத்தியாயம் 97) பிரிவு 32-யைக் கண்டு அறிந்துகொள்ளலாம்

அபிப்பிராயம்

- பொதுவில், சாட்சி தாம் நேரில் கண்ட, கேட்ட அல்லது அனுபவித்த நிகழ்வுகளின் அடிப்படையில் மட்டுமே சாட்சியம் வழங்க வேண்டுமே தவிர, இந்நிகழ்வுகளை ஒட்டிய தங்களின் அனுமானங்கள்/கருத்துகள் கொண்டு அல்ல. உங்களின் சாட்சிகளை அனுமானிக்க அல்லது அவர்களின் கருத்தை வழங்க வற்புறுத்தும் கேள்விகளை நீங்கள் கேட்கக்கூடாது.
- ஒரு குறிப்பிட்ட அனுபவம்/படிப்பு தேவைப்படும் ஒரு நிபுணத்துவ விவரத்தைப்பற்றி (எ.டு. மருத்துவச் சான்று அல்லது ஒரு விபத்தின் மறு வடிவமைப்பு) ஒரு சாட்சி அவரது கருத்தைக் கூற வேண்டும் என்ற அவசியம் உங்களுக்கு இருந்தால், அந்தச் சாட்சி, ஒரு நிபுணத்துவ சாட்சியாகச் சாட்சியமளிக்க அழைக்கப்படவேண்டும். நீங்கள் ஒரு நிபுணத்துவ சாட்சியை அழைத்தால், அத்துறையில் நிபுணர் என்ற முறையில் அவரது கல்வித் தகுதி மற்றும் அனுபவம் குறித்து நீங்கள் கேள்விகள் கேட்க வேண்டும்.

## படி 3: தற்காப்பு வாதம் வழங்க அழைப்பு

அரசு தரப்பு அதன் எல்லா சாட்சிகளையும் அழைத்த பிறகு, குற்றச்சாட்டை எதிர்த்து நீங்கள் தற்காப்பு வாதம் செய்வதற்குப் போதுமான வலு சேர்க்கும் ஆதாரங்களுடன் அரசு தரப்பு அதன் வழக்கை முன் வைத்துள்ளதா என்று நீதிமன்றம் முடிவு செய்யும். அரசு தரப்பின் வழக்கை ஆதரிக்க போதுமான சாட்சியம் இல்லை என்று நீங்கள் நினைத்தால், வாதாட வழக்கில்லை என நீங்கள் பணிந்துரைக்கலாம்.

அரசு தரப்பின் வழக்கை ஆதரிக்கப் போதுமான சாட்சியங்கள் இருந்தால், உங்களின் தற்காப்பு வாதத்தை வழங்கும்படி நீதிமன்றம் உங்களைக் கேட்டுகொள்ளும், மற்றும் "அழைப்பு உரை" உங்களிடம் வாசிக்கப்படும். நீதிபதியால் உங்களுக்கு இரண்டு விருப்பத்தேர்வுகள் வழங்கப்படும்: (i) சாட்சிக் கூண்டிலிருந்து சாட்சியம் வழங்குவது (ii) மௌனமாக இருப்பது.

நீங்கள் மௌனமாக இருக்க தேர்வுச் செய்தால், உங்களுக்குப் பாதகமாக இருப்பவற்றையும் உள்ளடக்கும் எல்லா நியாயமான அனுமானங்களையும் நீதிமன்றம் செய்யலாம். நீங்கள் குற்றவாளியா இல்லையா என்பதைக் குறித்து முடிவெடுக்கும்போது உங்களின் மௌனத்தை நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொள்ளும்.

**தற்காப்பு வாதம் வழங்க அழைப்பு உரை**

உங்களுக்கு எதிராக விசாரிக்கப்படும் குற்றத்தை(களை) நீங்கள் செய்திருப்பீர்கள் என்ற சந்தேகத்தைப் போதுமான அளவிற்கு அரசு தரப்பு எழுப்பியுள்ளது. இந்தக் குற்றச்சாட்டில்(களில்) உள்ள ஒவ்வொரு மற்றும் எல்லா முக்கிய கூற்றையும் நிறைவு செய்யும், இயல்பாக நம்பக்கூடிய சில ஆதாரங்கள் உள்ளன. அதன்படி, உங்களின் தற்காப்பு வாதத்திற்காகச் சாட்சியம் வழங்க உங்களை அழைக்கிறேன். தேர்வுச் செய்ய உங்களுக்கு இரண்டு வழிமுறைகள் உள்ளன. முதலாவது, நீங்கள் சாட்சியம் வழங்க தேர்வுச் செய்தால், சாட்சிக் கூண்டிலிருந்து சத்தியம் செய்தோ அல்லது உறுதிமொழி எடுத்தோ உங்களின் சாட்சியத்தை வழங்கவேண்டும். இந்தச் சாட்சியத்தைக் குறித்து நீங்கள் குறுக்கு விசாரணை செய்யப்படுவீர்கள். இரண்டாவது, சாட்சி கூண்டிலிருந்து சாட்சியம் வழங்கப்போவதில்லை என்று நீங்கள் தேர்வுச் செய்தால்; அதாவது மௌனமாக இருக்கும் தேர்வைச் செய்தால் நீங்கள் குற்றவாளியா என்பதைக் குறித்து முடிவெடுக்கும்போது நீங்கள் சாட்சியம் வழங்க மறுத்ததைக் கொண்டு, நீதிமன்றம் ஏற்ற அனுமானங்களைச் செய்யலாம். அவற்றில் உங்களுக்கு எதிரான அனுமானங்களும் அடங்கலாம் என்று நான் உங்களிடம் கட்டாயமாகக் கூற வேண்டும். நீங்கள் எந்தத் தேர்வைச் செய்தாலும், உங்களின் தற்காப்பு வாதத்திற்கு நீங்கள் மற்றச் சாட்சிகளை அழைக்கலாம் என்றும் நான் கூறிக்கொள்கிறேன். உங்களின் வழக்கறிஞருடன் கலந்துபேசி, எந்த வழியைத் தேர்ந்தெடுக்க விரும்புகிறீர்கள் என்று முடிவு செய்யலாம்.

உங்களின் தற்காப்பு வாதம் குறித்து சாட்சியத்தை வழங்க நான் இப்பொழுது உங்களை அழைக்கின்றேன். நீங்கள் எவ்வாறு தேர்வுச் செய்கிறீர்கள்?

சாட்சியம் வழங்க நீங்கள் தேர்வுச் செய்தால், உண்மை கூறுவதாக முறைப்படி சத்தியம் செய்து அல்லது உறுதிமொழி எடுத்து, சாட்சிக் கூண்டிலிருந்து உங்களின் சாட்சியத்தை நீங்கள் வழங்கவேண்டும். மற்றும், அரசு தரப்பின் குறுக்கு விசாரணைக்கு உட்படவேண்டும். நீங்கள் எந்தத் தேர்வைச் செய்தாலும், உங்களின் தற்காப்பு வாதத்தை ஆதரித்துச் சாட்சியம் வழங்க நீங்கள் மற்றச் சாட்சிகளை அழைக்கலாம். (i) நேரடி விசாரணை; (ii) குறுக்கு விசாரணை; மற்றும் (iii) மறு விசாரணை எனும் அதே நடைமுறை எல்லா எதிர் தரப்புச் சாட்சிகளுக்கும் பொருந்தும்.

### *படி 4: குற்றஞ்சாட்டப்பட்டவரின் விசாரணை*

#### *(1) நேரடி விசாரணை*

சாட்சியம் வழங்குவது என்று நீங்கள் தேர்வுச் செய்துள்ளீர்கள் என்றால், சாட்சிக் கூண்டிற்குப் போகும் முதல் நபர் நீங்கள் தான். உங்களின் வழக்கை நீங்கள் தொடர்வதற்கு முன், உங்களின் தற்காப்பு வாதத்தில் நீங்கள் என்ன சொல்ல போகிறீர்கள் என்று யோசிக்க சிறிய கால அவகாசம் தேவையென நீங்கள் நீதிபதியிடம் கேட்டுக்கொள்ளலாம்.

நீங்கள் குற்றவாளி இல்லை என்று கூறுவதற்கான காரணங்களின் சுருக்கத்தைக் கூறி, உங்களின் வாதத்தைத் தொடங்கலாம். உண்மை கூறுவதாக முறைப்படி சத்தியம் செய்த பிறகு, நீங்கள் உங்களின் முழு பெயர், வயது மற்றும் செய்யும் தொழில் ஆகியவற்றைக் கூற வேண்டும். அதன் பிறகு, என்ன நடந்தது என்பதைப்பற்றிய உங்களின் தரப்பு விளக்கத்தை நீங்கள் வழங்கலாம். இது தான் "குற்றம் சாட்டப்பட்டவரின் நேரடி விசாரணை" எனப்படுவது. மேலும், விவகாரத்தையொட்டிய உங்களின் தரப்பு விளக்கத்தை முன்வைக்க, இது ஒரு வாய்ப்பாகும்.

#### *(2) குறுக்கு விசாரணை*

உங்களைக் குறுக்கு விசாரணை செய்ய, அரசு தரப்பு உங்களிடம் வரிசையாகச் சில கேள்விகளைக் கேட்கும். புலன் விசாரணையின்போது நீங்கள் அளித்த வாக்குமூலங்களை முன்வைக்க வேண்டலாம். இவ்வாக்குமூலங்கள் வழக்கு விசாரணையில் சாட்சியமாக அனுமதிக்கப்படுவதற்கு நீங்கள் உடன்படவில்லை என்றால், வழக்கை மேலும் தொடர்ந்து நடத்துவதற்கு முன்பு, நீதிபதி வாக்குமூலங்களை அனுமதிப்பதைப்பற்றி ஒரு முடிவெடுப்பதற்காக ஒரு துணை விசாரணை (மேலும் தகவல்களைப் பெறக் கீழே காணவும்) நீதிபதியின் முன் நடத்தப்படும். வாக்குமூலங்கள் அனுமதிக்கப்பட்டாலும்கூட, அவற்றிற்கு நீதிபதி குறைந்த முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று நீங்கள் நீதிபதியிடம் வாதாடலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும். (எ.டு. நீங்கள் அக்குற்றத்தைப் புரிந்துள்ளீர்கள் என்பதை அவை காட்டவில்லை).

### (3) மறு விசாரணை

குறுக்கு விசாரணை முடிந்த பின், அரசு தரப்பு வழக்கறிஞரிடம் நீங்கள் அளித்த பதில்களைத் தெளிவுப்படுத்திக்கொள்ள உங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும்.

### படி 5: குற்றஞ்சாட்டப்பட்டவரின் சாட்சிகளின் விசாரணை

நீங்கள் உங்களின் சாட்சியத்தை வழங்கிய பின், உங்களின் மற்றச் சாட்சிகளைச் சாட்சியம் வழங்க, அவர்களை ஒருவர் பின் ஒருவராக நீங்கள் அழைக்கலாம்.


| உதவி: கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கியமான குறிப்புகள் |
|---|
| நீதிபதி கேட்கவேண்டும் என நீங்கள் விரும்பும் அனைத்து சாட்சியங்களும் உங்களின் வழக்கு விசாரணையின்போது முன்வைக்கப்படவேண்டியது மிக முக்கியமாகும். |
| நீங்கள் மற்றவர்களைப்பற்றியும் அல்லது பொருள்களைப்பற்றியும் தகாத கருத்துகள் கூறுவதைத் தவிர்க்கவேண்டும். |
| சம்பவமன்று என்ன நடந்ததென்று நீதிபதியிடம் கூறுவதில் மட்டுமே கவனம் செலுத்துங்கள். அவசியமற்ற விவரங்கள் வழக்கைத் தீர்மானிக்க நீதிபதிக்கு உதவப்போவதில்லை. |
| நீங்கள் நீதிமன்றத்திடம் சான்றுகளை முன்வைத்தால், அச்சான்றுகள் எதற்கானவை என்று விளக்குவதுடன் அவற்றைப்பற்றிய சில விவரங்களையும் நீதிபதியிடம் வழங்கவேண்டும். |

துணை விசாரணை

ஏதேனும் சாட்சியம் அனுமதிக்கப்படுவதைக் குறித்து ஏதேனும் விவாதம் எழுந்தால், அந்தச் சாட்சியம் அனுமதிக்கப்படக்கூடியதா என்று தீர்மானிக்க, நீதிமன்றம் தனது விருப்புரிமையைப் பயன்படுத்தி ஒரு துணை விசாரணைக்கு உத்தரவிடலாம். சுருக்கத்தில், பின்வரும் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால் ஒரு புலன் விசாரணை வாக்குமூலம் அனுமதிக்கப்படும்:

- அது சார்ஜண்ட் பதவிக்கும் மேலுள்ள பதவியை வகிக்கும் ஒரு காவலதிகாரியிடம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.
- அது, அதிகாரத்தில் இருக்கும் ஒரு நபரின் மிரட்டலின், தூண்டுதலின் அல்லது வாக்குறுதியின் மூலம் எடுக்கப்பட்டிருக்கக்கூடாது; மற்றும் தனக்கெதிராகச் சாட்டப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பாக தான் ஏதேனும் அனுகூலங்கள் பெறலாம் அல்லது தீங்கைத் தவிர்க்கலாம் என்று குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட்ட நம்பிக்கையின் அடிப்படையில் எடுக்கப்பட்டிருக்கக்கூடாது.
- அடக்குமுறை சூழ்நிலைகளில் (எ.டு. உணவு, தண்ணீர் அல்லது மருந்து கொடுக்காமல்), குற்றஞ்சாட்டப்பட்டவரின் சுய விருப்பம் படிப்படியாக பலவீனப்படுத்தப்பட்டு அதன் காரணமாக, அவர், தனக்கெதிராகச் சாட்டப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பாக ஏதேனும் அனுகூலங்கள் பெறவும் அல்லது தீங்கைத் தவிர்க்கவும் அது எடுக்கப்பட்டிருக்கக்கூடாது.

துணை விசாரணையின்போது, நீங்கள் கொடுத்த வாக்குமூலம், உங்களின் சுய விருப்பத்தின் பேரில்தான் வழங்கப்பட்டதா என்பதைப்பற்றி தெரிந்துகொள்வதில் நீதிமன்றத்திற்கு ஆர்வம் உள்ளது. ஆகையால், உங்களின் வாக்குமூலம் எவ்வாறு பதிவு செய்யப்பட்டது, வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட சமயத்தில் என்ன நேர்ந்தது மற்றும் உங்களின் சுய விருப்பத்தின் பேரில் வாக்குமூலத்தை நீங்கள் கொடுக்க முடியாத அளவிற்கு அது ஏன் உங்களைப் பாதித்தது போன்றவற்றில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். பிறகு வாக்குமூலம் அனுமதிக்கப்பட வேண்டுமா என நீதிபதி தன் முடிவை அறிவிப்பார்.




## (1) நேரடி விசாரணை

நீங்கள், உங்களின் சாட்சியிடம், அவரது பெயர், வயது, அடையாள அட்டை எண் மற்றும் தொழில் போன்ற அடிப்படை விவரங்களை நீதிமன்றத்திடம் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ள வேண்டும். நீங்கள், நிபுணத்துவ சாட்சிகளை அழைத்திருந்தால், ஒரு நிபுணர் என்ற அடிப்படையில் அவரது கல்வித் தகுதிகளை நீதிமன்றத்திடம் தெரிவிக்கும்படி நீங்கள் உங்களின் சாட்சியைக் கேட்டுக்கொள்ள வேண்டும். ஒரு நிபுணத்துவ சாட்சி என்பவர், உங்களின் வழக்கை ஆதரிக்கும் சிறப்பான அறிவு திறம் கொண்டுள்ளவராவார்.

எ.டு. மருத்துவர்கள் மற்றும் பொறியாளர்கள்

பிறகு, உங்களுக்கு உதவக்கூடும் அல்லது அரசு தரப்பின் வழக்கைப் பலவீனப்படுத்தக்கூடும் என நீங்கள் நினைக்கும் ஏதேனும் கேள்வியை நீங்கள் உங்களின் சாட்சியிடம் கேட்கலாம். எனினும், சாட்சி பதிலளிக்கக்கூடிய கேள்விகளை மட்டுமே நீங்கள் கேட்கவேண்டும் மற்றும் அந்தச் சாட்சி, தான் தனிப்பட்ட வகையில் அறிந்துகொண்ட தொடர்புடைய உண்மைகளைச் சார்ந்து மட்டுமே சாட்சியமளிக்கவேண்டும்.

| உதவி: ஒரு சாட்சியிடம் கேட்கக் கூடாதவை |
|---|
| மற்றச் சாட்சிகள் வழங்கிய சாட்சியங்களைப் பற்றி அவரது கருத்து. |
| அவருடைய அபிப்பிராயங்கள் (அவர் ஒரு நிபுணத்துவ சாட்சியாக இருந்தாலேயன்றி). |
| சட்டத்தைக் குறித்த அவரது கருத்துகள். |
| வேறொருவரின் உள்ளார்ந்த நோக்கங்கள் எண்ணங்கள் மற்றும் அபிப்பிராயங்கள் என்னவாக இருந்தன. |

நீங்கள், உங்களின் சாட்சியிடம் கேட்கும் கேள்விகள் சுய விடை வினாக்களாக இருக்கவேண்டும். இதன் பொருள் என்னவென்றால், கேட்கப்படும் கேள்வி, சாட்சியை நீங்கள் விரும்பும் பதிலுக்கு இட்டுச் செல்லக்கூடாது. சம்பவங்களைக் குறித்த உங்களின் விளக்கத்தைக் கூறி, அதற்குச் சாட்சி சம்மதிக்கிறாரா என்று கேட்கக்கூடாது. ஓர் உதாரணத்திற்கு, "சம்பந்தப்பட்ட நாளன்று, நான் உன்னுடன் இரவு உணவு உண்டுகொண்டிருந்தேன் என்பதை நீ ஒப்புக்கொள்கிறாயா?" போன்ற கேள்விகளைக் கேட்க கூடாது. மாறாக, "சம்பந்தப்பட்ட நாளன்று, நீ என்ன செய்து கொண்டிருந்தாய்," என்று கேட்க நீங்கள் விரும்பலாம். 'யார்', 'என்ன', 'எங்கே', 'எப்பொழுது', அல்லது 'எப்படி' ஆகியவற்றுடன் நீங்கள் தொடங்கினால், சுயவிடை வினாக்களைக் கேட்பதற்குப் பொதுவாக சுலபமாகயிருக்கும்.

### (2) குறுக்கு விசாரணை

நீங்கள், உங்களின் சாட்சிகளிடம் கேள்விகள் கேட்டு முடித்த பின், அரசு தரப்பு உங்களின் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யும். குறுக்கு விசாரணையின்போது, அவர்கள் (உங்களின் சாட்சிகள்) வழங்கிய சாட்சியங்களுக்குச் சவாலாக, விடையடங்கிய கேள்விகளை அரசு தரப்பு கேட்கக் கூடும்.

### (3) மறு விசாரணை

உங்களின் சாட்சி, அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பிறகு, உங்களின் சாட்சிகள் குறுக்கு விசாரணையின்போது கூறியவற்றைத் தெளிவுபடுத்திக்கொள்ள நீங்கள் உங்களின் சாட்சிகளை மறு விசாரணை செய்யலாம். குறுக்கு விசாரணையின்போது அரசு தரப்பு உங்களின் சாட்சியிடம் முன்வைத்து, உங்களின் சாட்சி விளக்கமளிக்க இயலாமல் போன்றவற்றை விளக்கும்படி அல்லது எதிர்த்துப் பேசும்படி நீங்கள் உங்களின் சாட்சியிடம் கேள்விகள் கேட்கலாம்.

**உதவி: மறு விசாரணையின்போது என்ன செய்வது?**

மறு விசாரணை, புதிய சாட்சியங்களை எழுப்பும் மற்றொரு சந்தர்ப்பம் அல்ல.

குறுக்கு விசாரணையின்போது குறிப்பிடப்பட்ட சிலவற்றைப்பற்றி விவரிக்க அல்லது தெளிவுப்படுத்த மட்டுமே மறு விசாரணை நடத்தப்படவேண்டும்.

நீங்கள் சுய விடை வினாக்களைக் கேட்கவேண்டும். தவிர, உங்களின் சுய கருத்தைச் சாட்சியிடம் கூறி, அவற்றை அவர் ஒப்புக்கொள்கிறாரா இல்லையா என்று கேட்கக்கூடாது.

### படி 6: அரசு தரப்பின் எதிர்த்துரைக்கும் சாட்சி

இந்தக் கட்டத்தில், உங்களின் தற்காப்பிற்காக நீங்கள் எழுப்பிய சாட்சியங்களை எதிர்த்துரைக்க, அரசு தரப்பு புதிய சாட்சிகளை அல்லது ஏற்கனவே சாட்சியம் அளித்த சாட்சிகளை மீண்டும் அழைக்கலாம். உங்களின் தற்காப்பால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தகவல்களை எதிர்த்துரைக்க மட்டுமே ஒரு எதிர்த்துரைப்புச் சாட்சியை அழைக்க முடியும். அவர்களைக் குறுக்கு விசாரணை செய்ய உங்களுக்கும் வாய்ப்பு வழங்கப்படும்.

### படி 7: இறுதி முன்வைப்புரைகள்

வழக்கு விசாரணையின் முடிவில், நீங்களும், அரசு தரப்பு வழக்கறிஞரும், அவரவர் இறுதி முன்வைப்புரைகளை வழங்க வாய்ப்பளிக்கப்படும். வழக்கின் முடிவைத் தங்களுக்குச் சாதகமாக வழங்கும்படி நீதிபதியை இணங்க செய்யத் தங்களின் சாட்சியங்களையும் ஆதாரங்களையும் தரப்பினர்கள் தொகுத்துச் சொல்ல வாய்ப்பளிப்பதே இதன் நோக்கமாகும்.

**உதவி: கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கியமான குறிப்புகள்**

நீங்கள், வாதத்திற்குறிய பொருத்தமான விவகாரங்களில் கவனம் செலுத்தி, நீதிபதி ஏன் உங்களை நம்ப வேண்டும் என்ற காரணத்தை விளக்க வேண்டும்.

அரசு தரப்பு முன்வைத்த சாட்சியங்களில் உள்ள குறைகளைக் கவனத்திற்குக் கொண்டு வந்து, நீங்கள் 'நிரபராதி' என்ற தீர்ப்பு வழங்குவதற்கான காரணத்தை எடுத்துரைக்கவேண்டும்.

வழக்கு விசாரணையின்போது வழங்கப்பட்ட அனைத்து சாட்சியங்களைப்பற்றி பேச உங்களுக்கு அனுமதி வழங்கப்படும். சாட்சியங்களாக முன்வைக்கப்பட்ட ஏதேனும் ஆவணங்கள், புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் ஆகியவையும் இதில் அடங்கும். இந்தக் கட்டத்தில் நீங்கள் புதிய சாட்சியங்களைக் கொண்டு வரமுடியாது.

உங்களின் இறுதி முன்வைப்புரைகளை முதலில் முன்வைக்குமாறு உங்களிடம் கேட்டுக்கொள்ளப்படும். அதன் பிறகு, அரசு தரப்பு அதன் இறுதி முன்வைப்புரைகளைத் தொடரும். உங்களின் இறுதி முன்வைப்புரைகளைத் தயார் செய்ய உங்களுக்கு அவகாசம் தேவைப்பட்டால், நீதிபதியிடம் நீங்கள் கூடுதல் அவகாசம் கேட்டுக்கொள்ளலாம். வழக்கின்போது என்ன கூறப்பட்டது என்று உங்களுக்கு ஞாபகம் இல்லையென்றால், சாட்சிய குறிப்புகளின் **(Notes of Evidence)** ஒரு நகல் படிவத்திற்கு மத்திய பதிவகத்தின் (அரசு நீதிமன்றங்கள், 2-ம் தளம்) மூலம் தாக்கல் செய்யலாம். நீதிமன்றத்தில் வெவ்வேறு நபர்கள் வாய்மொழியாகக் கூறியதன் எழுத்து வடிவ ஆவணமே சாட்சிய குறிப்புகளாகும் **(Notes of Evidence)**.

### *படி 8: தீர்ப்பு*

இறுதியாக, நீதிபதி வழக்கைத் தீர்மானித்து, அவரது முடிவைத் தீர்ப்புரையில் வழங்குவார். நீங்கள் விடுவிக்கப்பட்டால் (அதாவது குற்றவாளி இல்லையென்று தீர்ப்பளிக்கப்பட்டால்), வழக்கு விசாரணை செயல்முறை ஒரு முடிவுக்கு வரும். நீங்கள் விடுதலையாகிச் செல்லலாம். நீங்கள் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டால், (குற்றவாளியென நிரூபிக்கப்பட்டால்), வழக்கு அடுத்த கட்டமாக, தண்டனை தணிப்பு வாதம் மற்றும் தண்டனை விதிப்பிற்குச் செல்லும். இக்கட்டத்தில் நீங்கள் எவ்வாறு தண்டிக்கப்படவேண்டும் என நீதிபதி முடிவு செய்வார். வழங்கப்பட்டத் தீர்ப்பு அல்லது தண்டனை அல்லது இரண்டிலுமே உங்களுக்கு மனநிறைவு இல்லையென்றால், தண்டனை அறிவிக்கப்பட்ட, 14 நாள்காட்டி நாட்களுக்குள், மத்திய பதிவகத்தில் (அரசு நீதிமன்றங்கள், 2-ம் தளம்) மேல்முறையீட்டை நீங்கள் தாக்கல் செய்யலாம். (மேல்முறையீடு பற்றிய தகவல்களுக்கு, அத்தியாயம் 7-யைக் காணவும்).

# 06

# தண்டனை விதிப்பு

**(A)** தண்டனை வகைகள்

**(B)** சமூக நீதிமன்றங்கள் மற்றும் சமூகம் சார்ந்த தண்டனைகள்

**(C)** தண்டனை விதிப்பு நடைமுறை

**(D)** நியூட்டன் விசாரணை

அத்தியாயம் 6

# தண்டனை விதிப்பு

இந்தப் பகுதி, தண்டனை விதிப்பின் 3 அம்சங்களைக் கையாளுகிறது. முதலாவதாக, நாங்கள், சட்டத்தில் வரையறுக்கப்பட்ட பல்வேறு தண்டனைகளைப் பற்றி விளக்குவோம். இரண்டாவதாக, தண்டனை விதிப்பில் சம்மந்தப்பட்டுள்ள படிகளைப் பார்ப்போம். குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் விளைவாக தண்டனை விதிக்கப்பட்டாலும் அல்லது ஒரு வழக்கு விசாரணைக்குப் பிறகு குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டாலும் இந்நடைமுறை கடைப்பிடிக்கப்படும். இறுதியாக, நாம் நியூட்டன் விசாரணையைப் பற்றிக் காண்போம். இது, உண்மை விவரங்களை ஒட்டிய சர்ச்சைகளைத் தீர்ப்பதற்காகப் பிரத்தியேகமாக நடத்தப்படும் ஒரு விசாரணையாகும். இவ்விசாரணையின் முடிவு தண்டனை விதிப்புடன் தொடர்புடையதாகும்.

## (A) தண்டனை வகைகள்

### *(1) தண்டனை என்றால் என்ன?*

நீங்கள் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்ட பிறகு, நீங்கள் அனுபவிக்க வேண்டிய ஒன்றே "தண்டனை" என்பதாகும்.

### *(2) ஒரு குற்றச்சாட்டிற்கு, எனக்கு வழங்கப்படக்கூடிய தண்டனை என்னவென்று நான் எப்படி அறிந்துகொள்வேன்?*

உங்களின் குற்றப்பத்திரிக்கை அக்குற்றச்செயலுக்கு வழங்கப்படக்கூடிய ஆகக் கூடுதலான தண்டனையைக் குறிப்பிடும். இது குற்றப்பத்திரிக்கையின் கீழ்ப்பகுதியில் காணப்படும். சில சந்தர்ப்பங்களில் உங்களுக்கெதிரான குற்றம் ஆகக் குறைவான தண்டனை வழங்கப்படக்கூடியதாக இருக்கலாம். அவ்வாறிருப்பின், உங்களின் குற்றப்பத்திரிக்கை அந்த ஆகக் குறைந்த தண்டனையையும் குறிப்பிடும்.

உங்களுக்கு ஒரு வழக்கறிஞர் இருந்தால், ‘வழக்கமாக விதிக்கப்படும் தண்டனை வீதம்’ என்னவென்று உங்களின் வழக்கறிஞரால் உங்களுக்கு ஆலோசனை வழங்க முடியும். வழக்கமாக விதிக்கப்படும் தண்டனை வீதம் என்பது உங்களின் மேல் சுமத்தப்பட்டுள்ள குற்றத்திற்கு வழக்கமாக நீதிமன்றங்களால் விதிக்கப்படும் தண்டனைகளின் வரம்பாகும்.

### *(3) சட்டத்தில் எவ்வகையான தண்டனைகள் உள்ளன?*

தண்டனையாக விதிக்கப்படக்கூடிய பல்வேறு தண்டனைகள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் அடங்குபவை:

(a) அபராதங்கள்
(b) சிறைத் தண்டனை
(c) பிரம்படி
(d) தடுப்புக் காவல்
(e) சீர்த்திருத்தப் பயிற்சி
(f) நன்னடத்தைக் கண்காணிப்பு
(g) இளையர் சீர்த்திருத்தப் பயிற்சி
(h) சமூகம் சார்ந்த தண்டனைகள்

இத்தண்டனைகள் ஒவ்வொன்றிற்குமான விரிவான விளக்கம் வருமாறு:

### *(a) அபராதம்*

ஒரு அபராதம் என்பது நீதிமன்றம் உங்களுக்கு விதிக்கும் ஒரு பணம் சார்ந்த தண்டனையாகும். விதிக்கப்பட்ட அபராதத் தொகையை நீங்கள் செலுத்தாவிட்டால், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குச் சிறைத் தண்டனையை நீங்கள் அனுபவிக்க நேரிடலாம். இந்த "அபராதத்திற்குப் பதிலான சிறைத் தண்டனை" நீதிமன்றத்தால் அறிவிக்கப்படும் மற்றும் அது பின் தேதியிடப்படவோ இன்னொரு சிறைத் தண்டனையுடன் ஏக சமயத்தில் நிறைவேற்றப்படவோ முடியாது. அதனால், அபராதத் தொகையை உடனடியாகச் செலுத்த நீங்கள் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அபராதத்திற்குப் பதிலாக நீங்கள் அனுபவிக்கும் சிறைத் தண்டனை காலத்தில், எந்த ஒரு கட்டத்திலாவது உங்களால் அபராதத் தொகையைச் செலுத்த முடிந்தால் (அல்லது உங்களின் சார்பாக எவரேனும் ஒருவரால், அவ்வாறு செய்ய முடிந்தால்), நீங்கள் சிறைச்சாலையில் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் (அபராதம் செலுத்தப்படும் நேரம் வரை நிறைவேற்றப்பட்ட சிறைக் காலத்தைப் பொறுத்து, சரிசம வீதப்படி கணக்கிடப்பட்ட) எஞ்சிய அபராதத் தொகை செலுத்தப்பட்டவுடன் நீங்கள் விடுவிக்கப்படலாம்.

உங்களின் அபராதத்தைத் தவணை முறையில் செலுத்த நீங்கள் விண்ணப்பிக்கலாம். ஆனால், நீங்கள் முன் வைக்கும் தவணை முறை திட்டத்திற்கு அனுமதி வழங்கப்படுமா என்பது நீதிபதியின் விருப்புரிமையைப் பொறுத்துள்ளது. மேலும் தகவல்கள் பெற www.judiciary.gov.sg என்ற எங்களின் இணையத்தளத்தைக் காணவும்.

***எந்த ஒரு அபராதத்தையும் தவணை முறையில் செலுத்த நீங்கள் விண்ணப்பிக்கலாம். ஆனால், உங்களின் கோரிக்கையை அனுமதிப்பது நீதிபதியைப் பொறுத்துள்ளது.***

### *(b) சிறைத் தண்டனை*

சிறைத் தண்டனை என்றால் நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்படும் ஒரு காலக்கட்டத்திற்கு உங்களைச் சிறைக்கு அனுப்புவது என்பதாகும்.

### *(c) பிரம்படி*

குறிப்பிட்ட சில குற்றங்களுக்கு நீதிமன்றத்தால் பிரம்படி விதிக்கப்படலாம் அல்லது கட்டாயம் விதிக்கப்பட வேண்டும். உங்களுக்கு எத்தனை பிரம்படிகள் கொடுக்கப்பட வேண்டும் என்பதை நீதிமன்றம் முடிவு செய்யும்.

50 வயதிற்கும் குறைந்த ஆண் குற்றவாளிகளுக்கு மட்டுமே பிரம்படி விதிக்கப்படலாம். ஒரு குற்றவாளிக்குப், பிரம்படியால் தண்டிக்கப்படக்கூடிய ஒன்றுக்கும் மேற்பட்ட குற்றங்களுக்கு ஒரே சமயத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டால், இந்தக் குற்றங்கள் எல்லாவற்றுக்குமே நீதிமன்றத்தால் ஆக அதிகமாக வழங்கப்படக்கூடிய பிரம்படிகள் 24 மட்டுமே. நீங்கள் ஒரு பெண்ணாகவோ அல்லது 50 வயது அல்லது அதற்கு மேற்பட்ட ஓர் ஆணாகவோ இருந்தால், உங்களுக்குப் பிரம்படி விதிக்கப்பட முடியாது. எனினும், நீதிமன்றம் உங்களுக்குப் பிரம்படி விதிக்க முடியாவிட்டாலும், அதற்குப் பதிலாக, 12 மாதங்கள் வரையிலான ஒரு நீண்டகால சிறைத் தண்டனையை விதிக்க முடியும்.

### *(d) தடுப்புக் காவல்*

தடுப்புக் காவல் என்பது சிறைத் தண்டனையிலிருந்து தனிப்பட்ட ஒரு திட்ட முறையாகும். இதன்படி, ஒரு குற்றவாளியை ஆகக் குறைவாக 7 ஆண்டுகளுக்கும் ஆகக் கூடுதலாக 20 ஆண்டுகள் வரையிலும் சிறையில் அடைக்கலாம். பொதுமக்களின் பாதுகாப்புக்காக நீங்கள் கணிசமான காலத்திற்குச் சிறையில் தடுத்து வைக்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் உறுதியாக நம்பினால் மட்டுமே இந்தத் தண்டனை விதிக்கப்படும். ஒரு மாவட்ட நீதிமன்றம் அல்லது உயர் நீதிமன்றம்,

குற்றவியல் நடைமுறைச் சட்டம் (அத்தியாயம் 68), பிரிவு 304 (2)-ல் வரையறுக்கப்பட்ட தேர்வு முறைகளை அனுசரித்து, குறைந்தது 30 வயதானவராகவும், 16 வயதை அடைந்ததிலிருந்து மூன்று முந்தைய குற்றத்தீர்ப்புகளையும் கொண்ட ஒரு குற்றவாளிக்குத் தடுப்புக் காவல் தண்டனையை விதிக்க முடியும். நீதிமன்றம், எந்தவொரு குற்றவாளிக்கும் தடுப்புக் காவல் தண்டனையை வழங்குவதற்கு முன், குற்றவாளியின் உடல் மற்றும் மனநிலையையும், அவர் தடுப்புக் காவல் தண்டனைக்கு ஏற்றவரா என்பதையும் விளக்கும் சிறைச்சாலையால் தயாரிக்கப்படும் ஓர் அறிக்கைக்கு உத்தரவிட்டு அதைக் கருத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

### *(e) சீர்த்திருத்தப் பயிற்சி*

சீர்த்திருத்தப் பயிற்சி என்பது பல வகைகளில் ஒரு சிறைத் தண்டனையை ஒத்திருக்கும் ஒரு வகை தண்டனையாகும். உங்களுக்குச் சீர்த்திருத்தப் பயிற்சி தண்டனையாக வழங்கப்பட்டால், ஒரு கணிசமான காலக்கட்டத்திற்குத் திருத்தும் தன்மை கொண்ட பயிற்சி உங்களுக்கு வழங்கப்படும். உங்களின் தண்டனை காலம் நிறைவு பெறும் முன் நீங்கள் விடுதலை செய்யப்பட்டால், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குக் கண்காணிப்பில் வைக்கப்படுவீர்கள். ஒரு சீர்த்திருத்தப் பயிற்சி தண்டனை விதிக்கப்பட்டால், அது ஒரு தவணைக்குக் குறைந்தது 5 ஆண்டுகள் முதல் ஆகக் கூடுதலாக 14 ஆண்டுகள் வரை நீடிக்கும். சீர்த்திருத்தப் பயிற்சி வழங்கப்படாமலிருக்க சிறப்புக் காரணங்கள் இருந்தாலேயன்றி, சீர்த்திருத்தப் பயிற்சி வழங்கப்படுவதற்குக் குற்றவியல் நடைமுறைச் சட்டம் (அத்தியாயம் 68) பிரிவு 304(1)-ல் வரையறுக்கப்பட்ட தேர்வு முறைகள் நிறைவேற்றப்பட்டால், சீர்த்திருத்தப் பயிற்சி அவசியம் என்றோ அல்லது குற்றவாளியின் சீர்த்திருத்தத்தை மற்றும் குற்ற தடுப்பை அது வெற்றிகொள்ளும் என்றோ நீதிமன்றம் மனநிறைவடைந்தால், அது சீர்த்திருத்தப் பயிற்சியைத் தண்டனையாக வழங்கலாம். நீங்கள் 18 வயதிற்கும் குறைந்தவராக இருந்தால், ஒரு மாவட்ட நீதிமன்றமோ அல்லது உயர் நீதிமன்றமோ உங்களுக்குச் சீர்த்திருத்தப் பயிற்சி தண்டனையை வழங்க முடியாது. நீதிமன்றம், எந்தவொரு குற்றவாளிக்கும் சீர்த்திருத்தப் பயிற்சியைத் தண்டனையாக வழங்குவதற்கு முன், குற்றவாளியின் உடல் மற்றும் மனநிலையையும், அவர் சீர்த்திருத்தப் பயிற்சிக்கு ஏற்றவரா என்பதையும் விளக்கும் சிறைச்சாலையால் தயாரிக்கப்படும் ஓர் அறிக்கைக்கு உத்தரவிட்டு அதைக் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

### *(f) நன்னடத்தைக் கண்காணிப்பு*

ஒரு குற்றவாளி, அபராதம் அல்லது சிறைத் தண்டனை பெறுவதற்குப் பதிலாக நன்னடத்தைக் கண்காணிப்பில் வைக்கப்படலாம். அக்குற்றவாளி, 6 மாதத்திற்கும் 3 வருடங்களுக்கும் இடைப்பட்ட ஒரு காலக்கட்டத்திற்கு ஒரு நன்னடத்தைக் கண்காணிப்பு அதிகாரியால் கண்காணிக்கப்படுவார்.

நீங்கள் நன்னடத்தைக் கண்காணிப்பில் வைக்கப்பட்டால், பொதுவாக, உங்களின் அன்றாட நடவடிக்கைகளை நீங்கள் சுதந்திரமாக மேற்கொள்ளலாம். ஆயினும், நீங்கள் மீண்டும் குற்றம் புரியக்கூடாது. மேலும், உங்களின் நன்னடத்தைக் கண்காணிப்பு உத்தரவுடன் இணைக்கப்பட்ட நிபந்தனைகளை, எடுத்துக்காட்டாக, நேரத்தடைக்குக் கட்டுப்படுவது, சமூகச் சேவை புரிவது மற்றும் ஆலோசனைக்குச் செல்வது அல்லது உங்களின் மறுவாழ்வுக்கு இன்றியமையாததென கருதப்படும் எந்தவொரு பயிற்சிக்கும் செல்வது, போன்றவற்றை நீங்கள் அனுசரிக்க வேண்டும். நீங்கள் அவ்வாறு செய்யத் தவறினால், உங்களின் நன்னடத்தைக் கண்காணிப்பு உத்தரவு இரத்து செய்யப்பட்டு, அதற்குப் பதிலாக ஓர் அபராதமோ, அல்லது சிறைத் தண்டனையோ விதிக்கப்படலாம். நீங்கள் 21 வயதிற்கும் குறைந்தவராக இருந்தால், நன்னடத்தைக் கண்காணிப்பு உத்தரவை மீறியதற்குத் தண்டனையாக, இளையர் சீர்த்திருத்தப் பயிற்சி விதிக்கப்படலாம். நிபந்தனைகளோடு கூடிய நன்னடத்தைக் கண்காணிப்பு உத்தரவை நீங்கள் வெற்றிகரமாக முடித்த பிறகு, நீங்கள் புரிந்த இந்தக் குற்ற செயல் உங்களின் முந்தைய குற்றத்தீர்ப்பாகக் கருதப்படாது.

நன்னடத்தைக் கண்காணிப்பு உத்தரவைப் பிறப்பிக்கும் முடிவை எடுப்பதற்கு முன்பு, குற்றச்செயலின் தன்மை மற்றும் கடுமை, குற்றவாளியின் குணயியல்பு, மற்றும் நன்னடத்தைக் கண்காணிப்பு அதிகாரியால் தயாரிக்கப்பட்ட ஓர் அறிக்கை ஆகியவற்றை நீதிமன்றம் பரிசீலிக்கும். நன்னடத்தைக் கண்காணிப்பு வழக்கமாக 21 வயதிற்கும் குறைந்த குற்றவாளிகளுக்கு உத்தரவிடப்படும். ஆனால், உரிய வழக்குகளில் 21 வயதிற்கும் மேற்பட்ட குற்றவாளிகளும் நன்னடத்தைக் கண்காணிப்பில் வைக்கப்படும்படி உத்தரவிடப்படலாம்.

***உங்களின் நன்னடத்தைக் கண்காணிப்பின் நிபந்தனைகளுக்கு நீங்கள் உடன்படவில்லை என்றால், நன்னடத்தைக் கண்காணிப்பு இரத்து செய்யப்படலாம் மற்றும் ஓர் அபராதம் அல்லது சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.***

### *(g) இளையர் சீர்த்திருத்தப் பயிற்சி*

16 வயதிற்கு மேற்பட்ட, ஆனால், 21 வயதிற்கும் குறைந்த குற்றவாளிகளுக்கு இளையர் சீர்த்திருத்தப் பயிற்சி விதிக்கப்படலாம். நன்னடத்தைக் கண்காணிப்போடு ஒப்பிடும்போது, ஒரு குற்றவாளியை முறைபடுத்தப்பட்ட சூழலில் தடுத்து வைக்கும் இந்த இளையர் சீர்த்திருத்தப் பயிற்சி மேலும் கடுமையான ஒரு தண்டனையாகும். எனினும், மறுவாழ்வு முயற்சிகளின் மீதான முக்கியத்துவம் தொடரும். இதன் தொடர்பாகக் குற்றவாளியின் குற்றம் புரியும் நடத்தையைக் கையாள உதவும் நடவடிக்கைகள் அல்லது ஆலோசனைகளுக்கு அவர் அனுப்பப்படுவார். குற்றவாளியை ஆகக் குறைவாக 6 அல்லது 12 மாதங்களுக்குக் காவலில் தடுத்து வைப்பதற்கான விருப்புரிமை நீதிமன்றத்திற்கு உண்டு. இந்த விருப்புரிமை பெரும்பாலும் மறுவாழ்வுக்கான குற்றவாளியின் தனிப்பட்ட தேவை மற்றும் அவர் மீண்டும் குற்றம் புரிவதைத் தடுப்பதன் அவசியம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பயன்படுத்தப்படும்.

எந்தவொரு சீர்த்திருத்தப் பயிற்சி தீர்ப்பையும் விதிப்பதற்கு முன், குற்றவாளியின் உடல் மற்றும் மனநிலையையும், அவர் சீர்த்திருத்தப் பயிற்சி தண்டனைக்கு ஏற்றவரா மற்றும் அவருக்குப் பரிந்துரைக்கப்படும் மறுவாழ்வு திட்டத்தின் தன்மை போன்றவற்றை அடிக்கோடிட்டுக்காட்டும் சிறைச்சாலையால் தயாரிக்கப்படும் ஓர் அறிக்கைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டு அதைக் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். தீர்ப்பு வழங்குவதற்கு முன், நீதிமன்றம், ஒரு சீர்த்திருத்தப் பயிற்சி தகுதி அறிக்கைக்கு உத்தரவிட்டால், அதன் நகல் ஒன்று உங்களிடம் வழங்கப்படும். நீதிமன்றம் உத்தரவிடும் ஆகக் குறைவான 6 அல்லது 12 மாதக் கால தடுப்புக் காவல், சட்டத்திற்கிணங்க ஆகக் கூடுதலாக 54 மாதங்கள் வரை நீட்டிக்கப்படலாம் என்று கவனத்தில் கொள்ளவும். மேலும் தகவல் பெற, குற்றவியல் நடைமுறைச் சட்டம் (அத்தியாயம் 68), பிரிவு 305 மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் (இளையர் சீர்த்திருத்தப் பயிற்சி) விதிகள் 2018-யையும் நீங்கள் காணலாம்.

### *(h) சமூகம் சார்ந்த தண்டனைகள்*

சமூகம் சார்ந்த தண்டனைகளைப் பற்றிய விளக்கம் அடுத்த பகுதியில் இடம்பெறும்.

## (B) சமூக நீதிமன்றங்கள் மற்றும் சமூகம் சார்ந்த தண்டனைகள்

### *(a) சமூகம் சார்ந்த தண்டனைகள் என்றால் என்ன?*

தண்டனை விதிப்பதில் கூடுதல் நீக்குப்போக்கை வழங்குவதற்குச் சமூகம் சார்ந்த தண்டனைகள் **(CBS)** 2010-ல் அறிமுகப்படுத்தப்பட்டன. சிறு குற்றங்களைக் கையாள்வதில், நீதிமன்றங்களுக்குத் தரவாரியாகப்

பிரிக்கப்பட்ட அதிக தண்டனை விதிப்புத் தெரிவுகள் வழங்கப்படுகின்றன. உகந்த வழக்குகளில், சிறை அல்லது அபராதம் போன்ற தண்டனைகளுக்குப் பதிலாக **CBS**-யை வழங்குவதைப் பற்றி நீதிமன்றம் பரிசீலிக்கும். ஒரு குற்றவாளி எந்தச் சூழ்நிலையில் **CBS**-க்குத் தகுதி பெறுவார் என்பதைக் குற்றவியல் நடைமுறைச் சட்டம் (அத்தியாயம் 68) பிரிவு 337, விளக்குகிறது. ஒரு குற்றவாளியின் முந்தைய குற்றத்தீர்ப்பு பதிவுடன் அவர் புரிந்த குற்றத்தின் தன்மையையும் பொறுத்து **CBS**-க்கான தகுதி தீர்மானிக்கப்படும்.

***CBS வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுவிட்டால், குற்றவாளிக்கு எதிராக குற்றத்தீர்ப்பு எதுவும் பதிவு செய்யப்படவில்லையென கருதப்படும்.***

### *(b) வழங்கப்படக்கூடிய CBS உத்தரவுகள் யாவை?*

**CBS-ல் இவை உள்ளடங்கும்:**

- **(i)** கட்டாயச் சிகிச்சை உத்தரவு **(MTO)**
- **(ii)** பகல் வேளை நேர் வருகை உத்தரவு **(DRO)**
- **(iii)** சமூகப் பணி உத்தரவு **(CWO)**
- **(iv)** சமூகச் சேவை உத்தரவு **(CSO)**
- **(v)** குறுகிய காலத் தடுப்புக் காவல் உத்தரவு **(SDO)**

(i) கட்டாயச் சிகிச்சை உத்தரவு

ஒரு கட்டாயச் சிகிச்சை உத்தரவின் கீழ் **(MTO)**, சிகிச்சையால் பலன்பெறக் கூடிய குறிப்பிட்ட மனநல பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு குற்றவாளி, 36 மாதங்களுக்கு மேற்போகாத ஒரு காலக்கட்டத்திற்கு மனநல சிகிச்சைக்குச் செல்லும்படி உத்தரவிடப்படுவார். ஒரு **MTO**-வை உத்தரவிட முடிவு செய்யும் முன்பு, மனநல மருத்துவ நிலையத்தின் **(IMH)** நியமிக்கப்பட்ட ஒரு உளநோய் மருத்துவரால் சமர்ப்பிக்கப்படவேண்டிய அறிக்கை ஒன்றுக்கு நீதிமன்றம் உத்தரவிடும். பிரிவு 337(1)-யைத் தவிர்த்து, **MTO**-விற்கு நீங்கள் பரிசீலிக்கப்படுவீர்களா என்பதைக் கணிக்க, குற்றவியல் நடைமுறைச் சட்டம் (அத்தியாயம் 68) பிரிவு 337(2)-ன் மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் (கட்டாயச் சிகிச்சை உத்தரவுகளுக்கான நிர்ணயிக்கப்பட்ட குற்றங்கள்) விதிமுறைகள் 2018-யையும் நீங்கள் காண விரும்பலாம்.

ஒரு **MTO** தகுதி அறிக்கைக்கு உத்தரவிடப் போவதாக நீதிமன்றம் உங்களிடம் தெரிவித்தால், நீங்கள், உங்களின் சொந்த மனநல மருத்துவரை நியமித்து ஓர் அறிக்கையைத் தயாரிக்க சொல்லும் தேர்வுரிமை உங்களுக்கு உண்டு. உங்களின் சொந்த மனநல மருத்துவர் தயாரித்த அறிக்கையை நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட மனநல மருத்துவரிடம் சமர்ப்பிக்கலாம். அவர் அதைக் கருத்தில் எடுத்துக்கொள்வார். ஆயினும், நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட மனநல மருத்துவரின் அறிக்கையில் கண்டறிந்தவைகளே இறுதியானதும் முடிவானதுமெனக் கருதப்படும். அதன் நகல் ஒன்று உங்களிடம் வழங்கப்படும். நீங்கள் அனுபவிக்கும் மனநலப் பிரச்சினைக்குச் சிகிச்சை எளிதில் பயனளிக்கலாம் என்றும், நீங்கள் சிகிச்சைக்கு ஏற்றவர் என்றும், மற்றும் அந்தக் குற்றச்செயலைப் புரிவதற்குப் பங்களித்த காரணிகளில் உங்களின் மனநலப் பிரச்சினையும் ஒன்று என்றும் நியமிக்கப்பட்ட மனநல மருத்துவர் கருத்து தெரிவித்தாலேயன்றி ஒரு **MTO** பிறப்பிக்கப்பட முடியாது.

ஒரு **MTO**-வைப் பிறப்பிப்பதற்கு முன்பு, அவ்வுத்தரவின் நோக்கம் மற்றும் தாக்கம், குறிப்பாக அந்த உத்தரவின் கீழ், உங்களின் கட்டாயப் பொறுப்புகள் ஆகியவற்றைக் குறித்தும் நீதிமன்றம் உங்களிடம் விளக்கும். விதிக்கப்பட்ட கட்டாயப் பொறுப்புகள் மற்றும் நிபந்தனைகள் எவற்றுக்கேனும் கட்டுப்படத் தவறினால் ஏற்படும் விளைவுகளும் நீதிமன்றத்தால் உங்களுக்கு விளக்கப்படும். மேலும் தகவல் பெற நீங்கள் குற்றவியல் நடைமுறைச் சட்டம் (அத்தியாயம் 68) பிரிவு 339-யைக் காணலாம்.

(ii) பகல் வேளை நேர் வருகை உத்தரவு

ஒரு பகல் வேளை நேர் வருகை உத்தரவு **(DRO)** சிங்கப்பூர் சிறைச்சாலை சேவையால் நிர்வகிக்கப்படுகிறது. இந்த உத்தரவின்படி ஒரு குற்றவாளி கண்காணிக்கப்படவும், ஆலோசனை பெறவும், மறுவாழ்வு திட்டங்களில் உட்படுத்தப்படவும், ஒரு பகல் வேளை நிலையத்திற்கு நேர் வருகைபுரிய வேண்டும். ஒரு பகல் வேளை நேர் வருகை உத்தரவைப் பிறப்பிப்பதைப்பற்றி முடிவெடுப்பதில், குற்றத்தின் தன்மை மற்றும் உங்களின் குணயியல்பு ஆகியவற்றை நீதிபதி கருத்தில் எடுத்துக்கொள்வார்.

உங்களுக்கு ஆலோசனை வழங்கி மீண்டும் ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வரக்கூடிய சாத்தியத்தைக் குறித்து நீதிபதி ஒரு பகல் வேளை நேர் வருகை அதிகாரியிடமிருந்து ஓர் அறிக்கைக்கு உத்தரவிடுவார். இந்த உத்தரவு 3 முதல் 12 மாதங்கள் வரை நீடிக்கலாம் மற்றும் ஒரு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளும் (பொருத்தமானவை என்று நீதிமன்றம் கருதுபவை) இந்த உத்தரவில் சேர்க்கப்படலாம். **DRO**-ன் நோக்கம் மற்றும் அதன் தாக்கம்

மற்றும் அதை மீறுவதால் ஏற்படும் விளைவுகள் ஆகியவற்றைப் பற்றியும் நீதிபதி விளக்கமளிப்பார். மேலும் தகவல் பெற, குற்றவியல் நடைமுறைச் சட்டம் (அத்தியாயம் 68) பிரிவு 341-யைக் காணவும்.

(iii) சமூகப் பணி உத்தரவு
ஒரு சமூகப் பணி உத்தரவு **(CWO)** பிறப்பிக்கப்பட்டால், புரியப்பட்ட குற்றச்செயலுடன் தொடர்புடைய சமூகப் பணியைக் குற்றவாளி செய்ய வேண்டும். சம்பளமில்லா இப்பணி, ஒரு சமூகப் பணி அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் செய்யப்படும். ஆயினும், **CWO**-வோடு இணைக்கப்படும் குற்றங்கள் நாடாளுமன்றத்தால் இன்னும் வகுத்துரைக்கப்படாத காரணத்தால் இத்தகைய உத்தரவு இப்பொழுது கிடையாது.

(iv) சமூகச் சேவை உத்தரவு
ஒரு சமூகச் சேவை உத்தரவு **(CSO)** என்பது குற்றவாளிகள் திருந்துவதற்காகவும் அதிகாரம் பெற்ற ஓர் அதிகாரியின் மேற்பார்வையில் சம்பளமில்லாச் சமூகச் சேவை செய்து சமூகத்திற்கு அவர்கள் ஈடுசெய்யவும் விதிக்கப்படலாம்.

இந்த உத்தரவை உங்களுக்கு எதிராகப் பிறப்பிப்பதைப்பற்றி முடிவு செய்யும்போது, உங்களின் சீர்த்திருத்தத்திற்கு இது உதவுமா என்பதை நீதிமன்றம் தீர்மானிக்கும். உங்களின் மனம் மற்றும் உடல் நிலையின் அடிப்படையில் சமூகச் சேவை செய்வதற்கு நீங்கள் ஏற்றவர் என்று நீதிமன்றம் மனநிறைவடைய வேண்டும். ஒரு **CSO**-வைப் பிறப்பிப்பதற்கு முன்பு, நீதிமன்றம் ஓர் அறிக்கைக்கு உத்தரவிடும். வழங்கப்படும் உத்தரவில் எத்தனை மணி நேர சமூகச் சேவை நிறைவேற்றப்பட வேண்டும் என்று நீதிபதி குறிப்பிடுவார். **CSO**-ன் நோக்கம், அதன் தாக்கம் மற்றும் **CSO**-வை மீறுவதால் ஏற்படும் விளைவுகள் ஆகியவற்றையும் நீதிபதி விளக்குவார். மேலும் தகவல் பெற, குற்றவியல் நடைமுறைச் சட்டம் (அத்தியாயம் 68) பிரிவு 346-யைக் காணவும்.

(v) குறுகிய கால தடுப்புக் காவல் உத்தரவு
ஒரு குறுகிய கால தடுப்புக் காவல் உத்தரவு **(SDO)** பிறப்பிக்கப்பட்டால், அந்தக் குற்றவாளி 14 நாட்களுக்கு மேற்போகாமல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்படலாம். வழக்கின் சூழ்நிலைகள், குற்றத்தின் தன்மை மற்றும் குற்றவாளியின் குணயியல்புகள் ஆகியவற்றைப் பொறுத்து, குற்றவாளி சிறை வாழ்க்கையின் ‘குறுகிய, கடுமையான, திடுக்கிடும்’ அனுபவத்தை அடையும் வகையில் நீதிமன்றம் ஒரு **SDO**-வைப் விதிக்கலாம். மேலும் தகவல் பெற, குற்றவியல் நடைமுறைச் சட்டம் (அத்தியாயம் 68) பிரிவு 348-யைக் காணவும்.

***உங்களின் CBS நிபந்தனைகளைக் கடைப்பிடிப்பது முக்கியமானதாகும். இல்லையெனில், நீதிமன்றம் அதனை இரத்து செய்து அக்குற்றத்திற்கு (குற்றங்களுக்கு) வழக்கமாக விதிக்கப்படும் தண்டனையை விதிக்கும்.***

### *(c) என் வழக்கு ஏன் சமூக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது?*


**CBS**-க்குப் பொருத்தமான வழக்குகள், பொதுவாக, சமூக நீதிமன்றத்தின் நிர்வாகத்திற்கு அனுப்பப்படுகின்றன. ஒரு முழுமையான பிரதிபலனைப் பெறும் நோக்கத்தில், குற்றவியல் நீதிமுறை மற்றும் சமூக வளங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் ஒரு பிரச்சினை-தீர்க்கும் அணுகுமுறையைச் சமூக நீதிமன்றம் கையாளுகிறது. குற்றம் புரிய தயக்கமுறச் செய்வது மற்றும் செய்த குற்றத்திற்குத் தகுந்த தண்டனை வழங்குவது என்ற கொள்கைகளோடு சேர்த்து, மறுவாழ்வு மற்றும் குற்றத் தடுப்பு ஆகிய இரட்டை கொள்கைகளுக்கும் சமூக நீதிமன்றம் கடப்பாடுக் கொண்டுள்ளது.

பின்வரும் ஏதேனும் தேர்வு முறைகளோடு பொருந்தும் வழக்குகள் சமூக நீதிமன்றத்திற்கு அனுப்பப்படலாம்:

- **(i)** 16 முதல் 18 வயது வரையிலான குற்றவாளிகள் சம்மந்தப்பட்ட வழக்குகள்
- **(ii)** திருட்டு, வன்முறை, பாலியல், சூதாட்டம் அல்லது போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றங்களுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட 21 வயதிற்கும் குறைவான குற்றவாளிகள் சம்பந்தப்பட்ட வழக்குகள்
- **(iii)** மனநோயால் பாதிக்கப்பட்ட குற்றவாளிகள் சம்பந்தப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட வழக்குகள்
- **(iv)** தற்கொலை முயற்சி வழக்குகள்
- **(v)** குடும்ப வன்முறை வழக்குகள்
- **(vi)** விலங்கு வதை மற்றும் துன்புறுத்தல் வழக்குகள்
- **(vii)** இன உறவுகளைப் பாதிக்கும் வழக்குகள்
- **(viii)** 65 வயது மற்றும் அதற்கும் மேற்பட்ட வயதுடைய குற்றஞ்சாட்டப்பட்டோர் சம்பந்தப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட வழக்குகள்
- **(ix)** போதைப் பொருளுக்கு அடிமையான நாள்பட்ட பிரச்சினைகள் கொண்ட குற்றஞ்சாட்டப்பட்டோர் சம்பந்தப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட வழக்குகள்
- **(x)** கடை திருட்டு வழக்குகள்

குற்றவியல் நடைமுறைச் சட்டம் (அத்தியாயம் 68) பிரிவு 337(1)-ல் வரையறுக்கப்பட்ட சூழல்களுக்குள் உங்களின் வழக்கு அடங்குமானால், **CBS** உங்களுக்குப் பொருந்தாமல் இருக்கலாம். உங்களின் வழக்கு **CBS**-க்குத் தகுதி பெறுமா என்று உங்களுக்குச் சந்தேகமாக இருந்தால், நீங்கள் நீதிபதியிடம் கேட்டறியலாம்.

### (C) தண்டனை விதிப்பு நடைமுறை



### *தண்டனை விதிப்பு செயல்முறையின் மேலோட்டம்*

நீங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் அல்லது ஒரு வழக்கு விசாரணையின் முடிவில் குற்றவாளியெனக் கண்டறியப்பட்டதால், குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்ட பிறகு, உங்களுக்குத் தண்டனை வழங்கப்படும். இந்தக் கட்டத்தில், உங்களுக்கு என்ன தண்டனை வழங்கப்படவேண்டும் என்பதைக் குறித்து ஒரு நீதிபதி முடிவு செய்வார். நீங்கள் சுலபமாகப் புரிந்துகொள்வதற்காக தண்டனை விதிப்பு நடைமுறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. வழக்கு விசாரணையின்றி குற்றத்தை ஒப்புக்கொள்ள நீங்கள் தெரிவு செய்திருந்தால், படிகள் 1 முதல் 3 வரை மட்டுமே பொருந்தும். ஒரு வழக்கு விசாரணைக்குப் பிறகு உங்களுக்குத் தண்டனை வழங்கப்படுமாயின் நீங்கள் நேரடியாகப் படி 4-க்குச் செல்லலாம்.

#### *படி 1: குற்ற ஒப்புதலை பெறுதல் (PG வழக்குகளுக்கு மட்டும்)*

உங்களின் குற்றச்சாட்டு(கள்) நீதிமன்ற மொழிபெயர்ப்பாளரால் உங்களிடம் வாசிக்கப்படும். அதன் பிறகு, குற்றச்சாட்டை ஒப்புக்கொள்ள விரும்புகிறீர்களா அல்லது வழக்கு விசாரணை கோருகிறீர்களா என்று குறிப்பிடுமாறு உங்களிடம் கேட்கப்படும். உங்களுக்குக் குற்றச்சாட்டை ஒப்புக்கொள்ளும் எண்ணம் இருந்தால், நீங்கள் நீதிமன்றத்திடம் தெரிவிக்கலாம்.

#### *படி 2: உண்மை விவர அறிக்கை (PG வழக்குகளுக்கு மட்டும்)*

குற்றத்தை ஒப்புக்கொள்ளும் உங்களின் எண்ணத்தை நீங்கள் குறிப்பிட்டவுடன், உண்மை விவர அறிக்கை உங்களிடம் வாசிக்கப்படும். உண்மை விவர அறிக்கை உங்களின் குற்றத்துடன் தொடர்புடைய உண்மை விவரங்களைக் கொண்டிருக்கும். உண்மை விவரங்களைக் கவனமாகக் கேட்கவும். உண்மை விவரங்கள் உங்களிடம் வாசிக்கப்பட்ட பிறகு, நீங்கள் அந்த உண்மை விவரங்களை ஒப்புக்கொள்கிறீர்களா என்று குறிப்பிடுமாறு உங்களிடம் கேட்கப்படும். உண்மை விவரங்களில் எதையேனும் நீங்கள் மறுத்தால், அதை நீதிமன்றத்திடம் தெரிவிக்க வேண்டும் மற்றும் உண்மை விவர அறிக்கையின் எந்தப் பகுதியை நீங்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்று அரசு தரப்பு வழக்கறிஞரிடம் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு நிகழ்ந்தால், அரசு தரப்பு வழக்கறிஞரும் நீங்களும் அந்தக் கருத்து வேறுபாட்டிற்குத் தீர்வு காண அனுமதிக்கும் வகையில் நீதிமன்றம் வழக்கைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம்.

நீங்கள் உண்மை விவர அறிக்கையை முழுமையாக ஏற்றுக் கொண்டால் மட்டுமே நீதிமன்றம் உங்களைக் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கும். குற்றச்செயலின் கூறுகளை ஆதரிக்கும் முக்கியமான உண்மை விவரங்கள் எவற்றையேனும் குறித்து இணக்கம் காண முடியாவிட்டால், நீதிமன்றம் உங்களின் குற்ற

ஒப்புதலை ஏற்றுக்கொள்ளாது மற்றும் அந்த விவகாரம் விசாரணைக்குச் செல்ல வேண்டியிருக்கும்.

***நீங்கள் உண்மை விவரங்களின் எந்தப் பகுதியையாவது ஏற்க மறுத்தால், நீங்கள் நீதிமன்றத்திடம் தெரிவிக்க வேண்டும். ஏதேனும் முக்கிய உண்மை விவரத்தைக் குறித்து இணக்கம் காணமுடியாவிட்டால், அந்த வழக்கு, விசாரணைக்கு அனுப்பி வைக்கப்படும்.***

### படி 3: *குற்றவாளியெனத் தீர்ப்பளித்தல் (PG வழக்குகளுக்கு மட்டும்)*

நீங்கள் உண்மை விவர அறிக்கையை ஏற்றுக்கொண்டால், ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை விவரங்களின் அடிப்படையில், குற்றத்தின் அனைத்து கூறுகளும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டது என்று நீதிபதி மனநிறைவடைந்தால் உங்களைக் குற்றவாளி என்று தீர்ப்பளிப்பார்.

### படி 4: *கருத்தில் எடுத்துக்கொள்ளப்படும் குற்றச்சாட்டுகள் (TIC குற்றச்சாட்டுகள்)*

நீங்கள் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்ட பிறகு, தண்டனை விதிப்பிற்காக நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று அவர்கள் விரும்பும் வேறு குற்றச்சாட்டுகள் உள்ளனவா என்பதை அரசு தரப்பு நீதிமன்றத்திடம் தெரிவிக்கும். இவை "**TIC** குற்றச்சாட்டுகள்" என அழைக்கப்படும். உதாரணத்திற்குச், செலி 5 திருட்டு குற்றச்சாட்டுகளை எதிர்நோக்குகிறாள். செலி தான் குற்றச்சாட்டுகளை ஒப்புக் கொள்ளப்போவதாகக் கோடிகாட்டியபோது, அரசு தரப்பு 2 குற்றச்சாட்டுகளுக்கு மட்டுமே வழக்குத் தொடர்ந்து மீதமுள்ள குற்றச்சாட்டுகளைத் தண்டனை விதிப்பு நோக்கத்திற்காகக் கருத்தில் எடுத்துக்கொள்ள முடிவெடுத்தது. இதற்குப் பொருள் என்னவென்றால், எல்லா 5 குற்றச்சாட்டுகளுக்குப் பதிலாக 2 குற்றச்சாட்டுகளுக்கு மட்டுமே செலி குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனை வழங்கப்படுவாள் என்பதாகும். எனினும், வழங்கப்படவேண்டிய ஏற்ற தண்டனையைக் குறித்த தனது வாதத்தை முன்வைக்கும்போது, தண்டனை வழங்குவதற்காகக் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படும் மற்ற 3 குற்றச்சாட்டுகள் செலிக்கு உள்ளன என்பதை நீதிமன்றம் கவனிக்க வேண்டும் என்று அரசு தரப்பு கேட்டுக்கொள்ளும்.

**TIC** குற்றச்சாட்டுகள் இருந்தால், அக்குற்றச்சாட்டுகள் மொழிபெயர்ப்பாளரால் உங்களுக்கு விளக்கப்படும். **TIC** குற்றச்சாட்டுகள் உங்களுக்கு விளக்கப்பட்ட பிறகு, இக்குற்றச்சாட்டுகளை நீங்கள் ஒப்புக்கொண்டு தண்டனை விதிப்பு நோக்கத்திற்காக இக்குற்றச்சாட்டுகளைக் கருத்தில் எடுத்துக்கொள்வதற்கு நீங்கள் சம்மதிக்கிறீர்களா என்பதைக் குறிப்பிடும்படி மொழிபெயர்ப்பாளர் உங்களிடம் கேட்பார். நீங்கள் அவ்வாறு செய்ய மறுத்தால், நீதிபதியால்

இக்குற்றச்சாட்டுகளைக் கருத்தில் எடுத்துக்கொள்ள முடியாது. அப்படியென்றால், எஞ்சிய இக்குற்றச்சாட்டுகளின் தொடர்பாக உங்களுக்கெதிராக அரசு தரப்பு வழக்கு விசாரணையைத் தொடர முடிவு செய்யலாம் என்றும் பொருள்படும்.

பொதுவாகக் கூறினால், இக்குற்றச்சாட்டுகளில் சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்செயல்களை நீங்கள் மறுக்கவில்லை என்றால், அரசு தரப்பு, இக்குற்றச்சாட்டுகளை உங்களுக்கு எதிராக தனியாக எடுத்து நடத்தும் அபாயத்தை எதிர்நோக்குவதைவிட **TIC** குற்றச்சாட்டுகளுக்கு நீங்கள் சம்மதம் தெரிவிப்பதே உங்களுக்குச் சாதகமாக அமையும். நீங்கள் பெறப் போகும் ஒட்டுமொத்த தண்டனையை ஒரு **TIC** குற்றச்சாட்டு அதிகரிக்கலாம். இருப்பினும், அரசு தரப்பு உங்களுக்கெதிராக எல்லாக் குற்றச்சாட்டுகளையும் தொடர்ந்து நடத்தி, அதனால் உங்களுக்குக் கிடைக்கக்கூடிய தண்டனையை விட குறைவாக அமைய வாய்ப்புண்டு.

### *படி 5: முந்தைய / பழைய குற்றத்தீர்ப்புகள்*

அடுத்த படியாக, அரசு தரப்பு உங்களின் முந்தைய குற்றவியல் பதிவை (முந்தைய / பழைய குற்றத்தீர்ப்புகளின் பதிவுகள் அல்லது முந்தைய / பழைய குற்றத்தீர்ப்புகள்) நீதிமன்றத்திடம் தெரிவிக்கும். உங்களின் முந்தைய / பழைய குற்றத்தீர்ப்புகளின் பதிவுகள் உங்களிடம் காண்பிக்கப்பட்டு உங்களுக்கு விளக்கப்படும். அது சரியாக உள்ளதா என்று உறுதிபடுத்தும்படி உங்களிடம் கேட்கப்படும். நீங்கள் அதைச் சரியென்று ஏற்றுக்கொண்டால், நீங்கள் விசாரணையின் அடுத்த கட்டத்திற்குச் செல்வீர்கள். நீங்கள் அதைச் சரி என்று ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், அரசு தரப்பு குற்றவியல் பதிவேட்டின் உள்ளடக்கத்தை ஒரு நியூட்டன் விசாரணையின் மூலம் நிரூபிக்க வேண்டும். நியூட்டன் விசாரணை பற்றிய மேலும் விவரங்களுக்குக், கீழ் காணப்படும் பிரிவு **D**-யைக் காணவும்.

### *படி 6: தண்டணை தொடர்பாக அரசு தரப்பின் முன்வைப்புரைகள்*

நீதிமன்றம் விதிக்கக்கூடிய தண்டனை குறித்து அரசு தரப்பு தனது பரிந்துரைகளை முன் வைக்கும். அவர்கள் முன்னோடி தீர்ப்புகளை, அதாவது இது போன்ற வழக்குகளில் அரசு நீதிமன்றங்களால் அல்லது உயர் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தீர்ப்புகளை மேற்கோள் காட்டலாம். இது 'சப்மிஷ்ஷன்ஸ்' என்று அழைக்கப்படும். இதை நீங்கள் கவனமாகக் கேட்க வேண்டும். மேற்கோள் காட்டப்பட்ட வழக்குகள் உங்களின் வழக்கிற்குப் பயன்படுத்தப்படுவதில் உங்களுக்கு உடன்பாடு இல்லையென்றால், நீங்கள் குறிப்புகள் எடுத்துக்கொண்டு, தண்டனை தணிப்பு வாதத்தை முன்வைக்க உங்களின் முறை வரும்போது நீதிமன்றத்திடம் நீங்கள் தெரிவிக்கலாம். நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையிடையே குறுக்கிடாதீர்கள்.

### *படி 7: தண்டனை தணிப்பு வாதம்*

அரசு தரப்பு தனது முன்வைப்புரையை முடித்த பிறகு, உங்களின் தண்டனை தணிப்பு வாதத்தை நீதிபதியிடம் முன்வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவீர்கள். வழங்கப்படவுள்ள தண்டனையை நீதிபதி கனிவு நோக்குடன் அணுக, உங்களின் வழக்கின் கடுமையை மட்டுப்படுத்த உதவக்கூடிய தகுந்த விவரங்களை நீங்கள் நீதிபதியிடம் முன்வைப்பதே தண்டனை தணிப்பு வாதத்தின் நோக்கமாகும். அரசு தரப்பு பரிந்துரைத்த தண்டனைகள் அல்லது முன்னோடி தீர்ப்புகள் ஆகியவற்றில் உங்களுக்கு உடன்பாடில்லை என்றால், அதனை நீதிமன்றத்திடம் தெரிவிப்பதற்கும் இது உங்களுக்கு ஒரு வாய்ப்பாகும்.

***தண்டனையைக் குறித்த அரசு தரப்பின் முன்வைப்புரைக்கு, அதாவது உங்களின் வழக்குடன் ஒப்பிட்டு மதிப்பிட அவர்கள் சார்ந்திருக்கும் வழக்கு போன்றவற்றிற்கு நீங்கள் உடன்படவில்லை என்றால், உங்களின் தண்டனை தணிப்பு வாதத்தின் ஒரு பகுதியாக நீங்கள் இதை நியாயப்படுத்த வேண்டும்.***

கீழ்க்காணப்படும் அட்டவணையில் பொதுவாகத் தண்டனை தணிப்பு வாதங்களில் காணப்படும் காரணிகள் அடங்கியுள்ளன. ஆயினும், கீழுள்ள அட்டவணையில் இடம்பெற்றுள்ள தண்டனை தணிப்புக்கான காரணிகள் முழுமையானவை அல்ல. உங்களின் வழக்கிற்கான தகுந்த தண்டனை தணிப்பு காரணிகளைக் குறித்து ஆலோசனை வழங்க ஒரு வழக்கறிஞரே சிறந்தவர்.

அட்டவணை முழுவதையும் கவனமாகப் பார்த்து, அவற்றில் எந்தக் காரணிகள் உங்கள் வழக்கின் சூழ்நிலைக்குப் பொருந்தும் என்பதைப் பரிசீலனை செய்யுங்கள். விசாரணைக்கு முன்னதாகவே உங்களின் தண்டனை தணிப்பு வாதத்தை நீங்கள் தயார் செய்ய வேண்டும். தண்டனை தணிப்பு வாதம் நீதிபதியிடம் வாய்மொழியாகவோ அல்லது எழுத்து வடிவத்திலோ முன்வைக்கப்படலாம். ஆயினும், தண்டனை தணிப்பு வாதத்தை விசாரணைக்கு முன்பே தயாரித்து நீதிபதியிடம் சமர்ப்பிப்பதே சிறந்தது. இது, உங்களின் தண்டனை தணிப்பு வாதத்தைப் பரிசீலனை செய்ய நீதிபதிக்குப் போதிய அவகாசத்தை வழங்கும்.

| தண்டனை தணிப்புக்கான காரணிகள் | விளக்கம் |
|---|---|
| **வயது** | ▸ நீங்கள் 21 வயதிற்கும் குறைந்தவரா? இளம் குற்றவாளிகள் இன்னும் வளர்ச்சிக் காணக்கூடிய பருவத்தில் இருப்பதாலும், மறு வாழ்வு பெறும் இயல்புடையவர்கள் என்பதாலும், பொதுவாக, நீதிமன்றங்கள் அவர்களிடத்தில் பரிவு காட்டும். |
| **எதிர்காலத் திட்டங்கள்** | ▸ எதிர்காலத்தில் குற்றச்செயல்களிலிருந்து விலகி இருக்க வேண்டுமென்ற எண்ணம்.<br>▸ தண்டனையை நிறைவேற்றிய பிறகு குற்றச்செயல்களில் இருந்து நீங்கள் விலகி இருப்பதை உறுதிபடுத்த என்ன செய்யத் திட்டமிட்டுள்ளீர்கள்? |
| **மனநோய் பிரச்சினைகள்** | ▸ குற்றச்செயலைப் புரிய நீங்கள் அனுபவிக்கும் ஏதேனும் மனநலப் பிரச்சினை பங்களித்தது என்று காண்பிப்பதற்கு உங்களிடம் ஏதேனும் மருத்துவ ஆவணங்கள் உள்ளனவா? |
| **முந்தைய / பழைய குற்றத்தீர்ப்புகள்** | ▸ நீங்கள் முந்தைய குற்றத்தீர்ப்பு எதுவும் இல்லாதவரா?<br>▸ இது தான் உங்களின் முதல் குற்றமா? |
| **ஒத்துழைத்த அளவு** | ▸ நீங்கள் செய்ததற்கு வருந்துவதால் முன்பாகவே குற்றத்தை ஒப்புக்கொண்டீர்களா?<br>▸ காவல் துறையினரோடு ஒத்துழைத்தீர்களா? *எ.டு. உடன் குற்றஞ்சாட்டப்பட்டவரைச் சார்ந்த புலன் விசாரணையில் அவர்களுக்கு உதவுவது.<br>▸ நீங்கள் காவல் துறையிடம் சரணடைந்தீர்களா? |
| **இழப்பீடு** | ▸ பாதிக்கப்பட்டவருக்குச் செய்த தீங்கைக் குறைக்க முயன்றீர்களா?<br>▸ நீங்கள் பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு கொடுத்தீர்களா? |
| **குற்றச்செயல்** | ▸ அந்தக் குற்றச்செயலில் இருந்து நீங்கள் பலன் அடைந்தீர்களா?<br>▸ விளைவிக்கப்பட்ட தீங்கு கடுமையானதா?<br>▸ குற்றச்செயலில் உங்களின் பங்கு எந்த அளவுக்கிருந்தது?<br>▸ நீங்கள் ஏன் இந்தக் குற்றச்செயலைப் புரிந்தீர்கள்?<br>▸ நீங்கள் அந்தக் குற்றச்செயலைச் செய்யும்படி நெருக்கப்பட்டீர்களா? அது என்ன நெருக்குதல் மற்றும், அது எங்கிருந்து வந்தது?<br>▸ வேறொருவரிடத்திலிருந்து கட்டளைகளைப் பெற்றுக் கொண்டிருந்தீர்களா?<br>▸ முன்கூட்டியே குற்றச்செயலைத் திட்டமிட்டீர்களா? |
| **தூண்டுதல்** | ▸ குற்றத்தைச் செய்ய நீங்கள் தூண்டப்பட்டீர்களா? ஆம் என்றால், எவ்வாறு? |

உங்களின் எழுத்து வடிவ தண்டனை தணிப்பு வாதத்தை நீதிபதியிடம் நீங்கள் சமர்ப்பிக்கிறீர்கள் என்றால் அரசு தரப்புக்கும் நீங்கள் ஒரு நகலைத் தயாரிக்க வேண்டும் என்பதைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். இரு நகல்களும் ஒரே நேரத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

குற்ற ஒப்புதலைத் தொடர்ந்து, நீங்கள் முன்வைக்கும் உங்களின் தண்டனை தணிப்பு வாதத்தில் ஏதேனும் உறுதிப்படுத்தப்படாத கூற்றுகளை எழுப்பி, அவை உண்மையென நிரூபணமானால், குற்றச்சாட்டு(களின்) ஏதேனும் ஒரு

கூறு உங்களுக்கு எதிராக நிரூபிக்கப்படவில்லை என்று பொருள்படுவதோடு, உங்களின் குற்ற ஒப்புதலில் முரண்பாடுகளை எழுப்பியுள்ளீர்கள் என்று நீதிமன்றம் கருதும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும். குற்றச்சாட்டில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு கூறும் உங்களுக்கு எதிராக நிரூபிக்கப்பட்டுவிட்டது என்று நீதிமன்றம் மனநிறைவடைந்தால் மட்டுமே நீங்கள் குற்றம் நிரூபிக்கப்பட்டவர் என்று குற்றத்தீர்ப்பு பதிவு செய்யப்பட முடியும் என்பதே இதற்குக் காரணம். நீங்கள், உங்களின் குற்ற ஒப்புதலில் முரண்பாடுகளை எழுப்பியதால் ஏற்படும் விளைவு என்னவென்றால், நீதிமன்றம் உங்களின் வழக்கை விசாரணைக்கு அனுப்புவதற்கான உத்தரவுகளை வழங்கும். பிறகு, விசாரணைக்கான உத்தரவுகளைப் பெற நீங்கள் நீதிமன்றத்திற்குத் திரும்ப வர வேண்டும் என்று எதிர்ப்பார்க்கப்படுவீர்கள் மற்றும் அரசு தரப்பு ஒரு விசாரணைக்கு அவசியமான எல்லாச் சாட்சியங்களையும் முன்வைப்பதற்குத் தயாராக வேண்டும். மேல் சுட்டிக்காட்டியபடி, ஆரம்பக்கட்டத்திலேயே நீங்கள் தெரிவிக்கும் உங்களின் குற்ற ஒப்புதல், நீங்கள் குற்றத்தை உணர்ந்ததால் ஏற்பட்ட வருத்தத்தைக் குறிக்கிறது என்று நீதிமன்றம் மனநிறைவடைந்தால், உங்களின் ஆரம்பக்கட்ட குற்ற ஒப்புதலைத் தண்டனை விதிப்பின்போது நீதிமன்றம் உங்களுக்குச் சாதகமாக பரிசீலிக்கும்.

### *படி 8: அரசு தரப்பின் பதில்*

உங்களின் தண்டனை தணிப்பு வாதத்தை நீங்கள் சமர்ப்பித்த பிறகு, அதற்குப் பதில் அளிக்க அரசு தரப்பிற்கு ஒரு வாய்ப்பு உள்ளது.

### *படி 9: தண்டனை தீர்ப்புரைத்தல்*

நீங்களும், மற்றும் அரசு தரப்பும் சொல்வதைக் கேட்ட பிறகு, விதிக்கப்பட வேண்டிய தகுந்த தண்டனையை நீதிபதி பரிசீலிப்பார். நீதிபதியின் முடிவில் பங்களிக்கக்கூடிய பரிசீலனைகளின் உதாரணங்கள் பின்வருமாறு:

- குற்றச்செயலின் தன்மை மற்றும் தீவிரம்.
- நீங்கள் குற்றச்செயலைப் புரிந்த சூழ்நிலைகள்.
- எந்த அளவுக்குத் திட்டம் தீட்டப்பட்டது.
- விளைவிக்கப்பட்ட தீங்கின் அளவு மற்றும் தன்மை.
- உங்களின் குற்றவியல் வரலாறு.
- தனிப்பட்ட தண்டனை தணிப்புக்கான சூழ்நிலைகள்.

நீதிபதி தயாரானவுடன், அவர் தண்டனை தீர்ப்பை அறிவிப்பார். இது, தண்டனை தணிப்பு வாதத்தைக் கேட்ட பிறகு உடனடியாகவோ, அல்லது ஓர் ஒத்திவைக்கப்பட்ட விசாரணையின் போதோ இடம் பெறலாம்.

தண்டனை தீர்ப்பில் உங்களுக்கு மனநிறைவு இல்லை என்றால், தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டதிலிருந்து 14 நாள்காட்டி நாட்களுக்குள் நீங்கள் ஒரு மேல்முறையீட்டைத் தாக்கல் செய்யலாம். மேல்முறையீடு பற்றிய மேல் விவரங்களை அத்தியாயம் 7-ல் காணலாம்.

***நீதிபதியின் தீர்ப்பில் உங்களுக்கு மனநிறைவு இல்லை என்றால், குற்றத்தீர்ப்பு அல்லது தண்டனை தீர்ப்பு அல்லது இரண்டுக்கும் எதிராக மேல் முறையீடு தாக்கல் செய்வது எப்படி என்று அத்தியாயம் 7-ல் காணவும்.***

### *படி 10: **தண்டனையைத் தள்ளிப்போடுதல்/ஒத்திவைத்தல்***

உங்களுக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டால், உங்களின் தண்டனையை நீங்கள் உடனடியாக நிறைவேற்ற தொடங்க வேண்டும். எனினும், வழக்கத்திற்கு மாறான குறிப்பிட்ட சூழ்நிலைகளில், உங்களின் தண்டனையைத் துவங்குவதைத் தள்ளிப்போடுமாறு நீங்கள் நீதிமன்றத்திடம் கேட்டுக் கொள்ளலாம்.
உங்களின் தண்டனையைத் துவங்குவதைத் தள்ளிப்போட நீங்கள் விரும்பினால், தண்டனை தீர்ப்பு அறிவிக்கப்பட்ட உடனே நீங்கள் நீதிமன்றத்திடம் தெரிவிக்க வேண்டும். உங்களின் கோரிக்கை செல்லுபடியாகும் காரணங்களோடு சமர்ப்பிக்கப்பட வேண்டும். நீங்கள் பிணையில் இருந்தால், உங்களுக்குப் பிணை வழங்கியவரும் உங்களுடன் நீதிமன்றத்தில் தோன்றி உங்களின் கோரிக்கைக்குச் சம்மதம் தெரிவிக்க வேண்டும். உங்களின் கோரிக்கைக்குப் பதில் அளிக்கும்படி அரசு தரப்பிடம் கேட்டுக்கொள்ளப்படும். தண்டனையைத் துவங்குவதைத் தள்ளிப்போட நீங்கள் சமர்ப்பிக்கும் விண்ணப்பத்தை அவர்கள் எதிர்க்கலாம் அல்லது அதற்குச் சம்மதிக்கலாம். அரசு தரப்பு சம்மதம் தெரிவித்தாலும், அவர்கள் பெரும்பாலும் பிணை வழங்கப்படவேண்டும் என்றோ அல்லது நடப்பிலுள்ள பிணை தொகையை அதிகரிக்கும்படியோ விண்ணப்பிக்கலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

தண்டனையைத் துவங்குவதைத் தள்ளிப்போட நீங்கள் சமர்ப்பிக்கும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், நீதிபதி பெரும்பாலும் சில நிபந்தனைகளை விதிப்பார். அவற்றுக்கு நீங்கள் இணங்க வேண்டும். குறிப்பாக, தள்ளிப்போடப்பட்ட கால கட்டத்தின் இறுதியில் நீங்கள் நீதிமன்றத்திடம் சரணடைய வேண்டும்.

பிணை வழங்கி அல்லது நடப்பிலுள்ள பிணை தொகையை அதிகரித்து நீதிபதி உங்களின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டப்பிறகு, பிணை தொகையை உங்களால் செலுத்த முடியாவிட்டால், தண்டனையைத் துவங்குவதைத் தள்ளிப்போடும் விண்ணப்பம் வழங்கப்படாது. இச்சூழலில், உங்களின் தண்டனை உடனே தொடங்கும்.

### (D) நியூட்டன் விசாரணை

குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்ட ஒரு நபருக்கு விதிக்கப்படக் கூடிய தண்டனையைக் குறிப்பிடத்தக்க வகையில் பாதிக்க கூடிய உண்மை விவரங்களைக் குறித்து சர்ச்சை எழும்போது, தண்டனை விதிப்பு செயல்முறையின் எந்தக் கட்டத்திலும் ஒரு நியூட்டன் விசாரணை நடத்தப்படலாம். இது ஒரு 'நியூட்டன் விசாரணை' என பொதுவாக அழைக்கப்படும். இவ்வாறான ஒரு சர்ச்சையின் எடுத்துக்காட்டுகளில், குற்றச்சாட்டப்பட்டவர் குற்றச்செயலைப்(களைப்) புரியும்போது தன் குற்றப்பொறுப்பின் அளவைக் (அதாவது பழி பொறுப்பேற்பு) குறைக்கும் வகையில் ஒரு மனநல நோயால் பாதிக்கப்பட்டிருந்தாரா என்பதைக் குறித்த முரண்பாடான மருத்துவ அறிக்கைகள், குற்றஞ்சாட்டப்பட்டவர் தன் தண்டனை தணிப்பு வாதத்தில் சார்ந்திருக்கும் ஓர் உள்ளபடியான உண்மை விவரமோ அல்லது வாக்குமூலமோ அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் தன் முந்தைய / பழைய குற்றத்தீர்ப்புகளை மறுப்பது ஆகியவை அடங்கும். இவ்வாறான சூழ்நிலைகளில் நீதிமன்றம் ஒரு நியூட்டன் விசாரணையை நடத்தும்.

ஒரு நியூட்டன் விசாரணை ஒரு வழக்கு விசாரணையைப் போல நடத்தப்படுகிறது. குற்றஞ்சாட்டப்பட்டவர் மற்றும் அரசு தரப்பு இருவருமே தங்களின் முன்வைப்புரைகளை வழங்குவதற்கு முன் அவரவர் சாட்சிகளை அழைக்க வாய்ப்பளிக்கப்படும். நியூட்டன் விசாரணையில் சாட்சிகளை விசாரிப்பதற்கான நடைமுறை ஒரு வழக்கு விசாரணையில் காணப்படுவதைப் போலவே 3 கட்டங்களைக் கொண்டது. அவை (i) நேரடி விசாரணை; (ii) குறுக்கு விசாரணை; மற்றும் (iii) மறு விசாரணை. சாட்சிகளைப் விசாரிப்பதைப் பற்றி மேலும் தகவல் பெற, அத்தியாயம் 5-தைக் (வழக்கு விசாரணைகள்) காணவும்.

நியூட்டன் விசாரணையின் முடிவில், சர்ச்சைக்குரிய உண்மை விவரத்தைப் பற்றிய தனது முடிவை நீதிபதி அறிவிப்பார். முடிவு செய்யப்பட்ட பிறகு, நீதிபதி தண்டனை விதிப்பு செயல்முறையின் மற்றவற்றை மீண்டும் தொடங்குவார்.

# 07

# மேல்முறையீடு

**(A)** மேல்முறையீடு என்றால் என்ன?

**(B)** மேல்முறையீட்டு நடைமுறை

**(C)** மேல்முறையீட்டின் பொருட்டு வழங்கப்படும் பிணை

அத்தியாயம் 7

# மேல்முறையீடு

### (A) மேல்முறையீடு என்றால் என்ன?

கீழ் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் மனநிறைவுப்பெறாத ஒரு தரப்பினர், அதை மாற்றும்படி ஒரு மேல்முறையீடு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதே மேல்முறையீடு என்பதாகும். ஒரு மேல்முறையீட்டை நீங்களோ அல்லது வழக்கு தொடுக்கும் அரசு தரப்போ தாக்கல் செய்யலாம். நீதிமன்றம் எடுத்த முடிவில் இரு தரப்பிற்கும் சம்மதமில்லை என்றால், இரு தரப்பினரும் மேல்முறையீடு செய்யலாம்.

#### *(1) எவற்றுக்கு எதிராக மேல்முறையீடு செய்யலாம்?*

நீதிபதி எடுத்த ஒரு முடிவுக்கு எதிராக மட்டுமே நீங்கள் மேல்முறையீடு செய்யலாம். இதன் பொருள் என்னவென்றால், நீங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் காரணமாக நீங்கள் குற்றவாளி என தீர்ப்புரைக்கப்பட்டிருந்தால், தீர்ப்புரைக்கெதிராக நீங்கள் மேல்முறையீடு செய்ய இயலாது. தேவை இருந்தால், உங்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைக்கெதிராக நீங்கள் மேல்முறையீடு செய்யலாம். எனினும், ஒரு வழக்கு விசாரணைக்குப் பிறகு, நீங்கள் குற்றவாளியெனத் தீர்ப்புரைக்கப்பட்டு உங்களுக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தால், குற்றவாளி என்ற தீர்ப்புரைக்கெதிராகவோ, தண்டனைக்கெதிராகவோ அல்லது இரண்டுக்கும் எதிராகவோ மேல்முறையீடு செய்வதைப்பற்றி நீங்கள் முடிவு செய்யலாம்.

#### *(2) தண்டனை விதிக்கப்பட்ட பிறகு என் குற்ற ஒப்புதலை மீட்டுக்கொள்வதற்கு நான் மேல்முறையீடு ஒன்றைத் தாக்கல் செய்ய முடியுமா?*

முடியாது. உங்களுக்கு எதிரான குற்றத்தீர்ப்பைத் தள்ளுபடி செய்ய உயர் நீதிமன்றத்தில் குற்றவியல் திருத்த விசாரணை ஒன்றுக்கு நீங்கள் விண்ணப்பிக்க வேண்டும்.

> ***ஒரு குற்றத்தை நீங்கள் ஒப்புக்கொண்டால், உங்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கெதிராக மட்டுமே நீங்கள் மேல்முறையீடு செய்யலாம். வழக்கு விசாரணைக்குப் பிறகு நீங்கள் குற்றவாளியெனத் தீர்ப்புரைக்கப்பட்டிருந்தால், தீர்ப்புரைக்கெதிராகவோ, தண்டனைக்கெதிராகவோ அல்லது இரண்டுக்கும் எதிராகவோ நீங்கள் மேல்முறையீடு செய்யலாம்.***

### (B) மேல்முறையீட்டு நடைமுறை

#### *(1) நான் எவ்வாறு என் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்வது?*

நீங்கள் மேல்முறையீடு அறிவிப்பை **(Notice of Appeal)** நிறைவு செய்து அதன் ஒரு நகலை அரசு நீதிமன்றங்களின் 2-ம் தளத்தில் அமைந்துள்ள மத்திய பதிவகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். சமர்ப்பிக்கும்போது

கட்டணம்[7] ஒன்று செலுத்தப்பட வேண்டும். வழிகாட்டி புத்தகத்தின் பின்புறம் மேல்முறையீடு அறிவிப்பின் மாதிரி ஒன்றைக் காணலாம்.

மேல்முறையீட்டுடன் தொடர்புடைய ஏதேனும் அறிவிப்புகள் அல்லது ஆவணங்கள் ஆகியவற்றை உங்களிடம் சார்வு செய்வதற்கு மேல்முறையீடு அறிவிப்பில் முகவரி ஒன்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அதோடு, உங்களின் அடையாள அட்டையின் நகல் ஒன்றும் உங்களின் தொடர்பு எண்ணும் வழங்கப்பட வேண்டும். உங்களைப் பிரதிநிதிக்க ஒரு வழக்கறிஞர் இருந்தால், நீங்கள், உங்களின் வழக்கறிஞரின் பெயர், குறிப்பு எண், முகவரி, தொலைபேசி மற்றும் தொலைபிரதி எண்கள் ஆகியவற்றை மேல்முறையீடு அறிவிப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஒரு நிறுவனத்தின் சார்பாக நீங்கள் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்கிறீர்கள் என்றால், தயவுசெய்து உங்களின் நிறுவனத்திலிருந்து அதிகாரம் வழங்கும் ஒரு செல்லத்தக்க அதிகாரமுறை கடிதம் ஒன்றையும் (**Letter of Authorisation**) அதனுடன் இணைக்க வேண்டும். அந்த மேல்முறையீடு அறிவிப்பில், உங்களின் நிறுவனத்தின் சார்பாக நீங்கள் கையொப்பமிட வேண்டும்.

### *(2) மேல்முறையீடு செய்வதற்கு எனக்கு காலக்கெடு உண்டா?*

தண்டனை விதிக்கப்பட்ட அல்லது ஆணை பிறப்பிக்கப்பட்ட **14 நாள்காட்டி நாட்களுக்குள்**[8] (வார இறுதி நாட்கள் உள்பட, தண்டனை விதிக்கப்பட்ட நாளைச் சேர்க்காமல்) நீங்கள் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்ய வேண்டும்.

அந்தக் காலக்கெடுவை நீங்கள் மீறியிருந்தால், உங்களின் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்வதற்கான கால நீட்டிப்புக்கு விண்ணப்பிக்க உயர் நீதிமன்றத்தில் குற்றவியல் கோரிக்கை மனு **(Criminal Motion)** ஒன்றை நீங்கள் தாக்கல் செய்ய வேண்டும். உயர் நீதிமன்ற நீதிபதி உங்களுக்குக் கால நீட்டிப்பை வழங்கினால், நீங்கள், மேல்முறையீடு அறிவிப்பை உயர் நீதிமன்ற நீதிபதி வழங்கிய அந்தக் கால நீட்டிப்புக்குள், அரசு நீதிமன்றங்களில் தாக்கல் செய்ய வேண்டும்.

***நீங்கள், உங்களின் மேல்முறையீடு அறிவிப்பை 14 நாள்காட்டி நாட்களுக்குள் (தண்டனை விதிக்கப்பட்ட நாளைச் சேர்க்காமல்) தாக்கல் செய்ய வேண்டும். இல்லையெனில், நீங்கள் உயர் நீதிமன்றம் வழங்கக்கூடிய கால நீட்டிப்பிற்கான கோரிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டும்.***

---

[7] 2 ஜனவரி 2011-க்கு முன்பாக குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு $5 கட்டணம், 2 ஜனவரி 2011-க்குப் பிறகு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு $50 கட்டணம் (இதில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் 2017 வரை சரியானவை).

[8] குற்றஞ்சாட்டப்பட்டவர், 2 ஜனவரி 2011-க்கு முன்பாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தால், 10 நாள்காட்டி நாட்களாகும்.

### *(3) எனது மேல்முறையீடு அறிவிப்பு தாக்கல் செய்யப்பட்ட பிறகு என்ன நடக்கும்?*

மேல்முறையீடு அறிவிப்பு தாக்கல் செய்யப்பட்ட பிறகு, தீர்ப்புக்கான காரணம் என்ற ஆவணத்தை **(Grounds of Decision)** நீதிமன்றம் தயாரிக்கும். இந்தத் தீர்ப்புக்கான காரணம் என்ற ஆவணத்தில், நீதிபதி எடுத்த முடிவிற்கான காரணங்கள் அடங்கியிருக்கும்.

இந்தத் தீர்ப்புக்கான காரணம் என்ற ஆவணம் தயாரானவுடன், அதன் நகல் ஒன்று கொரியர் சேவை **(Courier Service)** வழியாக உங்களிடம் அல்லது உங்களின் வழக்கறிஞரிடம் கொண்டு சேர்க்கப்படும். தீர்ப்புக்கான காரணம் என்ற ஆவணத்தையும் **(Grounds of Decision)** சாட்சியக் குறிப்புகளையும் **(Notes of Evidence)** நீங்கள் பெற்றுக்கொண்ட பிறகு, இன்னமும் நீங்கள் மேல்முறையீட்டைத் தொடரப்போகிறீர்களா என்று மிகக் கவனமாக பரிசீலனை செய்யுங்கள். மேல்முறையீட்டைத் தொடர வேண்டும் என்ற முடிவைச் செய்வதற்கு முன்பு உங்களின் மேல்முறையீட்டில் உள்ள நற்தகுதிகள் குறித்து நீங்கள் சட்ட ஆலோசனை பெற விரும்பலாம்.

### *(4) தீர்ப்புக்கான காரணம் என்ற ஆவணத்தைப் (Grounds of Decision) பார்த்துவிட்டேன். மேல் முறையீட்டைத் தொடர நான் இன்னமும் விரும்புகிறேன். அடுத்து நான் என்ன செய்ய வேண்டும்?*

நீங்கள் இன்னமும் உங்களின் மேல்முறையீட்டைத் தொடர விரும்பினால், மத்திய பதிவகத்தில் (அரசு நீதிமன்றங்கள் தளம் 2-ல் அமைந்துள்ளது) மேல்முறையீடு மனு ஒன்றைத் தாக்கல் செய்ய வேண்டும். தீர்ப்புக்கான காரணம் என்ற ஆவணம் **(Grounds of Decision)** மற்றும் சாட்சியக் குறிப்புகள் **(Notes of Evidence)** ஆகியவை உங்களிடம் சார்வு **<u>செய்யப்பட்ட 14 நாள்காட்டி நாட்களுக்குள்</u>**[9] உங்களின் மனு தாக்கல் செய்யப்பட வேண்டும். அந்தக் காலக்கெடுவுக்குள் உங்களின் மனு தாக்கல் செய்யப்படவில்லை என்றால், அந்த மேல்முறையீடு மீட்டுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டு, விசாரணை நீதிமன்றம் அதன் தண்டனை அல்லது ஆணையை அமல்படுத்தும்.

நீங்கள் உங்களின் மனுவைத் தாக்கல் செய்திருந்தால், உயர் நீதிமன்றம் உங்களின் மேல் முறையீடு விசாரணை தேதிகளைக் குறித்து உரிய காலத்தில் உங்களுக்கு அறிவிக்கும்.

---

9 குற்றஞ்சாட்டப்பட்டவர், 2 ஜனவரி 2011-க்கு முன்பாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தால், 10 நாள்காட்டி நாட்களாகும்.

***தீர்ப்புக்கான காரணம் என்ற ஆவணம் (Grounds of Decision) மற்றும் சாட்சியக் குறிப்புகள் (Notes of Evidence) ஆகியவற்றைப் பெற்றுக்கொண்ட 14 நாள்காட்டி நாட்களுக்குள் உங்களின் மேல்முறையீடு மனுவை நீங்கள் தாக்கல் செய்ய வேண்டும். இல்லையெனில், அந்த மேல்முறையீடு மீட்டுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.***

### (c) மேல்முறையீட்டின் பொருட்டு வழங்கப்படும் பிணை

உங்களுக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தால், மேல்முறையீட்டின் பொருட்டு வழங்கப்படும் பிணையில் உங்களை விடுவிக்கும்படி நீங்கள் நீதிபதியிடம் விண்ணப்பம் செய்யலாம். இது, உயர் நீதிமன்றத்தில் உங்களின் மேல்முறையீடு விசாரித்து முடிவுபெறும் வரை உங்களுக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையை நீங்கள் தொடங்குவதைத் ஒத்திவைப்பதற்கான ஒரு வேண்டுகோளாகும். உங்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொள்வதா அல்லது நிராகரிப்பதா என்பதை முடிவு செய்வதற்கு முன்பாக, அரசு தரப்பு வழக்கறிஞரின் கருத்தை நீதிமன்றம் கேட்டறியும்.

உங்களின் விண்ணப்பத்திற்கு எதிர்ப்பில்லாவிட்டாலும், அநேகமாக, அரசு தரப்பு உங்களின் பிணை தொகையை உயர்த்த விண்ணப்பிக்கும். உங்களால் பிணையில் வெளியேற முடியவில்லை என்றால், உங்களுக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையை நீங்கள் உடனடியாக நிறைவேற்ற தொடங்குவீர்கள்.

ஆனால், மேல்முறையீட்டின் பொருட்டு வழங்கப்படும் பிணையில் நீங்கள் விடுவிக்கப்பட்டால், அந்தப் பிணைக்கு உட்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றுக்கு நீங்கள் கீழ்ப்படிய வேண்டும். வழக்கமாக, மேல்முறையீட்டைத் தொடரப் போவதில்லை என்று நீங்கள் முடிவு செய்தால், உங்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறைவேற்ற நீதிமன்றத்தில் நீங்கள் சரணடைய வேண்டும் என்ற நிபந்தனையும் இதில் அடங்கும். உங்களின் மேல்முறையீட்டை நீங்கள் தொடர்ந்தால் உங்களின் மேல்முறையீடு விசாரணைக்கு நீங்கள் நீதிமன்றத்திற்கு வர வேண்டும்.

நீங்கள் சரணடையத் தவறினால், உங்களுக்கு எதிராக பிடியாணை ஒன்று பிறப்பிக்கப்படும். நீங்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்படுவீர்கள். அதன் பிறகு, தண்டனையை நிறைவேற்ற சிறை இலாக்காவிடம் ஒப்படைக்கப்படுவீர்கள்.

தண்டனை விதிக்கப்பட்ட அல்லது ஆணை பிறப்பிக்கப்பட்ட 14 நாள்காட்டி நாட்களுக்குள் மேல்முறையீடு அறிவிப்பு தாக்கல் செய்யப்பட வேண்டும்.

→

தீர்ப்புக்கான காரணங்கள் மற்றும் சாட்சியக் குறிப்புகள் தயார் செய்யப்பட்டு உங்களிடம் ஒப்படைக்கப்படும்.

→

ஆவணங்கள் கிடைக்க பெற்றதிலிருந்து 14 நாள்காட்டி நாட்களுக்குள் மேல்முறையீடு மனு தாக்கல் செய்யப்பட வேண்டும்.

# 08

# ஒருங்கிணைக்கப்பட்ட வழக்கு நிர்வாக முறை (ICMS)

அத்தியாயம் 8

# ஒருங்கிணைக்கப்பட்ட வழக்கு நிர்வாக முறை (ICMS)

## மின்னியல் தாக்கல் முறைப்படி உங்களின் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கான ஒரு துரித வழிகாட்டி

| | |
|---|---|
| ஏன் ICMS? | ▸ ஆவணங்களையும் மற்றும் விண்ணப்பங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கும், வழக்கைச் சார்வு செய்வதற்கும் ICMS உங்களுக்கு உதவுகிறது.<br>▸ மின்னியல்-தாக்கலை **(e-filing)** ஒரு நாள் பொழுதின் எந்த நேரத்திலும் செய்யலாம். |
| ICMS-யைப் பயன்படுத்த தேவையானவை | ▸ இணையம் இணைப்புள்ள தனிநபர் கணினி.<br>▸ ஓர் இணைய உலாவி – குரோம் **(Chrome)**, ஃபயர்ஃபாக்ஸ் **(Firefox)**, இன்டர்நெட் எக்ஸ்புளோரர் **(Internet Explorer)** 9-ம் பதிப்பு அல்லது அதற்கும் மேல் அல்லது சஃபாரி **(Safari)**.<br>▸ அடோபி ரீடர் **(Adobe Reader)** - வழக்கு ஆவணங்களைப் பார்வையிட.<br>▸ மைக்ரோசாஃப்ட் வர்டு **(Microsoft Word)** அல்லது பிடிஎஃப் **(PDF)** வடிவத்திலான ஆவணங்கள்.<br>▸ மின்னியல்-தாக்கல் செய்வதற்கு (அவசியமாயின்) காகித ஆவணங்களை மின்னியல் பாரமாக மாற்ற ஒரு வருடி **(scanner)**. |
| பதிவு செய்தல் மற்றும் உள் புகுதல் | ▸ உங்களின் சிங்பாஸ் **(SingPass)** பயனர் பெயர் மற்றும் இரட்டை மறைச்சொல் முறையோடு **(2-Factor Authentication)** அமைந்த கடவுச்சொல்லுடன் நீங்கள் உள் புக வேண்டும். |
| மின்னியல்-வழக்கு கோப்பை (eCase file) அணுக அனுமதி | ▸ ஒரு சட்ட அமலாக்க முகவம் உங்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகளைத் தாக்கல் செய்திருந்தால், உங்களுக்கு நுழைவுரிமை வழங்கப்படும். உங்களின் சிங்பாஸ்-யைப் **(SingPass)** பயன்படுத்தி உள் நுழைய வேண்டும்.<br>▸ வழக்கறிஞரால் பிரதிநிதிக்கப்படாத சுயமாக வழக்காடும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களும்:<br>* ஒரு நீதிமன்ற நிகழ்வு இடம்பெறும் தேதியை மாற்ற ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம்.<br>* சிங்கப்பூரை விட்டு வெளியூர் பயணம் செல்ல ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம்.<br>* நீதிமன்ற அறிவிப்பு/வழக்கு விசாரணை தேதியை நீக்கும்படி கேட்டுக்கொள்ளலாம்.<br>* பிணை சம்பந்தப்பட்ட மாற்றங்கள் செய்வதற்கு ஓர் அறிவிப்பு தேதி வழங்குமாறு கேட்டுக் கொள்ளலாம்.<br>* உங்களின் வழக்குத் தொடர்பான நீதிமன்றப் பதிவுகளை வழங்குமாறு கேட்டுக்கொள்ளலாம்.<br>* ஆவணங்களைப் பதிவேற்றம் செய்யலாம். |
| தொழில்நுட்ப சிரமங்கள் | ▸ ஆவணங்களைப் பதிவேற்றம் செய்வதில் அல்லது பார்வையிடுவதில் அல்லது விண்ணப்பங்கள் செய்வதில் உங்களுக்குத் தொழில்நுட்ப சிரமங்கள் ஏதேனும் இருந்தால், 1800 5878423 என்ற எண்ணை அழைத்து அல்லது contact@statecourts.gov.sg-க்கு மின்னஞ்சல் அனுப்பி நீங்கள் உதவி பெறலாம்.<br>▸ அரசு நீதிமன்றங்களின் இணையத்தளத்தில் இருக்கும் **ICMS** "குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கான ஒரு துரித வழிக்காட்டி"-யையும் நீங்கள் காணலாம். |

# 09

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQ)

அத்தியாயம் 9

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQ)

1. ***கே:*** *தயவுசெய்து, பணம் திரட்ட எனக்கு கூடுதல் அவகாசம் கிடைக்குமா?*

   **ப:** பணம் திரட்ட உங்களுக்கு அவகாசம் வழங்கலாமா என்பது நீதிமன்றத்தின் விருப்புரிமைக்கு உட்பட்டது. ஏற்கனவே பல ஒத்திவைப்புகள் வழங்கப்பட்டிருந்தால், நீதிமன்றம் உங்களுக்கு மேலும் ஒத்திவைப்புகளை வழங்க வாய்ப்பில்லை. இந்நிலையில், அநேகமாக, நீதிமன்றம் உங்களின் குற்ற ஒப்புதலை அல்லது மறுப்பைப் பதிவு செய்யும். "ஒத்திவைப்புகள்" பற்றி அத்தியாயம் **2(E)**-யையும் "குற்றவியல் அறிவிப்பு நீதிமன்றங்களில் நடவடிக்கைகள்" பற்றி அத்தியாயம் **3(B)**-யையும் பார்க்கவும்.

2. ***கே:*** *கடந்த விசாரணையின்போது இறுதி ஒத்திவைப்பு வழங்கப்பட்டது. தயவுசெய்து எனக்கு மேலும் ஓர் இறுதி ஒத்திவைப்பு வழங்க முடியுமா?*

   **ப:** அந்த முடிவு நீதிமன்றத்தின் கைகளில் உள்ளது. ஏற்கனவே பல ஒத்திவைப்புகள் வழங்கப்பட்டிருந்தால், நீதிமன்றம் உங்களுக்கு மேலும் ஒத்திவைப்புகளை வழங்குவதற்கு வாய்ப்பில்லை. இந்நிலையில், அநேகமாக, நீதிமன்றம் உங்களின் குற்ற ஒப்புதலை அல்லது மறுப்பைப் பதிவு செய்யும். "ஒத்திவைப்புகள்" பற்றி அத்தியாயம் **2(E)**-யையும் "குற்றவியல் அறிவிப்பு நீதிமன்றங்களில் நடவடிக்கைகள்" பற்றி அத்தியாயம் **3(B)**-யையும் பார்க்கவும்.

3. ***கே:*** *நீதிமன்ற அபராதத்தை நான் தவணை முறையில் செலுத்தலாமா?*

   **ப:** ஆம். ஆனால், அது நீதிமன்றத்தின் விருப்புரிமைக்கு உட்பட்டது. "அபராதங்கள்" பற்றி அத்தியாயம் **6(A)(3)(a)**-யைப் பார்க்கவும். மேலும் தகவல்கள் பெற www.judiciary.gov.sg என்ற எங்களின் இணையத்தளத்தைக் காணவும்.

4. ***கே**: நான் குற்றத்தை ஒப்புக்கொண்டால், அபராதத்திற்குப் பதிலாக எத்தனை நாட்களுக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்படும்? அபராதத்திற்குப் பதிலான சிறைத் தண்டனையைப் பின்தேதியிட்டு (சிறைக்காவலில் வைக்கப்பட்ட தேதியிலிருந்து) கணக்கிட முடியுமா?*

   **ப:** எத்தனை நாட்கள் என்பது நீதிபதியின் விருப்புரிமையைப் பொறுத்துள்ளது. மேலும், அது அதிகப்படியான அபராதத் தொகை மற்றும் குற்றத்தின் தன்மை ஆகியவற்றைச் சார்ந்திருக்கும். அபராதத்திற்குப் பதிலான சிறைத் தண்டனையைப் பின்தேதியிட்டு (சிறைக்காவலில் வைக்கப்பட்ட தேதியிலிருந்து) கணக்கிடவோ விதிக்கப்பட்ட மற்றொரு சிறைத் தண்டனையுடன் ஏக சமயத்தில் நிறைவேற்றப்படவோ முடியாது. "அபராதங்கள்" பற்றி அத்தியாயம் **6(A)(3)(a)**-யைப் பார்க்கவும்.

5. ***கே**: எனக்கு இணக்கத் தீர்வு வழங்கப்பட்டுள்ளது, ஆனால், அது மிகப் பெரிய தொகையாக உள்ளது. அந்த இணக்கத் தீர்வை நான் தவணை முறையில் செலுத்தலாமா?*

   **ப:** இணக்கத் தீர்வு, வழக்கைத் தொடரும் முகமைகளால் வழங்கப்படுவதால், நீங்கள் இணக்கத் தீர்வைத் தவணை முறையில் செலுத்துவதில் அவர்களுக்கு உடன்பாடுள்ளதா என்பதைப்பற்றி கலந்து பேச நீங்கள் அவர்களை அணுகலாம்.

6. ***கே**: என் நண்பர் ஒரே மாதிரியான குற்றச்சாட்டை எதிர்நோக்குகிறார். ஏன் அவருக்கு இணக்கத் தீர்வு வழங்கப்பட்டிருக்கிறது ஆனால் எனக்கில்லை?*

   **ப:** வழக்கைத் தொடரும் முகமைகளின் விருப்புரிமைக்கு உட்பட்டு இணக்கத் தீர்வு வழங்கப்படுகிறது. உங்களுக்கு இணக்கத் தீர்வு வழங்கப்படாததற்கான காரணங்களில் கீழ்வருபவை அடங்கலாம்:

   **(a)** உங்களின் வழக்கில் அடங்கியுள்ள உண்மை விவரங்கள், உங்களின் நண்பருடைய வழக்கைவிட இன்னும் கடுமையானதாக இருக்கலாம்.

   **(b)** இதற்கு முன் இதே போன்ற வழக்கில் நீங்கள் இணக்கத் தீர்வைச் செலுத்தியிருக்கலாம்/குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கலாம்.

   **(c)** இதற்கு முன் இதே வழக்கிற்கு உங்களுக்கு இணக்கத் தீர்வு வழங்கப்பட்டு நீங்கள் அதன் தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்ததால் அந்த இணக்கத் தீர்வு காலாவதி ஆகியிருக்கலாம் அல்லது முகமை அதைத் திரும்பப்பெற்றிருக்கலாம்.

7. ***கே***: *ரொக்க பிணையா அல்லது "**IC** பிணையா"? தயவுசெய்து எனக்கு "**IC** பிணை" கிடைக்குமா?*

**ப:** "**IC** பிணை" நீதிமன்றப் பிணைகளுக்குப் பொருந்தாது. ஆயினும், பிணை தொகை $15,000 அல்லது அதற்குக் கீழ் இருந்தால், நீதிமன்றம் ரொக்கமில்லாப் பிணை வழங்க அனுமதிக்கலாம். $15,000-க்கு மேல் உள்ள பிணை தொகைகளுக்குப், பிணை வழங்குபவர், பொதுவாக, ரொக்கப்பணம் அல்லது ரொக்கப்பணத்திற்கு ஈடான உத்தரவாதத்தை வழங்கவேண்டும். அத்தியாயம் **2(F)(4)**-ல் "எத்தகைய உத்தரவாதம் (பிணை) வழங்கப்படலாம்" என்பதைப் பார்க்கவும்.

8. ***கே***: *ஓர் "அதிகாரமுறை கடிதம்" என்பது என்ன?*

**ப:** உங்களின் நிறுவனம், பங்காளித்துவம், அல்லது கழகம் போன்ற ஓர் அமைப்பின் சார்பாக நீதிமன்ற நடவடிக்கைகளில் நீங்கள் தோன்றினால், உங்களின் இயக்குநர், நிறுவன செயலாளர், பங்காளி, அல்லது நிறுவன தலைவர், (நடைமுறைக்கு ஏற்றபடி) நிறுவன தலைமை அதிகாரி அல்லது இதற்கு நிகரான அதிகாரம் உள்ளவரால் எழுதி கையொப்பமிடப்பட்ட ஒரு விவரவுரை மூலம் நீங்கள் பிரதிநிதியாக நியமிக்கப்பட வேண்டும். அவ்விவரவுரை கீழ்வருமாறு இருக்க வேண்டும்:

**(a)** அது அமைப்பின் அதிகாரபூர்வ அஞ்சல் தாளில் எழுதப்பட்டிருக்க வேண்டும்

**(b)** அதில், அமைப்பின் முத்திரை பதிக்கப்பட்டிருக்க வேண்டும்

**(c)** அதில், வழக்கு எண் மற்றும் விசாரணை தேதி எழுதப்பட்டிருக்க வேண்டும்

**(d)** அது, உங்களின் பெயரையும் பதவியையும் கொண்டிருக்க வேண்டும்

**(e)** அது, உங்களை நியமிக்கும் நபரின் பெயர் மற்றும் பதவி ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும்.

9. ***கே**: ஒவ்வொரு நீதிமன்ற விசாரணைக்கும் நான் அதிகாரமுறை கடிதத்தைக் கொண்டு வர வேண்டுமா?*

**ப:** தயவுசெய்து அதிகாரமுறை கடிதத்தை ஒவ்வொரு நீதிமன்ற விசாரணைக்கும் கொண்டு வாருங்கள். ஒவ்வொரு விசாரணையிலும் நீதிமன்றத்தின் முன் தோன்றும் நபர், அவர் பிரதிநிதிக்கும் நிறுவனம், பங்காளித்துவம் அல்லது கழகத்தால் முறையாக அதிகாரம் அளிக்கப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளார் என்று நீதிமன்றம் உறுதிசெய்துகொள்வது அவசியம்.

உங்களின் அதிகாரமுறை கடிதம் காலாவதியானதல்ல என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள் (அதாவது, நடந்து முடிந்த நீதிமன்ற விசாரணைக்குப் பயன்படுத்தப்பட்ட கடிதம்).

10. ***கே**: நான் அடுத்த வாரம் நீதிமன்றத்தில் தோன்ற வேண்டும், ஆனால், எனது அடையாள அட்டையை* **(IC)** *நேற்றுதான் தொலைத்தேன். என்னிடம் புகைப்படம் கொண்ட வேறு அடையாள அட்டை எதுவும் இல்லை. நான் என்ன செய்ய வேண்டும்?*

**ப:** உங்களிடம் புகைப்படம் கொண்ட வேறு அடையாள அட்டை (எ.டு. கடவுச்சீட்டு அல்லது உங்களின் விவரங்களையும் புகைப்படத்தையும் கொண்ட ஊழியர் அட்டை) எதுவும் உள்ளதா என்று கவனமாகப் பார்க்கவும்.

உங்களிடம் புகைப்படம் கொண்ட வேறு அடையாள அட்டை எதுவும் இல்லை என்றால், அதற்கான காரணங்களை ஆதரிக்கும் பத்திரங்களை நீதிமன்றத்திற்குக் கொண்டு வரவும். உதாரணத்திற்கு:

(a) உங்களின் அடையாள அட்டையைத் தொலைத்துவிட்டதற்கான ஆதாரம் (எ.டு. காவல் துறை புகார் அறிக்கை, காப்புறுதி கோரிக்கை/வீடு கொள்ளையடிக்கப்பட்டதால் அடையாள அட்டையை இழந்துவிட்டதாகப் பதிவு செய்யப்பட்ட புகார் அறிக்கை)

(b) மாற்று அடையாள அட்டையைப் பெறுவதற்காக நீங்கள் எடுத்த முயற்சிகளுக்கான ஆதாரம் (எ.டு. **ICA**-யுடனான கடிதத் தொடர்பு).

11. ***கே***: *எனது முதலாளியான, எங்கள் நிறுவனத்தின் இயக்குநர் குற்றஞ்சாட்டப்படுகிறார். நான் அவரது அலுவலக உதவியாளர். அவரது சார்பாக அவர் என்னை நீதிமன்றத்தில் தோன்றுமாறு உத்தரவிடலாமா?*

**ப:** குற்றஞ்சாட்டப்பட்டவர் உங்களின் முதலாளி என்றால், குற்றச்சாட்டை எதிர்நோக்க அவரே நேரடியாக நீதிமன்றத்துக்கு வர வேண்டும். அவரது பிரதிநிதியாக, அவரின் சார்பாக நீங்கள் நீதிமன்றத்துக்கு வர முடியாது. உங்களின் முதலாளி நீதிமன்றத்துக்கு வரத் தவறினால், அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்படலாம்.

12. ***கே***: *எனக்கு சீர்த்திருத்த வேலை செய்ய விருப்பமில்லை; அதற்குப் பதிலாக கூடுதல் அபராதம் செலுத்துவதை விரும்புகிறேன். அது சாத்தியப்படுமா?*

**ப:** ஒரு சீர்த்திருத்த வேலை உத்தரவு என்பது நீதிபதியால் உத்தரவிடப்படும் ஓர் ஆணையாகும். குப்பை போட்ட குற்றத்திற்காக உங்களைக் குற்றவாளி என தீர்ப்பளித்த பிறகு, நீதிபதி உங்களுக்கு எதிராக சீர்த்திருத்த வேலை உத்தரவைப் பிறப்பிக்கலாம் (அவ்வாறு உத்தரவிடாமலிருக்க நல்ல காரணங்கள் இருந்தாலன்றி எ.டு. உடல் ஊனம்).

சீர்த்திருத்த வேலை உத்தரவு விதிக்கப்பட்டவுடன், நீங்கள் சீர்த்திருத்த வேலையை நிறைவு செய்ய வேண்டும். சீர்த்திருத்த வேலை செய்யத் தவறுவது ஒரு குற்றமாகும் என்பதைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

13. ***கே**: இது எனது முதல் குற்றம் மட்டுமே. நீதிமன்றம் எனக்கு ஓர் எச்சரிக்கை மட்டும் வழங்க முடியுமா?*

**ப:** அரசாங்கத் தலைமைச் சட்ட அதிகாரியின் அலுவலகத்தின் உத்தரவின் கீழ் கடுமையான எச்சரிக்கைகள் (வழக்குத் தொடுப்பதற்குப் பதிலாக) காவல்துறையால் விடுக்கப்படும். நீதிமன்றம் எச்சரிக்கை விடுக்கும் நிலையில் இல்லை.

14. ***கே**: எனது தண்டனை என்னவாக இருக்கப்போகிறது? நான் வழக்கு விசாரணை கோரினால் எனது தண்டனை இன்னும் அதிகமாக இருக்குமா?*

**ப:** உங்களின் ஆகக் கூடுதலான தண்டனை உங்களின் குற்ற பத்திரிக்கையின்(களின்) கீழ்ப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. உங்களின் இறுதி தண்டனை பல்வேறு காரணிகளைப் பொறுத்திருக்கும். நீங்கள் வழக்கு விசாரணை கோரியதைக் கொண்டு உங்களின் தண்டனை அதிகமாக இருக்காது. ஆயினும், ஆரம்பக் கட்டத்திலேயே ஒரு குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்ற ஒப்புதல், செய்த தவறுக்கான வருத்தத்தைக் குறிக்கின்றது என்று நீதிமன்றம் மனநிறைவடைந்தால், முன்னதாகவே தெரிவிக்கப்பட்ட அக்குற்ற ஒப்புதலைத் தண்டனை தணிப்புக்கான ஒரு காரணியாக நீதிமன்றம் கருதி, விதிக்கப்படும் தண்டனையில் ஒரு கழிவை வழங்கலாம். அத்தியாயம் **2(D)**-ல் "குற்ற ஒப்புதல் அதற்கு மாறாக விசாரணை கோருதல்" மற்றும் அத்தியாயம் **6(C)**-ல் "படி 9: தண்டனை தீர்ப்பு உரைத்தல்" ஆகியவற்றைப் பார்க்கவும்.

15. ***கே**: **CLAS**-க்கு நான் எங்கே விண்ணப்பம் செய்யலாம்?*

**ப:** "குற்றவியல் சட்ட உதவித் திட்டம்" **(CLAS)** வழக்கறிஞர் சங்கத்தின் இலவச சேவைகள் அலுவலகத்தால் நடத்தப்படுகிறது. நீங்கள் அரசு நீதிமன்றங்களில் பேஸ்மண்ட் 1-ல் உள்ள **HELP** நிலையத்தில் இயங்கும் வழக்கறிஞர் சங்கத்தின் இலவச சேவைகள் அலுவலகத்தை உதவிக்காக அணுகலாம். "குற்றவியல் சட்ட உதவித் திட்டம்" பற்றி அத்தியாயம் **2(B)(2)**-யைப் பார்க்கவும்.

16. ***கே**: நான் எவ்வாறு எனது முறையீடுகளை **AGC**-யிடம் சமர்ப்பிப்பது?*

**ப:** உங்களின் முறையீடுகளின் ஒரு நகலை, 1 அப்பர் பிக்கரிங் ஸ்ட்ரீட், சிங்கப்பூர் 058288-ல் அமைந்துள்ள அரசாங்கத் தலைமைச் சட்ட அதிகாரியின் அலுவலகத்திற்கு நீங்கள் அனுப்பலாம். மாறாக, உங்களின் முறையீடுகளை **AGC**-க்கு மின்னஞ்சல் வழியாக AGC_Crime_Representations@agc.gov.sg-க்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

17. ***கே**: நான் எப்படி ஏதேனும் ஆவணங்களைச் சமர்ப்பிப்பது அல்லது **AGC**-யுடன் தொடர்புகொள்வது?*

**ப:** அரசாங்கத் தலைமைச் சட்ட அதிகாரியின் அலுவலக முகவரி: 1 அப்பர் பிக்கரிங் ஸ்ட்ரீட், சிங்கப்பூர் 058288 என்பதாகும். **AGC**-யைப் பற்றி மேலும் தகவலறிய, நீங்கள் www.agc.gov.sg என்ற அவர்களின் இணையத்தளத்தைக் காணலாம்.

# 10

# சொல் விளக்கத் திரட்டு

அத்தியாயம் 10

# சொல் விளக்கத் திரட்டு

### குற்றஞ்சாட்டப்பட்டவர்

ஒரு குற்றவியல் குற்றச்செயலுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்.

### விடுதலை

குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரானக் குற்றத்தை(களை) அவர் புரிந்தாரென நிரூபிக்கப்படவில்லை என்று நீதிபதி வழங்கும் ஒரு தீர்ப்பு.

### ஒத்திவைப்பு / மேலும் ஓர் அறிவிப்பு

வழக்கு இன்னொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படும்போது.

### முந்தைய / பழைய குற்றத்தீர்ப்புகள்

குற்றஞ்சாட்டப்பட்டவரின் முந்தைய குற்றத்தீர்ப்புகளின் குற்றவியல் பதிவு.

### மேல்முறையீடு

கீழ் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பை மேல்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்வதற்கு அதிருப்தி அடைந்த தரப்பினரால் ஒரு மேல்முறையீடு தாக்கல் செய்யப்படுகிறது.

### பிணை

குற்றஞ்சாட்டப்பட்டவர் தடுப்புக் காவலிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு அவர் தொடர்ந்து எல்லா நீதிமன்ற விசாரணைகளுக்கும் வருவதை உறுதிப்படுத்துவதற்காக நீதிமன்றத்திடம் வழங்கப்படும் பணம் அல்லது சொத்து.

### பிணை வழங்குபவர்

குற்றஞ்சாட்டப்பட்டவர் தடுப்பு காவலிலிருந்து விடுவிக்கப்படுவதற்காக, பிணை தொகையென நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்ட பணத்தொகையைப் பிணையாக வழங்க தயாராக இருக்கும் நபர். பிணை வழங்குபவர் "ஷ்யூரிட்டி" என்றும் அழைக்கப்படுவார்.

### குற்றப்பத்திரிக்கை

இது, அரசு தரப்பால் தயாரிக்கப்படும் ஒரு அதிகாரபூர்வ ஆவணம். குற்றஞ்சாட்டப்பட்டவர் புரிந்ததாகக் கூறப்படும் குற்றச்செயல் நடந்த தேதி, நேரம், இடம் மற்றும் அதன் தன்மை, ஆகிய தகவல்கள் இதிலடங்கும்.

### வழக்கு விசாரணை கோருதல்

குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர், தனக்கெதிரான குற்றச்சாட்டை(களை) ஒப்புக்கொள்ளாமல் அவற்றிற்கு எதிராக ஒரு விசாரணையின்போது தன்னைத் தற்காத்து வழக்காட விரும்பினால், அவர் ‘வழக்கு விசாரணை கோருகிறார்’ என்று பொருள்படும்.

### குற்றத்தீர்ப்பு

குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக அவர் குற்றவாளி என நீதிபதி வழங்கும் தீர்ப்பு.

### சட்ட ஆலோசகர் / வழக்கறிஞர்

ஒரு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பிரதிநிதிப்பவர்.

### வழக்கு விசாரணை

நீதிமன்றத்தில் ஒரு நீதிபதியின் முன்னிலையில் நடத்தப்படும் ஒரு சட்ட நடவடிக்கை.

### அபராதத்திற்குப் பதிலான சிறைத் தண்டனை

நீதிமன்றம் விதித்த அபராதத்தைச் செலுத்த தவறும்போது குற்றஞ்சாட்டப்பட்டவர் அனுபவிக்கும் சிறைத் தண்டனை.

### தண்டனை தணிப்பு வாதம்

தண்டனை வழங்கப்படும் கட்டத்தில், தண்டனையின் கடுமையைக் குறைக்க, குற்றஞ்சாட்டப்பட்டவர் தன் வழக்கிற்குத் தொடர்புள்ள விவரங்களை (அதாவது, காரணங்களை அல்லது விளக்கங்களை) நீதிபதியிடம் எடுத்துக் கூறி கருணை வேண்ட இது ஒரு வாய்ப்பு.

## நியூட்டன் விசாரணை

தண்டனை தீர்ப்பு செயல்முறையின்போது, "என்சிலரி ஹியரீங்" என்றும் அழைக்கப்படும் கூடுதலாக நடத்தப்படும் விசாரணை இது. குற்றஞ்சாட்டப்பட்டவரைக் குற்றவாளியென தீர்ப்பளித்த பிறகு, அவருக்கு வழங்கப்படக்கூடிய தண்டனையைக் குறிப்பிடத்தக்க வகையில் பாதிக்கக்கூடிய உண்மை விவரங்களையொட்டி சர்ச்சையெழும்போது, இந்த விசாரணை நடத்தப்படும்.

## குற்ற ஒப்புதல்

குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றத்தை ஒப்புக்கொண்டால், அவர் குற்றச்சாட்டில்(களில்) உள்ளபடியே குற்றத்தைத் (களைத்) தான் புரிந்ததாக ஒப்புக்கொள்கிறார்.

## விசாரணைக்கு முந்திய கூட்டம் (PTC)

தரப்பினர்களை வழக்கு விசாரணைக்குத் தயார்படுத்தவும், வழக்கு விசாரணைக்குத் தேதி குறிப்பதற்கு முன்பு ஏதேனும் நிர்வாக விவகாரங்களைத் தீர்ப்பதற்காகவும் நடத்தப்படும் ஒரு விசாரணை.

## அரசு தரப்பு வழக்கறிஞர்/அரசு தரப்பு/அரசைப் பிரதிநிதிக்கும் ஒரு துணை வழக்கறிஞர் (DPP)

அரசு தரப்பு வழக்கறிஞர்கள் அரசின் சார்பாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கைகளை மேற்கொள்வர்.

## தடுப்புக் காவல்

புலன் விசாரணைக்காக அல்லது பிணை வழங்க இயலாத நிலையில் காவல்துறையின் காவலில் குற்றஞ்சாட்டப்பட்டவர் வைக்கப்படும்போது.

## தண்டனை தீர்ப்பு

ஒரு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு அவர் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டு நீதிமன்றத்தால் விதிக்கப்படும் தண்டனை.

## உண்மை விவர அறிக்கை

அரசு தரப்பால் தயாரிக்கப்படும் ஓர் உண்மை விவர அறிக்கையில் குற்றச் செயலுடன் தொடர்புடைய உண்மை விவரங்கள் அடங்கியிருக்கும்.

## நிறுத்திவைக்கப்பட்ட குற்றச்சாட்டு(கள்)

தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட குற்றச்சாட்டு(கள்). ஆயினும், அரசு தரப்பு பின்னொரு கட்டத்தில், இவற்றை, (1) தண்டனை விதிப்பிற்காகக் கருத்தில் எடுத்துக்கொள்ள **(TIC)** விண்ணப்பிக்கலாம், (2) தொடருவதற்கு விண்ணப்பிக்கலாம் அல்லது (3) கைவிட விண்ணப்பிக்கலாம்.

## சாட்சிக்கான அழைப்பாணை

ஒரு குறிப்பிட்ட தேதிக்கும் மற்றும் நேரத்திற்கும் ஒருவரை நீதிமன்றத்திற்கு வரும்படி ஆணையிட நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் ஓர் ஆவணம்.

## கருத்தில் எடுத்துக்கொள்ளப்படும் (TIC) குற்றச்சாட்டு(கள்)

இவை, தண்டனையைத் தீர்மானிக்கும்போது நீதிபதி கருத்தில் எடுத்துக்கொள்ளும் குற்றச்சாட்டு(கள்). குற்றஞ்சாட்டப்பட்டவர் இந்த **TIC** குற்றச்சாட்டுகளுக்காகத் தனியே தண்டிக்கப்படமாட்டார். ஆயினும், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு விதிக்கப்படும் ஒட்டு மொத்த தண்டனை இந்த **TIC** குற்றச்சாட்டுகளின் விளைவால் அதிகரிக்கப்படலாம்.

## வழக்கு விசாரணை

குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகளின் படி அவர் குற்றவாளியா என்பதைத் தீர்மானிக்க நடத்தப்படும் ஒரு விசாரணை.

## தீர்ப்பு

ஒரு வழக்கு விசாரணையின் இறுதியில் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு அவரைக் குற்றவாளியெனத் தீர்ப்பளிப்பதா இல்லையா என்ற நீதிபதியின் முடிவு.

## சாட்சி

ஒரு வழக்கில் சாட்சியம் வழங்கும் ஒரு நபர், சாட்சியம் வழங்குவதற்கு முன், தான் உண்மையை உரைப்பதாக முறையே வாக்குறுதி அளிக்க ஒரு சாட்சி சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும்.

# 11

# பயன்மிக்க இணைப்புகள்

அத்தியாயம் 11

# பயன்மிக்க இணைப்புகள்

## மன ரீதியிலான உதவி மற்றும் ஆதரவு

ஒரு நீதிமன்ற வழக்கு குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்கு மிகுந்த மனவுளைச்சலைத் தரக்கூடியதாக இருக்கலாம். உங்களுக்கு மன ரீதியிலான சிரமங்கள் இருந்தால், நீங்கள் பின்வரும் அமைப்புகளிடமிருந்து மன ரீதியிலான உதவி மற்றும் ஆதரவை நாடலாம்.

### *(1) கொம்கேர் உதவி அழைப்பு எண்*

குறைந்த வருமானம் கொண்ட தனி நபர்கள் மற்றும் குடும்பங்கள் ஆகியோருக்குச் சமூக அடிப்படையிலான உதவி.
தொலைபேசி: 1800 222 0000
வலைதளம்: www.msf.gov.sg/Comcare/Pages/default.aspx

### *(2) சிங்கப்பூர் சமாரியர்கள் (SOS)*

தற்கொலை பற்றிச் சிந்திக்கின்ற அல்லது தற்கொலையால் பாதிக்கப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் உள்ள மக்களுக்கு.
தொலைபேசி: 1800 221 4444
வலைதளம்: www.sos.org.sg

### *(3) சிங்கப்பூர் போதைப்பொருள் தடுப்புச் சங்க நேரடித் தொலைபேசி எண்*

போதைப்புழங்கிகள், அவர்களின் குடும்பங்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கானது.
தொலைபேசி: 1800 733 4444
வலைதளம்: www.sana.org.sg

கூடுதல் நேரடித் தொலைபேசி எண்களுக்கும், நீங்கள் எங்கு உதவி நாடலாம் என்ற தகவலுக்கும் தயவுசெய்து, www.ncss.gov.sg என்ற தேசிய சமூகச் சேவை மன்றத்தின் வலைதளத்திற்குச் செல்லவும்.

# 12

# மாதிரிப் படிவங்கள்

அத்தியாயம் 12

# மாதிரிப் படிவங்கள்

## படிவம் 66: மேல்முறையீடு அறிவிப்பு (தண்டனை/குற்றத்தீர்ப்புக்கு எதிராக)

படிவம் 66

மேல்முறையீடு அறிவிப்பு
(பிரிவுகள் 374 முதல் 377 வரை)

சிங்கப்பூர் குடியரசின் உயர் நீதிமன்றத்தில்

மேஜிஸ்திரேட்டின் முறையீடு எண்: of 20
அரசு நீதிமன்றங்கள் எண்:
வழக்கு எண்:

[மேல்முறையீட்டாளரின் பெயர்] ... மேல்முறையீட்டாளர்
மற்றும்
[பிரதிவாதியின் பெயர்] ... பிரதிவாதி
இடையே

பெறுநர்:
சிங்கப்பூர் குடியரசின் உயர் நீதிமன்ற
மான்புமிகு நீதிபதிகள் அவர்களுக்கு

மேல்முறையீடு அறிவிப்பு

மேல் பெயர் குறிப்பிடப்பட்ட மேல்முறையீட்டாளர், 20 , -ம் நாளன்று அரசு நீதிமன்றங்கள் எண் -ல் மாவட்ட நீதிபதி (*அல்லது* மேஜிஸ்திரேட்) அவருக்கு வழங்கிய [குற்றத்தீர்ப்பில் *அல்லது* (தண்டனை தீர்ப்பில்)] [*அல்லது* பிரதிவாதிக்கு வழங்கிய விடுதலையில் அல்லது விதிக்கப்பட்ட தண்டனையில்] [*அல்லது* பிறப்பித்த உத்தரவில் (*என்ன உத்தரவு என்று குறிப்பிடவும்*)], அதிருப்தியடைந்து, இதன்வழி, மேல் குறிப்பிடப்பட்ட வழக்கில் வழங்கப்பட்ட குற்றத்தீர்ப்பை [*அல்லது* விடுதலையை *அல்லது* தண்டனையை *அல்லது* உத்தரவை] எதிர்த்து மேல்முறையீடு செய்கிறார் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

20 -ம் நாளன்று தேதியிடப்பட்டது.

*(கையொப்பம்)*
*மேல்முறையீட்டாளர்*

மேல் குறிப்பிடப்பட்ட மேல்முறையீட்டாளரிடம் சார்வு செய்யப்படும் முகவரி:

## தற்காப்பு தரப்பு வழக்கு தொகுப்பு மாதிரி

**சிங்கப்பூர் குடியரசின் அரசு நீதிமன்றங்களில்**

DAC– 9xxxxxx-20xx

**அரசு தரப்பு வழக்கறிஞர்**

எதிர்

**ஜான் டோ**

**தற்காப்பு தரப்பு வழக்கு தொகுப்பு**

**A. தண்டனை சட்டம், பிரிவு 323-ன் கீழ் உள்ள குற்றச்சாட்டுக்குக் குற்றஞ்சாட்டப்பட்டவரின் தற்காப்பு வாதம்**

1. பாதிக்கப்பட்டவரை அடித்ததாகக் கூறப்படுவதைக் குற்றஞ்சாட்டப்பட்டவர் மறுக்கிறார். பாதிக்கப்பட்டவர்தான் முதலில் அவரை நேருக்கு நேர் எதிர்கொண்டார் மற்றும் தாக்கினார். இதன் காரணமாக, தன் சுய தற்காப்புக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டவர் அவரைத் தள்ளிவிட நேர்ந்தது. ஆகவே, பாதிக்கப்பட்டவருக்கு ஏற்பட்டதாகக் கூறப்படும் ஏதேனும் காயங்கள், அவரது சொந்தச் செயல்களினாலேயே ஏற்பட்டதாகும்.

**B. தற்காப்பு தரப்பின் சாட்சிகளின் பெயர் பட்டியல்**

2. குற்றஞ்சாட்டப்பட்டவர், ஜான் டோ.

3. திரு ABC, சம்பவம் நடந்த இடத்தில் இருந்த ஒரு சுயேட்சை சாட்சி.

4. திரு EFG, பாதிக்கப்பட்டவருக்கு ஏற்பட்டதாக கூறப்படும் காயங்களை எதிர்க்க வரும் மருத்துவ நிபுணத்துவ சாட்சி.

**C. வழக்கு விசாரணையின்போது அனுமதிக்கப்படவேண்டிய சான்றுகளின் பட்டியல்**

5. ஒரு நிபுணத்துவ மருத்துவ அறிக்கை.

6. சம்பவத்தின் கண்காணிப்பு கேமரா CCTV பதிவு.

## தற்காப்பு தரப்பு வழக்கு தொகுப்பு மாதிரி

**D. அரசு தரப்பின் வழக்குடன் தொடர்புடைய ஏதேனும் நடந்த அல்லது இருப்பதாக அறியப்பட்ட உண்மை அல்லது சட்டத்தைக் குறித்த வாதங்களுக்கெதிரான எதிர்ப்புகள்**

7. அரசு தரப்பு வழக்கில் ஏதேனும் நடந்த அல்லது இருப்பதாக அறியப்பட்ட உண்மை அல்லது சட்டத்தைக் குறித்த வாதங்களுக்கெதிரான எதிர்ப்புகள் பின்வருமாறு:-

(a) XXX

(b) YYY

(c) ZZZ...

**செப்டெம்பர் 20XX X-ம் நாள் தேதியிடப்பட்டது**

(கையொப்பமிடப்பட்டது)

ஜான் டோ

*பொறுப்புத் துறப்பு அறிவிக்கை: இந்த வெளியீடு பொதுவான தகவல் வழங்கும் நோக்கத்துடன் மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளதேயன்றி, சட்ட ஆலோசனைக்கு மாற்றாக அல்ல. உங்களின் வழக்கு குறித்து சட்ட ஆலோசனை தேவைப்பட்டால் ஒரு வழக்கறிஞரைக் கலந்தாலோசிக்க வேண்டும். இந்த வெளியீட்டின் பொருளடக்கத்திலிருந்து மற்றும் அதன் தொடர்பாக எழும் ஏதேனும் மற்றும் எல்லாப் பொறுப்புகளிலிருந்தும் அரசு நீதிமன்றங்கள் மறுப்புரிமை பெற்றுள்ளன.*

எல்லாத் தகவல்களும் 1 **அக்டோபர்** 2020 தேதிப்படி சரியானவை.

STATE COURTS SINGAPORE

1 Havelock Square
Singapore 059724
Tel: 6 JUSTICE (65878423)
www.judiciary.gov.sg

COMMUNITY JUSTICE CENTRE

Basement 1
1 Havelock Square
Singapore 059724
Tel: 65574100
www.cjc.org.sg